Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 பங்குனி 06 வெள்ளிக்கிழமை (20.03.2015) பக்கங்கள் 20 ஓசை – 171

# நாசவேலை

## மாணவர்களை இலக்கு வைத்து





ஏழாலை ஸ்ரீமுருகன் மகா வித்தியாலய மாணவர்கள் குடிதண்ணீருக்காகப் பயன்படுத்தும் நீர்த் தாங்கியில் விஷம் கலந்தமையால் நேற்றுக் காலையில் குடிதண்ணீர் அருந்திய 27 மாணவர்கள் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். காலையில் பாடசாலையில் காலைப்பிரார்த்தனை நிறைவடைந்ததைத் தொடர்ந்து வகுப்புக்குச் செல்லும் வேளையில் மாணவர்கள் சிலர் நீர்த்தாங்கி வைக்கப்பட்டுள்ள இடத்துக்குச் சென்று நீர் அருந்தியுள்ளார்கள். இந்த நேரத்தில் நீர் அருந்தச் சென்ற பாடசாலையின் சிரேஷ்ட மாணவத் தலைவன் நீரைக் குடிக்க முற்பட்ட வேளையில் நீரில் துர்நாற்றம் வீசுவதை உணர்ந்து உடனடியாக ஏனைய மாணவர்களை நீரைக் குடிக்க விடாது தடுத்ததுடன், அதிபரின் கவனத்திற்குக் கொண்டு சென்றுள்ளார்.

அதிபர் உடனடியாக வந்து நீர்த் தாங்கியின் மூடியை சிரேஷ்ட மாணவர்களின் உதவியுடன் திறந்து பார்த்த வேளையில் தாங்கியிலுள்ள நீரில் இருந்து துர்நாற்றம் வீசியதுடன் நீரும் மாசடைந்த நிலையில் காணப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து நீர்த்தாங்கியின் உள்ளே அவதானித்தபோது நஞ்சுப் போத்தல் தாங்கியின் அடியில் கிடப்பதை கண்டு பிடித்துள்ளார்கள். இதனைக் கேள்விப்பட்ட பெற்றோர்கள், நலன்

(19) ஆம் பக்கம் பார்க்க

### இது தான் அந்த நஞ்சுப்போத்தல்




## ஊர் திரண்டு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை ஸ்ரீமுருகன் பாடசாலை மாணவர்கள் குடிதண்ணீருக் காகப் பயன்படுத்தப்படும் நீர் தாங்கியில் விஷம் கலக்கப்பட்டமையைக் கண்டித்து நேற்று நண்பகல் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் இணைந்து பாடசாலை முன்றலில் வீதி மறிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

“மாணவர்களின் பாதுகாப்புக்கு யார் பொறுப்பு”, “சுன்னாகம் பொலிஸாரே உடனடியாக குற்றவாளியை கைது செய்யுங்கள்” போன்ற கோஷங்களை எழுப்பி வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். இதன் காரணமாக சிறிதுநேரம் வீதிப் போக்குவரத்து தடைப்பட்டது.

இதேவேளை, வலிகாமம் தெற்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஏழாலை, மயிலங்காடு ஸ்ரீமுருகன் வித்தியாசாலையின் குடிதண்ணீர் தாங்கிக்குள் விஷமிகளால் நச்சுப் போத்தல் போடப்பட்டுள்ள செயலை வலி.தெற்குப் பிரதேசசபை தலைவர் தி.பிரகாஸ் கண்டித்துள்ளார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் யாராக இருந்தாலும் உடன் கண்டறியப்பட்டு சட்டத்தின்முன் நிறுத்தப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## யாழ். இந்து மாணவன் திடீர் மரணம்

(யாழ்ப்பாணம்)

திடீரென ஏற்பட்ட வலி நோயினால் பாதிக்கப்பட்ட யாழ். இந்துக் கல்லூரி மாணவன் ஒருவன் நேற்று அதிகாலை பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

தொல்புரம் கிழக்கு சுழிபுரத்தைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி சிவகஜன் (வயது-11) கடந்த புலமைப்பரிசில் பரீட்சையில் 165 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த பிரஸ்தாப மாணவன் யாழ். இந்துக்கல்லூரியில் 6ஆம் தரத்தில் கல்வி கற்றுவரும் நிலையில் கடந்த வாரம் வலியினால் பீடிக்கப்பட்டு யாழ். போதனாவில் சிகிச்சை பெற்று வீடுதிரும்பியுள்ள நிலையில் நேற்று அதிகாலை திடீரென ஏற்பட்ட வலியால் உயிரிழந்துள்ளதாக உறவினர்கள் விசாரணையின் போது தெரிவித்துள்ளனர். இம் மரணம்

(19) ஆம் பக்கம் பார்க்க

## விபத்தில் சிக்கி முதியவர் பலி

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டிப்போ சந்தி கனகபுரம் வீதியில் இடம்பெற்ற விபத்தில், கிளிநொச்சி ஆனந்தநகரைச்சேர்ந்த 75வயதான அப்பன் நல்லதம்பி என்பவர் மரணமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கனகபுரத்தை நோக்கிப் பயணித்த துவிச்சக்கரவண்டியும் டிப்போ சந்தியை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

நேற்று முன்தினம் இரவு 9.35 மணியளவில் இடம்பெற்ற இந்தவிபத்தில் காயமடைந்த இருவரும் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## மைத்திரி யாழ். வருகிறார்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோர் எதிர்வரும் 23ஆம் திகதி வடக்கிற்கு விஜயம் செய்யவுள்ளனர்.25 வருடங்களின் பின்னர் பொது மக்கள் பார்வையிட அனுமதிக்கப்பட்ட வளலாய் பகுதியை உத்தியோகபூர்வமாக அவர்களிடம் கையளிக்கும் நிகழ்வில் இவர்கள் பங்கேற்கவுள்ளனர்.

இந்நிகழ்வின் போது அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழில் தேசிய கீதம் கிளம்புகிறது எதிர்ப்பு

தேசிய கீதத்தை தமிழ் மொழியில் பாடுவதை எதிர்ப்பதாக பிவித்துரு ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

தேசிய கீதத்தை தமிழ் மொழியில் பாட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அனுமதி வழங்கியிருப்பது இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தின் 7ஆவது ஷரத்துக்கு அமைய எதிரானதாகும் எனவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கம்மன்பில இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் தேசிய கீதம் ஸ்ரீலங்கா மாதா என்பதாகும்.தேசிய கீதத்தின் மெட்டு மற்றும் இசை என்பன மூன்றாவது உப தலைப்புக்களில் தரப்பட்டுள்ளன என இலங்கையின் அரசியலமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

இலங்கையின் தற்போதைய அரசியலமைப்புச் சட்டமான இலங்கை ஜனநாயக சோசலிசக்

(19) ஆம் பக்கம் பார்க்க

## இது அநாகரிகச் செயல்

ஏழாலை சிறிமுருகன் வித்தியாசாலையைச் சேர்ந்த 27 மாணவர்கள் பாடசாலை நீர்த்தாங்கியிலிருந்த விஷம் கலந்த குடிநீரை பருகியதால் சுவாச நோய்களுக்குள்ளான நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

இது திட்டமிட்டவகையில் செய்யப்பட்ட நாசகார செயற்பாடுகளாகவே நோக்கவேண்டியுள்ளதாக பாடசாலை சமூகமும் பொது மக்களும் தெரிவித்துள்ளனர்.

பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து செய்யப்பட்ட இத்தகைய செயற்பாடுகளுக்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாம் வன்மையான கண்டனங்களை தெரிவித்துக்கொள்கின்றோம். இந்த செயற்பாடுகளையார் செய்தாலும் அவர்கள் வெளிச்சத்திற்கு கொண்டுவரப்பட்டு சட்டத்தின் மூலம் தண்டிக்கப்பட வேண்டும் என கட்சியின் யாழ்.மாவட்ட ஒருங்

(19) ஆம் பக்கம் பார்க்க

# சட்ட திட்டங்களுக்கு மதிப்பளித்து சிறுபோக நெற்செய்கையில் ஈடுபடவும்

## கரைச்சிப் பிரதேச செயலர் அறிவுறுத்து



சிறுபோக நெற்செய்கையில் விவசாயிகள் சட்டதிட்டங்களை நன்கு மதித்து செயற்படவேண்டுமென கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் கோபாலப்பிள்ளை நாகேஸ்வரன் தெரிவித்தார்.

வன்னேரிக்குளத்தில் நடைபெற்ற சிறுபோக நெற்செய்கைக் கூட்டத்தில் தலைமையுரை ஆற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் விவசாயிகள் ஒற்றுமையாக பயிர்ச் செய்கையில் ஈடுபடவேண்டும். விவசாயத்திலுள்ள சட்டதிட்டங்களை மதித்து விவசாயத்தில் ஈடுபடும்போதுதான் சிறந்த பயன்களைப் பெற்றுக்கொள்ளமுடியுமெனவும் தெரிவித்தார். இக்கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் நவரத்தினம் சுதாகரன், கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன், கரைச்சி பிரதேச செயலக திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் ச.பி.அமல்ராஜ் உட்பட பெருமளவு விவசாயிகள் கலந்துகொண்டனர். வன்னேரிக்குளத்தின் கீழ் இவ்வாண்டு 125 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. (160)

# சிறுவர் மனவிருத்தி பாடசாலையின் 11ஆம் ஆண்டு நிறைவு விழா

(திருநெல்வேலி)

கோண்டாவில் சிவபூமி சிறுவர் மனவிருந்திப் பாடசாலையின் 11ஆவதுஆண்டு நிறைவு விழாவும் புதிய மண்டபத் திறப்பு விழாவும் நாளை சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக அமெரிக்காவைச் சேர்ந்த வைத்திய நிபுணர் கனகசபை தேவகாந்தன் தம்பதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஆசியுரைகளை நல்லை ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாச்சார்ய சுவாமிகளும், ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளும் வழங்கவுள்ளனர். வாழ்த்துரைகளை நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப. வசந்தகுமாரும், கிழக்கு மாகாண முன்னாள் பிரதம செயலர் பீ. பாலசிங்கமும் வழங்கவுள்ளனர் சிறப்புரையை அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன் ஆற்றுவார். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. கோண்டாவில் அரசடி விநாயகர் ஆலயத்தில் வழிபாடு முடித்து விருந்தினர்கள் அனைவரும் அங்கிருந்து மங்கள வாத்திய சகிதம் அழைத்துவரப்படுவர். தனலட்சுமி தேவகாந்தன் மண்டபத்தை பிரதம விருந்தினர் தம்பதிகள் திறந்து வைப்பர். (137)

# அகில இலங்கை இந்து மாமன்ற நூல் வெளியீட்டு விழா

(திருநெல்வேலி)

இலங்கையின் சைவத் தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சியில் தெய்வத் திருமகள் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் வகிபாகம் என்னும் தலைப்பிலான நூல் வெளியீடு இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணியளவில் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சீ.யோகேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார். ஆசியுரைகளை நல்லூர் ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், ஹலாய் ஆதின குரு ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள், தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானப் பிரமத குரு சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக் குருக்கள் ஆகியோர் வழங்கவுள்ளனர். அறிமுகவுரையை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் பேராசிரிய்ர் மா. வேதநாதனும், நூல் சமர்ப்பண உரையை நூலாசிரியர் தி. செல்வ மனோகரனும், வெளியீட்டுரையை அரசரட்ணமும், ஆய்வுரையைப் பேராசிரியர் நா. சண்முகலிங்கனும் நிகழ்த்தவுள்ளனர். பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் நூலை வெளியிட்டு வைப்பார். செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் நிறைவுரை ஆற்றுவார்.

இந்நூல் வெளியீடு அகில இலங்கை இந்து மாமன்றத்தின் வைர விழா நிகழ்வுகளின் ஓர் அங்கமாகும். யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறையின் வழிகாட்டலில் மாமன்றத்தின் இந்து ஆராய்ச்சி நிலையத்தின் வெளியீடு என்பது குறிப்பிடத்தக்கது.(137)

## DD TV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | வெள்ளிக்கிழமை |
|---|---|
| Am 05.00 | ஆலய தரிசனம், பக்திப் பாடல்கள் |
| Am 07.00 | கலைக்கதிர் |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | SMS Time |
| Am 9.55 | காலை செய்திகள் |
| Am 10.00 | Hello DD |
| Am 10.30 | IT.Com |
| Am 11.00 | சிரிக்க சிரிக்க |
| PM 12.00 | வாழும் கலைஞர்கள் |
| PM 01.00 | மதியச் செய்திகள் |
| PM 01.30 | சுப்பர் திரைப்படம் |
| PM 03.55 | மாலைச் செய்திகள் |
| PM 04.30 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | வரலாற்று நாயகர்கள் |
| PM 07.30 | தமிழ் பேசும் தமிழா |
| PM 08.00 | பிரதான செய்திகள் |
| PM 08.30 | Hello DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

# கரைதுறைப்பற்றில் பண்பாட்டு விழா





(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கரைதுறைப் பற்று பிரதேச செயலகத்தின் பண்பாட்டுவிழா நிகழ்வுகள் நேற்று முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி வளாகத்தில் இடம் பெற்றது.

மாலை 4.00 மணிக்கு பண்பாட்டு ஊர்வலம் ஆரம்பிக்கப்பட்டு ஊர்வலம் வித்தியானந்தாக்கல்லூரியை வந்தடைந்ததும் கல்லூரி திறந்தவெளியரங்கில் பிரதேசசெயலாளர் ரி. தினேஸ்குமார் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன இங்கு கலைஞர்கள் கௌரவிப்பும் சிலம்போசை நூல்வெளியீட்டு நிகழ்வும் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன இந்நிகழ்வில் மாவட்ட செயலர், பிரதேச செயலாளர்கள், அரசஅதிகாரிகள், கலைஞர்கள், மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (160)

# ஏழாலை அமெரிக்க மிஷன் பாடசாலையில் வருடாந்த பரிசளிப்பு விழா

(ஏழாலை)

யாழ்.ஏழாலை தெற்கு அமெரிக்க மிசன் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழா கடந்த புதன் கிழமை பிற்பகல் 2 மணி முதல் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அதிபர் நடராஜா நரேந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் இலண்டன் பழைய மாணவர் அமைப்பைச் சேர்ந்த சிவலிங்கம் சிவகாந்தன் பிரதம விருந்தினராகவும்,உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் தில்லைநாதன் தர்மலிங்கம் சிறப்பு விருந்தினராகவும்,ஏழாலை தெற்கு அமெரிக்கன் சிலோன் மிஷன் சபைக்குரு வண.ஜி.டி.மைனசீலன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

குறித்த பரிசளிப்பு நிகழ்வில் கடந்த 2014 ஆம் ஆண்டில் 168 புள்ளிகள் பெற்றுப் பாடசாலைச் சமூகத்துக்குப் பெருமை சேர்த்த மாணவி செல்வி.சுயானி சுதாகரன் பாடசாலையின் அதிபர் நடராஜா நரேந்திரனால் பதக்கம் அணிவித்துக் கௌரவிக்கப்பட்டதுடன், பிரதம விருந்தினர் சிவலிங்கம் சிவகாந்தனால் சிறப்புப் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப் பட்டார்.

அதனைத் தொடர்ந்து புலமைப் பரிசில் பரீட்சையில் நூறு புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் ஊக்குவிப்புப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப் பட்டனர். அதனைத் தொடர்ந்து சின்னஞ் சிறார்களின் தனிநடனம், குழுநடனம்,கிராமிய நடனம், ஆங்கில அபிநய நடனம் போன்ற பல்வேறு கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (48)

## கூட்டம்

(கோப்பாய்)

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச சிவில் பாதுகாப்பு குழுக் கூட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கோப்பாய் செயலக மநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் ம. பிரதீபன் தலைமையில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் வழமை போல கலந்து கொள்ளும் உறுப்பினர்களை கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (08)

## குரு பூசை

(வடமராட்சி)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரமத்தின் சைவ கலைப் பண்பாட்டுப் பேரவையால் முருகேசு சுவாமிகளின் குருபூசை நிகழ்வு எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் ஞானசுடர் சஞ்சிகையின் வெளியீட்டு நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (116)

## கட்டடத் திறப்பு விழா

கிளிநொச்சியை தலைமை அலுவலகமாகக் கொண்டு இயங்கும் மனிதாபிமான புனர்வாழ்வு செயற்பாடுகளுக்கான தேசிய சங்கத்தின் புதிய அலுவலக கட்டட திறப்பு விழா எதிர் வரும் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (90)

## மஹாகும்பாபிசேகம்

(அச்சுவேலி)

தர்வளை இயற்றாலை கொடிகாமம் ஸ்ரீ மதுரை மீனாட்சி அம்மன், ஸ்ரீ மதுரை வீரன் திருக்கோயில் புனராவர்த்தன நூதன பிரதிஸ்டா மஹாயாக சம்புரோஷண அஷ்டபந்தன மஹாகும்பாபிசேக விஞ்ஞாபனம் எதிர் வரும் 25 ஆம் திகதி புதன் கிழமை காலை விஷேட ஆராதனை வழிபாடுகளைத் தொடர்ந்து 09.23 - 11.08 வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் நடைபெறவுள்ளது.

மஹாகும்பாபிசேக கிரியைகளின் வரிசையில் வருகின்ற 23 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 06.00 மணிமுதல் கர்மாரம்பம், விநாயகர் வழிபாடு, அனுஞ்ஞை உள்ளிட்ட முக்கிய கிரியைகளும் எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வுகளும், 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 07.00 மணி தொடக்கம் விநாயகர வழிபாடு, விம்பசுத்தி, நியாசம் உள்ளிட்ட கிரியைகளும், நடைபெறவுள்ளன. (03)


## பெயர் மாற்றம்

தும்பளை கிழக்கில் வசிக்கும் மகேந்திரன் ரஜனி ஆகிய நான் எனது பெயரை மகேந்திரன் வினோத் என மாற்றம் செய்வதோடு இன்றிலிருந்து எல்லா ஆவணங்களிலும் மகேந்திரன் வினோத் என்று பயன்படுத்துவேன் என சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

(C/3837) மகேந்திரன் வினோத்

# அக்கராயன் குளத்தை புனரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

## பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் தெரிவிப்பு



கிளிநொச்சியில் இரணைமடுக் குளத்திற்கு அடுத்ததான பெரிய குளமாகிய அக்கராயன்குளம் எதிர் காலத்தில் முழுமையாகப் புனரமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுமென கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் நவரத்தினம் சுதாகரன் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை அக்கராயனில் நடைபெற்ற சிறுபோக நெற்செய்கைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

அக்கராயன்குளத்தின் அபிவிருத்தி என்பது பெரும் இலக்காகவுள்ளது. எமது மாவட்டத்திலேயே இரண்டாவது பெரிய குளமாக இக்குளம் இருக்கின்றது. மீள்குடியேற்றம் நடைபெறுவதற்கு முன்னரே குளத்தின் புனரமைப்புப் பணிகளை தொடங்கிவிட்டோம். குளத்தின் அணைக்கட்டினையும் வான்பகுதியினையும் புனரமைத்துள்ளோம். விவசாயிகளைப் பொறுத்தவரையில் வாய்க்கால்களே முக்கிய மானதாகவிருக்கும் ஆனால் எங்களைப் பொறுத்தவரையில் அணைக் கட்டுதான் முக்கியமானதாகும். அக்கராயன் ஆற்றுப் படுக்கையில் இருக்கின்ற குட முருட்டிக் குளம் உருவாக்கும் வரை இக்குளமே இருந்தது.

தற்போது குடமுருட்டிக் குளத்தினையும் உருவாக்கியுள்ளோம். அக்கராயன்குளத்தின் பெருமளவு நீர் கடலினைச் சென்றடைகின்றது. இந்நிலையில் அக்கராயன் குளத்தினை மேலும் அபிவிருத்தி செய்ய எண்ணியுள்ளோம்.

இக்குளத்தின் கீழுள்ள 3,400 ஏக்கர் முழுமையாகப் பயன்படுத்தப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் கோபாலப்பிள்ளை நாகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்ட விவசாயப் பணிப்பாளர் அசெல்வராஜா உட்பட பலர் கலந்துகொண்டனர். இக் கூட்டத்தில் அக்கராயன் குளத்தின் கீழ் இவ்வாண்டு 2,500 ஏக்கர் நிலப் பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற் கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (160)

# மாற்றுத்திறனாளிகளுக்கான கொடுப்பனவைப்பெற 23 பேருக்கு மட்டுமே அனுமதி கிடைத்துள்ளது

## வலி.தென்மேற்கு சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவிப்பு

வலி.தென்மேற்கில் மாற்றுத்திறனாளிகளுக்கான கொடுப்பனவு நிவாரணத்தை பெறுவதற்கு 619 பேர் முறையாக விண்ணப்பித்துள்ளனர். ஆனால் 23 பேருக்கு மட்டுமே 3000 ரூபா கொடுப்பனவுக்கான அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. இவ்வாறு பிரதம அதிதியாக கலந்து கொண்ட வலி.தென்மேற்கு சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.தர்மினி றஜீபன் தெரிவித்தார்.

நவாலி தெற்கு முதியோர் சங்க வருடாந்த பொது கூட்டமும் அபிவிருத்திக் கூட்டமும் நவாலி ஹேமலதா ஞாபகார்த்த சனசமூகநிலையத்தில் இடம்பெற்றது. சங்கத் தலைவர் சி.தேவராசா தலைமையில் இடம்பெற்ற அபிவிருத்தி கூட்டத்தில் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.தர்மினி றஜீபன் மேலும் தெரிவித்ததாவது,

வலி.தென் மேற்கில் செயற்படும் முதியோர் சங்கங்களில் நவாலி தெற்கு முதியோர் சங்கமும் பிரத்தியேகமாக செயற்படுகின்றது. இச்சங்கம் ஏனைய முதியோர் சங்கங்களுக்கு நிகராக பிரத்தியேகமாக செயற்படுகின்றது.


முதியோர் சங்கத்திற்காக கடந்த வருடம் இடம்பெற்ற பிரதேச மட்ட விளையாட்டு போட்டிகளில் நவாலி தெற்கு முதியோர் சங்கம் முதன்மையானதாக செயற்பட்டு பல பரிசில்களையும், சான்றிதழ்களையும் பெற்றுச் சென்றது. வலி.தென்மேற்கில் 70 வயதிற்கு மேற்பட்டோர் வகுதியில் 2000 ரூபா கொடுப்பனவை 1448 பேர் பெறுகின்றனர். மேலும் எமது செயலகத்திற்கு ஊடாக 25,000 ரூபா பெறுமதியான கண் வில்லைகளை (கற்றாக்) முதியோர் தேசிய செயலகத்திற்கு ஊடாக பெற்று வழங்கும் செயற்றிட்டம் இடம்பெற்று வருகின்றது.

எனவே முதியோர் சங்கம் மேலும் தனது உறுப்பினர்களுக்கான சேவைகளை, நலத்திட்டங்களை எமது செயலகம் ஊடாக இணைந்த வகையில் முன்னெடுக்கலாம் என்றார். இந் நிகழ்வில் மானிப்பாய் அரச வைத்திய அதிகாரி பணிமனையை சேர்ந்த சிரேஷ்ட பொது சுகாதார பரிசோதகர் என்.பரமேஷ் வரன், கிராம அலுவலர் புநிருபன், செயலாளர் பொ.ஆனந்தநடராசா, வலி.தென் மேற்கு முதியோர் சமாச தலைவர் ச.சர்வானந்தா, ஹேமலதா ஞாபகார்த்த நிதிய தலைவர் செ.ரமேஷ், பொருளாளர் வ.க.இராசதுரை ஆகியோர் கலந்து கொண்டனர். (92)

# நூலக வளாகம் திறப்பு

கரைச்சி பிரதேச சபையின் நூலக வளாகம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்குதிறந்து வைக்கப்படவுள்ளது.

கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் நா.வை.குகராசா தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (90)




## உண்மை சொன்ன முதலமைச்சர்



கடந்த சில வாரங்களுக்கு முன் கிளிநொச்சித் தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் திருக்குறள் மாநாடு நடந்தது. அந்த மாநாட்டுக்கு வழமைக்கு மாறாக பிரதம விருந்தினராக ஒரு அரசியல் பிரமுகர் அழைக்கப்பட்டிருந்தார். அப்படி அழைக்கப்பட்டவர் வடக்கு மாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரன். மகிழ்ச்சிகரமாக விழா நடந்து கொண்டிருந்தது. நிகழ்வில் பிரதம விருந்தினர் உரையாற்ற வேண்டும். அவரும் நல்லதொரு உரையை ஆற்றினார். அந்த உரையில் அவர் சொன்ன முக்கியமான விசயம் என்ன தெரி யுமா?

"அரசியல் என்றால் பொய் சொல்ல வேண்டும். பொய்சொல்ல முடியாமல் அரசியலைச் செய்ய முடியாது. இதைப்பற்றி தம்பி சிறிதரன் எம்பியைக் கேட்டால் அவர் சொல்வார்...." என்று திருவாய் மலர்ந்தருளினார் விக்கி.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த தமிழ்ச்சங்கத்தினருக்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களுக்கும் அதிர்ச்சியோ அதிர்ச்சி.

படித்த மனிதர். பொய்ச்சாட்சிகளை தண்டிக்கும் வகையில் நீதி வழங்கும் பிரதம நீதியரசர். ஆன்மீகவாதி. வயதால் மூத்தவர். பல லட்சக்கணக்கான மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர் இப்படி வாயிலே மண்ணை அள்ளிப் போடுகிறாரே என்ற கவலைப்பட்டனர் அங்கே இருந்தவர்கள்.

ஆனால், அவர் பல இடங்களில் பொய் சொன்னாலும் அந்த நிகழ்ச்சியில் சொன்னது உண்மை. அதாவது தானும் தன்னுடைய தரப்பும் பொய்சொல்லியே அரசியலைச் செய்து கொண்டிருக்கிறோம் என்ற உண்மையை விக்கியர் சொல்லியிருக்கிறார்.

"தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின் தன் நெஞ்சே தன்னைச் சுடும்"

வள்ளுவர் விழா அல்லவா. அதில் எப்படிப் பொய் சொல்ல முடியும் என்று முதல்மைச்சர் சிந்தித்தார் போலும்.

சபாஷ் விக்கியர்.

பாவம், வள்ளுவரும் தமிழ்ச்சங்கத்தினரும்தான் பரிதாபத்திற்குரியவர்கள்.

ஹி..ஹி...ஹி...

## எல்லாமே அரசியல் ஆதாயத்துக்காகத்தான்




வடக்கு மாகாணசபை உறுப்பினர்களின் அக்கப்போரைப் பற்றி அறிய வேண்டுமா?

வாருங்கள் மாகாணசபையின் அமர்வுக்கு. அல்லது, மாகாணசபை அமர்வின்போது அவர்கள் உணவு மற்றும் சிற்றுண்டி அருந்தும் இடங்களுக்கு.

உள் குத்து, வெளிக்குத்து, முகக்குத்து, முதுகில் குத்து, வயிற்றுக் குத்து, கண் குத்து என்று எல்லாக் குத்துகளும் தாராளமாக அரங்கேறும் களம் அது.

ஆனால், என்னதான் குத்துகளை ஆளுக்கு ஆள் மாறி மாறிக் குத்தினாலும் ஒருவருக்கு ஒருவர் மரணக்குழி, பதுங்குகுழி, புதைகுழி என்று ஆயிரம் குழிகளைப் பறித்தாலும் தேர்தல் என்று வந்து விட்டால் ஆளையாள் கட்டித்தழுவி ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று ஆகி விடுவார்கள்.

எல்லாம் அரசியல் ஆதாயத்துக்காகத்தான்.

## களையெடுப்பும் வலை வீச்சும்



சில நாட்களுக்கு முன்பு வன்னிப்பிரதேசத்தில் கற்பித்துக்கொண்டிருக்கும் ஆசிரியர் அணி ஒன்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சரின் அலுவலத்தைச் சுற்றி வளைத்து, அமைச்சர் குருகுலராஜாவைத் தடுத்து வைத்தது அல்லவா.

அந்த அணியிரின் அந்தச் செயலுக்குப் பின்னணியாக இருந்தது யார்? ஆசிரியர்களின் அந்தப் போராட்டத்தில் முன்னணி வகித்தது யார்? என்று ஒரு புலனாய்வு நடவடிக்கையை முடுக்கி விட்டிருக்கிறார்கள் கல்வி அமைச்சருக்கு விசுவாசியான இரண்டு உத்தியோகத்தர்கள். இப்படிப் புலனாய்வு நடவடிக்கையில் இறங்கியவர்களில் ஒருவர் வன்னியில் முன்னர் இருந்த தரப்போடு புலனாய்வுப் பணியில் கொஞ்சம் பட்டும் படாமலும் கலந்து கொண்டவர். அந்த அனுபவத்தை வைத்துக் கொண்டு களமாடத் தொடங்கியிருக்கிறார்.

இதன்படி இவர்கள் இருவரும் இப்பொழுது சம்பந்தப்பட்ட போராட்டக்காரருடன் நட்பாகப் பழகி, ஊடுருவி, முன்னணிச் செயற்பாட்டுக்காரரைக் களையெடுப்பதற்கான முயற்சியில் இறங்கியிருக்கிறார்கள். இதற்கேற்ற மாதிரி முதற்கட்டமாக "அமைச்சர் உங்களுடைய பிரச்சினையை உணர்வுபுர்வமாக விளங்கி வைத்திருக்கிறார். உங்களுடைய உணர்வுகளை அமைச்சர் மதிக்கிறார். நீங்கள் எப்பவும் அமைச்சருடன் எந்தப் பிரச்சினையைப் பற்றியும் கதைக்கலாம். அதற்கு நாங்கள் ஏற்பாடு செய்கிறோம்" என்றெல்லாம் இனிப்புத்தடவும் கதை களைக் கதைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

நல்லாயத்தானிருக்கிறது இந்த வலை வீச்சு.

இப்படி களையெடுப்பையும் வலை வீச்சையும் செய்யிறதை விட்டுவிட்டு உரிய முறையில் நிர்வாகத்தை நடத்துங்கள். நியாயமாக நடக்க முன்வாருங்கள். அப்படிச் செய்தால் யாரும் பாதிக்கப்பட மாட்டார்கள்.

ஆட்சி என்பது நல்லவற்றைச் சரியாகத் துணிச்சலாகச் செய்வதில்தான் மாண்படைகிறது.

புகழ்தான் நம்மைத் தேடி வர வேண்டும் நாம் அதைத் தேடிப் போகக்கூடாது. - எம்.ஜி.ஆர்.

தினப்பதிப்பு தினமுரசு THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## கனவுக்கு வெளியே வருக!

மோடியின் வடக்கு வருகைக்காக நம்மவர்கள் ஆடிய கூத்து வடமோடிக் கூத்து என்றால், தெற்கில் அவராகவே ஆடிக் காட்டிவிட்டுப் போயிருப்பது தென்மோடிக் கூத்து என்றார் நண்பரொருவர்.

இருந்தாலும், இரண்டு கூத்துக்களிலும் பாடல்களும் அடவுகளும் ஏறத்தாழ ஒரேமாதிரியேதான் இருந்தது என்றும் சொன்னார். "புதிய அரசாங்கத்திடமும் பழைய ஆட்டங்களையே போட்டுக் கொண்டிராதீர்கள். அவசரப்படாமல் பொறுமை பேணுங்கள்" என்னும் நீதி வடமோடிக் கூத்தின் இறுதியில் உணர்த்தப்பட்டது.

"எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சீனாவின் பக்கம் இலங்கை சாய்வதை நான் ரசித்துக் கொண்டிருக்க மாட்டேன்" என்ற அழுத்தமான நீதியுரைப்பு தென்மோடிக் கூத்தில் நளினமான அடவுகளுடன் உணர்த்தப்பட்டது.

13வது திருத்தத்தைத் தவிர வேறெந்த தன்னாட்சி தனியலகு ஜல்லியடிப்புகளுக்கும் எந்தவொரு வெளிநாடும் செவிகொடாது என்பதைப் பெரியண்ணன் தெளிவாக உரைத்துவிட்டுச் சென்றிருக்கிறார்.

இதன்பிறகும், எதுவும் நடக்காததுபோல், சிங்கள அரசை மடக்குவதற்கான திட்டங்களை நகர்த்திக் கொண்டிருக்கிறோம் என்று காண்பித்துக் கொள்வதில்தான் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் மகாநடிப்பு எல்லா கூத்துகளையும் விஞ்சி நிற்கிறது.

தமிழ் மக்களும் "நம்ம 'தலைகள்' அப்புக்காத்து மூளையை அலசி சிங்களவனுக்குப் பேதி குடுத்தபடி தானிருப்பார்கள்" என்ற எதிர்பார்ப்பிலேயே எல்லா வாழ்வுக் கஷ்டங்களையும் மறந்துவிட்டு தமிழ்ப் பத்திரிகைகள் காட்டும் கனவுலகில் 'வாழ்ந்து' கொண்டிருக்கிறார்கள்.

"13வது திருத்தத்தை நாங்கள் கருத்திலே கூட எடுக்க மாட்டோம்" என்று மாவையிலிருந்து மாகாண சபைக்கு நேற்றுத் தெரிவான கடைக்கொழுந்து வரை முழங்குவதை "அடடா தமிழ்வீரம்!" என்று கேட்டுப் புளகிக்கிறது தமிழ்ச்சனம்.

13 தவிர்ந்த வேறொரு தீர்வை யார் எடுத்துத் தருவார்கள் என்பதை யாரும் சொல்லாமலே, அதற்கேதும் வழி உண்டா என்றும் தெரியாமலே காத்திருக்கத் தயாராவதை என்ன சொல்ல?

13தான் தீர்வு என்று மோடி சொல்கிறார், அமெரிக்கப் பிரதிநிதி சொல்கிறார், ஆபிரிக்கப் பிரதிநிதி சொல்கிறார், ஐ.நாப் பிரதிநிதியும் சொல்கிறார்.... எதுவுமே கேட்காத மாதிரி, "தமிழொற்றுமையைக் காட்டினால் சர்வதேச அழுத்தம் வரும்; தீர்வு வரும்" என்று கண்ணை மூடி உச்சாடனம் செய்வதை நம்பும் ஒரு சமூகத்தை எப்படி அழைக்க?

இந்தக் கூத்துக்குள், தம்மைக் கொஞ்சம் அறிவாளிகளாக நினைத்துக் கொண்டிருப்போரின் காத்திருப்புக்கு அவர்கள் சொல்வது இன்னும் பெரியதொரு மந்திரவித்தைக் கதை!

என்றேனும் ஒருநாள் மூன்றாவது உலகப்போர் வந்துதானே ஆகவேண்டும். அப்போது இலங்கை அரசு எந்தக் கன்னையில் நிற்கிறதோ அதற்கு எதிர்க்கன்னை எங்களைத் தத்தெடுத்துத் தாலாட்டி, நாம் கேட்கும் தீர்வைப் பருக்கிவிடும் என்று, பிராந்திய உலக நாடுகளின் முரண்பாடுகளை கூர்மையாக அவதானித்து வருகிறார்களாம்!

அட அறுவாரே....அவர்களுக்குள் இனியொரு சண்டை மூண்டால் நாமும் அழிந்து போவோமே தவிர அரசியல் தீர்வையா எடுக்க முடியும்? அல்லது அமெரிக்க – சீன – இந்திய முரணை நமக்கான பேரம்பேசும் சக்தியாக மாற்றிக்கொள்ளப் பார்ப்பதற்கு, அவர்களுக்கு நாம் யார்?

நாடுகளுக்கிடையிலான பொருளாதாரப் போட்டியில், ஒரு குட்டிச் சிறுபான்மைச் சமூகம் பகடைக்காயாக உருட்டப்படலாமே தவிர, பலனைப் பெற்றுக்கொடுக்க யாரும் யோசிப்பார்களா என்ன?

- *ஆசிரியர்*

# நாடாளுமன்றத்தை ஏப்ரலில் கலைத்தால் மாற்று யோசனைகள் நடைமுறைக்கு வரும்

## ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி எச்சரிக்கை

நாடாளுமன்றத்தை ஏப்ரல் 23 ஆம் திகதியன்று ஆளும் கட்சி கலைக்குமாக இருந்தால் பெரும்பான்மை பலமுடையவர்களென்ற வகையில் நாம் மாற்று யோசனைகளை நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த அமரவீர நேற்று தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கு நாம் அஞ்சவில்லை. எனினும் புதிய தேர்தல் மறுசீரமைப்புக்கமைய நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்பதில் நாம் உறுதியாக இருக்கிறோமெனவும் அவர் கூறினார். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள 19 ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தத்தை நாம் எதிர்க்கவில்லை. எனினும் இதற்குள் உள்ளடங்கும் வகையில் தேர்தல் முறை மறுசீரமைப்பும் முன்னெடுக்கப்பட வேண்டுமென்பதே எமது விருப்பமென அமரவீர விளக்கமளித்தார்.

ஆளும் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் நூறு நாட்களுக்குள் அரசியலமைப்பு சீர்திருத்தம் மற்றும் தேர்தல் மறுசீரமைப்பு ஆகியன நிறைவேற்றப்பட்டதன் பின்னரே ஏப்ரல் 23 ஆம் திகதியன்று நாடாளுமன்றம் கலைக்கப்படுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

அனைத்து விடயங்களிலும் ஆர்வம் காட்டி வரும் ஆளும்கட்சி தேர்தல் முறை மறுசீரமைப்பினை மாத்திரம் இழுத்தடிக்கின்றது. அலட்சியமே அதற்கான காரணமெனவும் அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள 19 ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தத்தை நாம் வரவேற்கின்றோம். எனினும் தேர்தல் மறுசீரமைப்பு இல்லாத இந்த அரசியலமைப்பு சீர்திருத்தம் மக்களுக்கு பிரயோசனமற்றது. எனவே, இவை இரண்டும் ஒரேநேரத்தில் நாடாளுமன்றத்தில் சட்டமூலமாக்கப்படாமல் நாடாளுமன்றத்தை கலைக்க நாம் ஒருபோதும் இடமளியோமெனவும் அவர் கூறினார்.

## சரத் பொன்சேகாவுக்கு இராணுவ உயர் பதவி

முன்னாள் பாதுகாப்பு படைகளின் பிரதம அதிகாரியான சரத் பொன்சேகா, நாளை மறுதினம் முதல் பீல்ட் மார்ஷல் பதவி நிலைக்கு உயர்த்தப்படவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கான உத்தியோகபூர்வ வைபவம் நாளை மறுதினம் பிற்பகல் ஜனாதிபதி தலைமையில் நடைபெறவுள்ளது.

இலங்கை இராணுவத்தின் இந்த உயர்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள முதலாவது அதிகாரியாக சரத் பொன்சேகா திகழ்கின்றார். 1970 ஆம் ஆண்டில் கெடட் உத்தியோகத்தராக இராணுவத்தில் இணைந்துகொண்ட சரத் பொன்சேகா, 2009 ஆம் ஆண்டில் பாதுகாப்பு படைகளின் பிரதம அதிகாரியாக இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்றார்.

சுமார் 30 வருடகால யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட காலப்பகுதியில் இராணுவத் தளபதியாக சரத் பொன்சேகா கடமையாற்றியிருந்தார்.

ஒருபோதும் ஓய்வுபெறாத பதவிநிலையான பீல்ட் மார்ஷல் பதவியானது, அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சர் ஒருவருக்கு சமமானதாகும்.

நாடொன்றின் முப்படையில் உயரிய பதவியாக பீல்ட் மாரஷல் பதவி கருதப்படுகின்றது.

## ஏப்ரல் 7 இற்கு முன் சாதாரண தர முடிவுகள்

2014 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை முடிவுகள் அடுத்த மாத ஆரம்பத்தில் வெளியிடப்படும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி ஏப்ரல் மாதம் 7 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பரீட்சை முடிவுகளை வெளியிட எதிர்பார்த்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.என்.ஜே.புஸ்பகுமார குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வருடம் டிசம்பர் 9 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை க.பொ.த சாதாரண தரப் பரீட்சைகள் நடைபெற்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# இன்னும் இரண்டு மாதங்களில் மஹாபொல கொடுப்பனவு அதிகரிக்கும்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

2500 ரூபாவாக இருந்த மஹாபொல கொடுப்பனவு இன்னும் இரண்டு மாதங்களில் 5000 ரூபாவாக அதிகரிக்கப்படும் என கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரன நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கல்விப்பீடங்களில் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவு தற்போதைய வாழ்க்கைச் செலவுக்கு போதுமானதாக இல்லை. எனவே அத்தொகை 1000 ரூபாவால் அதிகரிக்க அமைச்சரவை அனுமதி கோரப்பட்டுள்ளது.

திறைசேரியுடன் கலந்துரையாடி குறித்த கொடுப்பனவை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். திறைசேரியில் நிதி ஒதுக்கப்பட்ட பின்னர் மிகுதியும் சேர்த்து கொடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

# மனித உரிமைகள் ஆணையாளர் யூனில் இலங்கை வருகிறார்

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் ராட் அல் ஹீசைன் எதிர்வரும் யூன் மாதம் அளவில் இலங்கை வருவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இதனைத் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும் போது அவர் இதனைக் கூறியுள்ளார்.

இலங்கை மீதான யுத்தக் குற்றங்கள் குறித்த உள்நாட்டு விசாரணைகள் தாமதிக்கப்பட்டமையே, சர்வதேச தலையீடுகள் அதிகரித்தமைக்கான காரணம் என்று அவர் கூறியுள்ளார்.

இந்த நிலையில் ஐக்கிய நாடுகள் சபையுடன் ஒன்றிணைந்து செயற்படுவதன் ஊடாகவே இலங்கை மீது நம்பிக்கையை ஏற்படுத்த முடியும் என்பதையும் அவர் இதன்போது வலியுறுத்தினார்.

இதற்கு பதில் வழங்கிய முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், இலங்கையின் முன்னைய அரசாங்கம் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் முன்னாள் ஆணையாளர் நவநீதம் பிள்ளையை அழைத்ததன் மூலம், மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் இணைந்தே செயற்பட்டுள்ளது என்பதை எடுத்துக் காட்டுவதாகக் கூறினார்.

தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, உள்நாட்டு விசாரணை என்ற விடயத்தை முதலில் ஆரம்பித்தது மகிந்த அரசாங்கமே என்று கூறினார்.

இலங்கைக்கு விஜயம் செய்த ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூனும், முன்னாள் ஜனாதிபதி மகிந்தவும் இது தொடர்பில் கூட்டறிக்கை ஒன்றை விடுத்தமையையும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதேநேரம் 13 ஆம் திருத்த சட்டத்துக்கு அப்பால் செல்லும் விடயத்தையும் மகிந்த ராஜபக்ஷவே முன்வைத்தார் என்பதையும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

# புதியபாதை அழைக்கிறது தோழா!

**தமிழ்த்தேசிய "புத்திஜீவிகள்" அல்லது சிவில் சமூகத்தினர் என்று தம்மை அவ்வப்போது அடையாளப்படுத்திக்கொள்ளும் "மெத்தப்படித்த"வர்களும் "பெரிய" மனிதர்களும் ஒரு போதும் இந்த இணக்க அர சியலின் அவசியம் பற்றியோ அதற்கான தேவைகள் மற்றும் நியாயப்பாடுகள் பற்றியோ ஒரு வரி கூட எழுதியதில்லை. தமிழ்த்தேசிய ஊடகங்கள் அனைத்துமே புலிகளும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினரும் நினைப்பதையே உலக உண்மையாக வர்ணிப்பதை விடுத்து சுய புத்தியுடன் செயற்பட மறுத்தனர்.**

■ எழுகதிரோன் கட்டுரையிலிருந்து



இலங்கையின் தமிழ் சூழலில் இணக்க அரசியல் என்பது இதுவரை கால மும் மாற்று கருத்துக்கொண்ட கட்சிகளின் வழிமுறையாக மட்டுமே இருந்து வந்துள்ளது. இது தமிழீழத் தாயகம், வடக்கு கிழக்கு இணைந்த சுயநிர்ணயம், இத்தியாதி இத்தியாதி என்று கோசங்களுக்கும் கோட்பாடுகளுக்கும் அப்பால் விளிம்புநிலை அரசியலாகவே காணப்பட்ட நிலையில் இப்போது இந்த போக்கில் பாரிய மாற்றம் ஒன்று நிகழ்ந்திருக்கின்றது.

இலங்கையில் அரசியல் வரலாற்றில் சுமார் 65 வருடகாலம் மைய நீரோட்ட கட்சியாகவும் சமஸ்டி, தமிழீழம் என்கின்ற கோரிக்கைகளின் பிறப்பிடமாகவும் இருந்துவரும் தமிழரசுக்கட்சி இந்த இணக்க அரசி யல் பாதையில் தனது புதிய கால-டியை எடுத்து வைத்திருக்கின்றது.

புதிய ஜனாதிபதியின் கீழ் உருவாக்கப்பட்டிருக்கும் தேசிய நிறைவேற்று சபையில் அங்கம் வகிப்பதோடு மாகாண சபை முறைமையை ஏற்றுக்கொண்டு வடக்கையும் கிழக்கையும் தனித்தனி மாகாணங்களாக அங்கீக ரித்து அவற்றின் ஆட்சியில் பங்கெடுக்கின்றனர். அதுவும் கிழக்கில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் வெற்றிலை சின்னத்தின் கீழ் கூட்டாட்சியில் பங்கெடுத்திருக்கின்றனர்.

கடந்த கிழக்கு மாகாண-சபை ஆட்சியில் சந்திரகாந்தன் இதே சின்னத்தின் கீழ்த்தான் முதலமைச்சராக இருந்தார். இதன்காரணமாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர்களான சம்பந்தன், சுமந்திரன் போன்றோர் ஒருசில தரப்பினரால் துரோகிக-ளாக வர்ணிக்கப்படுகின்றார்கள். லண்டனிலும் வட இலங்கையிலும் கூட இவர்களின் உருவ பொம்மைகள் எரியூட்டப்பட்டுள்ளன.

ஆனால் இதுவரைகாலமும் இந்த இணக்க அரசியலை செய்துவந்தவர்கள் எதிர்கொண்ட வசவுகளுக்கும் வன்முறைகளுக்கும் முன்னே இந்த எதிர்ப்புகள் எல்லாம் ஒன்றுமேயில்லை எனலாம்.

இணக்க அரசியல் என்னும் பெயரில் இதுவரைகாலமும் இரு முக்கிய தரப்பினர் முக்கியத்துவம் பெற்று வந்தனர். சுமார் 20 வருட காலமாக நாடாளுமன்ற உறுப்பினராகவும் மிக நீண்ட காலமாக அமைச்சராகவும் இணக்க அரசியல் பாதையில் பயணித்த டக்ளஸ் தேவானந்தா இதில் முக்கியத்துவம் பெறுகின்றார்.

தமிழ் மக்களின் ஆயுதப்போராட்ட பாதையில் மூத்த போராளியாக இருந்து விலகி ஜனநாயக வழிக்கு திரும்பிய அவரது ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, "மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி" என்னும் கொள்கையை வரித்துக்கொண்டு செயற்பட்டது.

1987 ஆம் ஆண்டு அறிமுகமாக்கப்பட்ட மாகாண சபை முறைமை 1990 இல் புலிகளால் நிர்மூலமாக்கப்பட்டு அதன்பின்னர் நீண்ட காலத்துக்கு வடக்கு கிழக்கு பிரதேசங்களில் புலிக-ளின் கட்டுப்பாடே மேலோங்கியிருந்தது. புளொட், டெலோ போன்ற அமைப்புக்கள் நாடாளுமன்ற அரசிய லில் ஈடுபட்டிருந்தாலும் காலப்போக்கில் புலிகளின் குர லாக உருவான தமிழ்த்தேசிய கூட்டமைப்பினுள் சரணடைந்து தமது சொந்தக் குரல்களை இழந்து நின்றனர்.

ஆனால் தொடர்ச்சியாக புலி களது பிரிவினை பாதை யையும் மிலேச்சத்தனத்தையும் எதிர்த்துக்கொண்டு வடக்கு கிழக்கில் ஒரு ஜனநாயக மீட்சியை கொண்டுவர ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி வகித்த பாத்திரம் முக்கியமானது. இதற்காகவே 1990ல் இருந்து 2009 இல் புலி களின் அழிவுவரை இந்தக் கட்சி பல விலைமதிக்க முடியாத தனது தோழர்களை இழக்க நேரிட்டது. டக்ளஸ் தேவானந்தா மட்டும் புலிக-ளின் பத்துக்கும் மேற்பட்ட கொலை-லத் தாக்குதல்களில் இருந்து உயிர் தப்பியிருந்தார்.

இத்தனை எதிர்ப்புகளுக்கும் துரோகி பட்டங்களுக்கும் காரணம் புலிகளுக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பினருக்கும் மாற்றாக அவர் முன்வைத்து செயற்பட்ட அவரது இணக்க அரசியலேயாகும்.

இதே போன்றுதான் 2004 ஆம் ஆண்டு புலிகளுக்குள் உருவான கிழக்கு பிளவிலிருந்து தோன்றிய தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கிழக்கில் ஒரு இணக்க அரசியலுக்கு வழிவகுத்தனர். 2008 ஆம் ஆண்டிலிருந்து உள்ளூராட்சி மன்றங்களையும் மாகாண சபையையும் வென்று கிழக்கில் நீண்டகாலமாக இருந்த வன்முறை சூழலுக்கும் ஜன நாயக மறுப்புக்கும் முற்றுப்புள்ளி வைத்தனர். மிக குறுகிய காலத்தில் பாரிய அளவிலான அபிவிருத்தியையும் ஊழலும் இலஞ்சமும் அற்ற ஒரு ஆட்சியையும் உருவாக்குவதில் வெற்றிகண்டனர்.

வடக்கில் ஈழமக்கள் ஜனநாயக கட்சியும் கிழக்கில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளும் செய்து வந்த இந்த இணக்க அரசியல் வழிமுறை இதுவரை காலமும் தமிழீழ விடுதலைப் புலிகளால் மட்டுமல்ல தமிழ் தேசிய கூட்டமைப்பின்ராலும் பாரிய துரோ-கமாக சித்தரிக்கப்பட்டு வந்தது.

ஆனால் இன்று நிலைமைகள் தலைகீழாக மாறியுள்ளன. மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்று ஓயாது ஒலித்த ஈழமக்கள் ஜனநாயக கட்சி இதுவரைகாலமும் மத்தியில் மட்டுமே கூட்டாட்சியை நடாத்தும் வாய்ப்பை பெற்றது. தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் மாநிலத்தில் மட்டும் தான் ஆட்சி செய்தனர். மத்திக்கு செல்லும் வாய்ப்பு இதுவரை கிட்டவில்லை.

ஆனால் எதனை துரோகம் என்று இந்த தமிழ் பேசும் நல்லுலகம் இதுவரைகாலும் தூற்றியதோ எந்த பாதைக்கு வழி காட்டியதற்காக டக்ளஸும் சந்திரகாந்தனும் துரோ கிகள் மக்கள் விரோதிகள் கொல்லப்பட வேண்டியவர்கள் என்று தமிழ் மக்களின் மனங்களில் நச்சுவிதைகள் தூவப் பட்டதோ அந்த பாதையில் தமிழ் தேசிய கூட்டமைப்பு காலடி எடுத்து வைத்திருக்கின்றது.

ஆனால் இதுவரை காலமும் இந்த இணக்க அரசியல் செய்து வந்தவர்களுக்கு மக்களின் வாக்குபலம் பெரியஅளவில் கிடைக்கவில்லை. அதனால் இவர்களின் செயற்பாடுகள் சில வரையறைகளைத் தாண்டி அதாவது அபிவிருத்தி என்பதற்கு அப்பால் உரிமைகள் விடயத்தில் மட்டுப்பட்டேயிருந்தது..

நாடாளுமன்றிலோ மாகாணசபைக-ளிலோ போதிய பெரும்பான்மை உறுப்பினர்கள் இல்லாமையால் அரசாங்கத்துடன் முட்டிமோதி தமிழ் மக்களின் உரிமைகள் குறித்து நிராகரிக்கப்பட முடியாத தாக்கம் செலுத்துபவர்களாக செயற்பட முடியவில்லை.

இந்த உண்மைகளை மறைத்து இணக்க அரசியல் செய்பவர்களின் எல்லைக்கோடுகளை "சரணா-கதி அரசியல்" என்று தமிழ் தேசிய கூட்டமைப்பினர் இதுவரைகாலமும் கிண்டலடித்து வந்திருக்கின்றனர்.

ஆனால் இப்போது இணக்க அர சியல் பாதையில் தனது புதிய கால-டியை எடுத்து வைத்திருக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பு வடக்குகிழக்கு மக்களின் பெரும்பான்மை ஆதரவுடன் இயங்கிவருவது ஆகும். இன்றைய

**தமிழரசுக்கட்சி, புதிய ஜனாதிபதியின் கீழ் உருவாக்கப்பட்டிருக்கும் தேசிய நிறைவேற்று சபையில் அங்கம் வகிப்பதோடு மாகாண சபை முறைமையை ஏற்றுக்கொண்டு வடக்கையும் கிழக்கையும் தனித்தனி மாகாணங்களாக அங்கீகரித்து அவற்றின் ஆட்சியில் பங்கெடுக்கின்றனர். அதுவும் கிழக்கில் ஐக்கியமக்கள் சுதந்திர கூட்டமைப்பின் வெற்றிலை சின்னத்தின் கீழ் கூட்டாட்சியில் பங்கேடுத்திருக்கின்றனர். கடந்த கிழக்கு மாகாண-சபை ஆட்சியில் சந்திரகாந்தன் இதே சின்னத்தின் கீழ்தான் முதலமைச்சராக இருந்தார்.**

தமிழ்த்தேசிய "புத்திஜீவிகள்" அல்லது சிவில் சமூகத்தினர் என்று தம்மை அவ்வப்போது அடையாளப்படுத்திக்கொள்ளும் "மெத்தப்படித்த" வர்களும் "பெரிய" மனிதர்களும் ஒருபோதும் இந்த இணக்க அரசியலின் அவசியம் பற்றியோ அதற்கான தேவைகள் மற்றும் நியாயப்பாடுகள் பற்றியோ ஒரு வரி கூட எழுதியதில்லை. தமிழ் தேசிய ஊடகங்கள் அனைத்துமே புலிகளும் தமிழ் தேசிய கூட்டமைப்பினரும் நினைப்பதையே உலக உண்மையாக வர்ணிப்பதை விடுத்து சுய புத்தியுடன் செயல்பட மறுத்தனர்.

ஜனாதிபதியின் வெற்றிக்காக லட்சக்கணக்கான தமிழ் மக்களின் வாக்குகளை வாரி வழங்கியுள்ளது. வடமாகாண சபையில் பெரும்பான்மை ஆட்சியை நடத்துகின்றது. கிழக்குமாகாண சபையில் மத்திய அரசுடன் இணைந்து அமைச்சுக்களை பகிர்ந்துகொண்டுள்ளது.

எனவே இந்த வாய்ப்புக்களை தாம் இன்று சரியானதாக இனம்கண்டிருக்கும் இணக்க அரசியல் போக்கை "சரணா-கதி" அரசியலாகவன்றி பேரம்பேசும் அரசியலாக மாற்றி தமிழ் மக்களின் வாழ்வில் பாரிய முன்னேற்றங்களுக்கு வழிசெய்ய முடியும். செய்வார்களா?

# நடுநிலையான வெளிவிவகாரக் கொள்கையை புதிய அரசாங்கம் பின்பற்ற வேண்டும்

## ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு



"ஐ.நா.வுடன் ஒத்துழைத்து நடுநிலையான வெளிவிவகாரக் கொள்கையைப் பின்பற்றுமாறு புதிய அரசைக் கேட்டுக்கொள்கிறேன். சர்வதேச விசாரணைகளின் போது எனது ஆலோசனைகளையும் பெறலாம். இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மற்றும் அதன் கிளை நிறுவனங்களை நாம் எதிர்க்கவில்லை. இணைந்து செயற்பட முடியாது என்றும் கூறவில்லை. ஒரு தலைப்பட்சமான செயற்பாடுகளுக்கு எதிராகவே செயற்பட்டோம் என்றும் கூறினார். அத்துடன், சர்வதேச விசாரணைக்கு ஒருபோதும் இட்மளிக்கக்கூடாது என்றும், நடுநிலையான வெளிவிவகாரக் கொள்கையை புதிய அரசு கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபைச் சட்டத்தின் ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் உரையாற்று கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் செயித் அல் - "ஹஸைனுகக்கு இலங்கை வருமாறு வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அழைப்பை நாம் வரவேற்கின்றோம். எமது அரசின்போதும் சர்வதேச அமைப்புகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்தோம். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தின் முன்னாள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையும் வந்திருந்தார்.

எமது அரசு விரோதமான வெளிவிவகாரக் கொள்கையைக் கடைப்பிடிக்கவில்லை. ஐ.நா.வுடன் இணைந்து செயற்படுதல் அவசியம். நாமும் அந்த அணுகுமுறையையே கடைப்பிடித்தோம். எனினும், சில அமைப்புகள் சில சந்தர்ப்பங்களில் பக்கச்சார்பாக செயற்பட்டன. அதை நாம் எதிர்த்து நின்றோம். இதன் பிரகாரமே சர்வதேச விசாரணையை நிராகரித்தோம்.

புதிய அரசும் இதற்கு இடமளிக்கக்கூடாது. அத்துடன், ஐ.நா.வுடன் ஒத்துழைத்து நடுநிலையான வெளிவிவகாரக் கொள்கையைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன். சர்வதேச விசாரணைகளின் போது எனது ஆலோசனைகளையும் பெறலாம்.

அதேவேளை, நான் அரசியலுக்குள் வருவதறகு முன்னர் தென்னாபிரிக்காவில் விரிவுரைப் பணியில் ஈடுபட்டேன்.

நல்லிணக்கத்துக்காக உண்மையைக் கண்டறியும் குழு நிறுவப்பட்டது. அது வெற்றியும் அடைந்தது. எனவே, இதுபோனற குழுக்களின் அனுபவப்பகிர்வைப் பெற்றுக்கொள்வது தேசிய நடவடிக்கைகளுக்குப் பொருத்தமாக இருக்கும் தற்போது புதுயுகம் பிறந்துள்ளது. எனவே, வெளிவிவகார செயற்பாடுகளின்போது இணைந்து செயற்படுவோம்" என்றார்.

# 19 ஆவது திருத்தத்திற்கு எதிராக விரைவில் வழக்குத் தாக்கல்

## என்கிறார் உதய கம்மன்பில



அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்துக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்போவதாக மேல் மாகாண சபையின் உறுப்பினரும் பிவித்துரு ஹெல உருமயவின் பொதுச்செயலாளருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

19ஆவது திருத்தம், நாடாளுமன்ற ஒழுங்குப்பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டதன் பின்னர் அதற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்யவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்த திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடாத்தப்படவேண்டும் என்பதே நோக்கமாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். மேல்மாகாண அழகியல் விடுத்தியில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஏழு காரணங்களை உள்ளடக்கியே உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

முன்மொழியப்பட்டுள்ள திருத்தத்தின் பிரகாரம், ஜனாதிபதி, அரசாங்கம் மற்றும் நிறைவேற்று பிரதானியாக இருந்தாலும் அமைச்சரவையானது பிரதமர் தலைமையில் நடைபெறல் மற்றும் தகவலறியும் உரிமையை சட்டமாக்கல் ஆகியன இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கு பங்கத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# மூவரடங்கிய நீதிபதிகள் முன் வழக்கை விசாரிக்க கோரிக்கை

பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர உள்ளிட்ட நால்வர் கொலை செய்யப்பட்ட வழக்கை மேல் நீதிமன்றத்தின் மூவர் அடங்கிய நீதிபதிகள் முன் விசாரணை செய்யுமாறு சட்டமா அதிபரால் பிரதம நீதியரசரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

எழுத்து மூலம் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர உள்ளிட்ட நால்வர் கொலை செய்யப்பட்டமை குறித்த வழக்கு சட்ட மா அதிபரால் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா உள்ளிட்ட 13 பேருக்கு எதிராக இதில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

# மீனவர்களுக்கு இடையில் 24 இல் பேச்சுவார்த்தை

## இந்திய ஊடகங்கள் தகவல்

இலங்கை மற்றும் தமிழக மீனவர்களுக்கு இடையிலான பேச்சுவார்த்தை இந்த மாதம் 24 ஆம் திகதி நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்திய ஊடகங்கள் இதனைத் தெரிவிக்கின்றன. இந்த பேச்சுவார்த்தை முன்னதாக இந்த மாதம் 5 ஆம் திகதி நடாத்தப்படவிருந்தது.

எனினும் இலங்கை அரசாங்கம் இதனை 11 ஆம் திகதி நடாத்துமாறு கோரி இருந்த நிலையில், அதற்கு மறுப்பு தெரிவித்த தமிழக அரசாங்கம் 15 ஆம் திகதி நடாத்துமாறு கோரியது.

இந்த நிலையில் தற்போது தமிழக அரசாங்கம் 24 ஆம் திகதி சென்னையில் இந்த பேச்சுவார்த்தையை நடத்துமாறு கோரி இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சந்தேக நபர் தற்கொலை பொலிஸார் இடைநிறுத்தம்

(கொழும்பு)

ஜா எல பொலிஸ் நிலைய சிறைககூடத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்த சந்தேக நபரொருவர் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டசம்வத்தையடுத்து பொலிஸ் உத்தியோகத்தரொருவர் பணியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு ஜா-எல - ஏக்கல பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

போதைப்பொருட்களை தம் வசம் வைத்திருந்தமை மற்றும் விடுகளை உடைத்து கொள்ளையடித்தமை தொடர்பாக சந்தேகத்தில் பேரில் அவர் கைது செயயப்பட்டிருந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், நேற்று முன்தினம் காலை சிறைக் கூடத்தில் வைத்து அவர்தமது காற்சட்டை பட்டியை பயன்படுத்தி கழுத்தில் சுருக்கிட்டுக் கொண்டதாக தெரிவிக்கப்பட்டது.

# உள்நாட்டு விசாரணை மேற்கொள்வது வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிக்கும்

## அமைச்சர் மங்கள தெரிவிப்பு



இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைகள் குறித்து உள்நாட்டு விசாரணைகளை மேற் கொள்வது வெளிநாட்டு முதலீடுகளை பெற்றுக்கொள்வதற்கான சூழலை உருவாக்கும் என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றுகை யிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

உள்நாட்டு விசாரணைகளை மேற்கொள்வது இலங்கை குறித்த சர்வதேச நம்பகத்தன்மையை அதிகரிக்கும், வெளிநாட்டு முதலீடுகளிற்கான சிறந்த சூழலை உருவாக்கும். இறைமை என்பது அதிகளவான பொறுப்புணர்வின் மூலமே கிடைக்கின்றது. அதில் தன்னுடைய மக்களுக்கு ஆற்றப்படவேண்டிய கடமைகள் முக்கியமானவை.

அரசாங்கங்கள் அவ்வாறான கடமைகளை செய்ய தவறும்போது, நாங்கள் விரும்பாத சர்வதேச தலையீடுகள் தவிர்க்க முடியாதவையாகிவிடும். ராஜபக்ஷாக்கள் மனித உரிமைகள் குறித்த கரி சனைகளுக்கு தீர்வை காணமறுத்ததன் மூலம் உள்நாட்டில் பல சமூகத்தினரை பகைத் துக்கொண்டனர் இலங்கையின் சர்வதேச சகாக்களையும் பகைத்துக் கொண்டனர்.

சில தனிநபர்களால் இழைத்த குறறங்கள் காரணமாக இலங்கை படையினருக்கு ஏற்பட்டுள்ள அவப்பெயரை போக்குவதற்காக அந்த நபர்களுக்கு எதிராக நடவடிக்கையெடுத்து இலங்கை படையினரின்கௌரவத்தை உறுதிப்படுத்துவதும் அரசாங்கத்தின் நோக்கம் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# நல்லாட்சி நிலவுகிறது என்றால் உயர் பாதுகாப்பு வலயம் ஏன்?

## நிமால் கேள்வி

அதி உயர் பாதுகாப்பு வலயம் அவசியமில்லை என எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். நாட்டில் நல்லாட்சி நிலவுகின்றது, சமா தானம் ஏற்பட்டுள்ளது என்றால் எதற்காக அதி உயர் பாதுகாப்பு வலயங்கள் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனை பதவி விலக்குமாறு கோரி நேற்றுமுன்தினம் மத்திய வங்கிக்கு எதிராக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் போராட்டம் ஒன்றை நடாத்தியிருந்தனர்.

இந்தப் போராட்டத்தின் பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் நிமால் சிறிபால டி சில்வா இந்தக் கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

பொலிஸார் தொலைபேசி ஊடாக அழைத்து, மத்திய வங்கி அமைந் துள்ள பகுதி அதியுயர் பாதுகாப்பு வலயம் எனவும் அங்கு போராட்டம் நடாத்த வேண்டாம் எனவும் தம்மிடம் கோரியதாகத் ரெிவித்துள்ளார்.

அவ்வாறு என்றால் எம்மை கைது செய்யவும், கண்ணீர் புகைக் குண்டு தாக்குதல் நடாத்தவும் என தாம் பொலிஸாரிடம் கூறியதாகக் குறிப்பிட்டுள்ளார். எந்தக் காரணத்திற்காகவும் போராட்டத்தை கைவிடப் போவதில்லை என தாம் பொலிஸாரிடம் கூறியதாகத் தெரிவித்துள்ளார்.

சமாதானம் நிலைநாட்டப்பட்டுள்ளது, நல்லாட்சி நிலவுகின்றது என்றால் எதற்காக அதி உயர் பாதுகாப்பு வலயங்கள் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். யாழ்ப்பாணத்தில் அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்பட்டால் எதற்காக கொழும்பில் மட்டும் அதி உயர் பாதுகாப்பு வலயங்கள் இருக்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். மத்திய வங்கியின் ஆளுநர் பதவி விலக்கப்படும் வரையில் போராட்டம் தொடரும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நாணயத் தாள்கள் தொடர்பில் அவதானமாக செயற்படுங்கள்




## பொலிஸார் எச்சரிக்கை

5000 மற்றும் 1000 ரூபாய் தாள்களை பயன்படுத்தும் போது அது குறித்து மிகுந்த அவதானமாக செயற்படுமாறு கோரப்பட்டுள்ளது. பொலிஸார் இதனை கோரியுள்ளனர். அதிக அளவான போலி 5000 மற்றும் 1000 ரூபாய் தாள்கள் புலக்கத்தில் இருப்பதாக பொலிஸார்எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் கடந்த காலங்களில் பலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதன்படி கேகாலை பகுதியில் வைத்து நேற்றைய தினம் 22. ஐந்தாயிரம் தாள்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# நல்வரவு, உறவுக்கு மரியாதை

பண்டுல ஜெயசேகர கட்டுரையிலிருந்து

இந்தியப் பிரதமர் ஒருவர் இலங்கைக்கு வருவது நீண்ட காலத்துக்குப் பிறகு நிகழ்ந்திருக்கிறது. ராஜீவ் காந்தி கடைசியாக வந்து சென்றது பல விதங்களிலும் எதிர்மறை பலன்களையே ஏற்படுத்தியது. இந்தியாவுக்கு வாருங்கள் என்று இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகள் சந்திரிகா குமாரதுங்க, மகிந்த ராஜபக்ஷ, பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க போன்றோர் பலமுறை வற்புறுத்தி அழைத்ததுகூட இந்தியத் தலைவர்களின் காதுகளில் விழவில்லை. தமிழ்நாட்டில் உள்ளவர்களைத் திருப்திப்படுத்த இந்தியத் தலைவர்கள் நினைத்ததாலேயே இலங்கையின் அழைப்பை ஏற்காமல் இருந்தார்கள்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் வராவிட்டாலும் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியையாவது வரவழைக்க முயற்சிகள் நடந்தன. அது லக்ஷ்மன் கதிர்காமரின் யோசனை. கதிர்காமரை விடுதலைப் புலிகள் பின்னர் படுகொலை செய்து விட்டார்கள். அந்த முயற்சியை ராஜபக்ஷ தொடர்ந்தார். ராஜீவ் காந்தியை கௌரவிக்கவும் அவருடைய நினைவாக சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்யவும் விரும்பி சில கடிதங்கள் அனுப்பினார், ஆனால் அவற்றுக்குப் பதில்தான் இல்லை.

இந்தியாவில் புதிய அரசு பதவிக்கு வந்தவுடனேயே இலங்கை அதிபர்கள், பிரதமர்கள், வெளியுறவு அமைச்சர்கள் டில்லிக்கு யாத்திரை மேற்கொண்டு இந்தியத் தலைவர்களைச் சந்தித்தார்கள். ஆனால், ஒரு இந்தியத் தலைவர்கூட இலங்கையர்களுக்கு அந்தப் பதில் மரியாதையைச் செலுத்தவில்லை. இந்தியர்களை இலங்கையில் மரியாதையுடன் வரவேற்றார்கள். ஆனால், அது டில்லியில் திருப்பிச் செய்யப்படவில்லை. இலங்கை வாழ் மக்கள், அறிவுஜீவிகள், அரசியல் தலைவர்கள், செய்தி ஊடகங்கள் என்று எல்லா தரப்பாருமே இதை இலங்கைக்கு இந்தியா செய்யும் அவமரியாதையாகவே கருதினார்கள். இலங்கையில் மையம் கொண்டிருந்த இந்திய ஊடகங்கள் கூட இந்திய அரசின் போக்கை இரசிக்கவில்லை.

2013 நவம்பரில் கொழும்பில் நடந்த கொமன்வெல்த் நாடுகளின் தலைவர்கள் பங்கேற்ற உச்சி மாநாட்டுக்குக்கூட மன்மோகன் சிங் வரவில்லை. தமிழ் நாட்டில் உள்ளவர்களின் திருப்திக்காக இலங்கையைத் தொடர்ந்து புறக்கணித்தது இந்தியத் தலைமை. இது ஏன் என்று புரிந்துகொள்ள முடியாமல் இலங்கைத் தலைவர்கள் விரக்தி அடைந்தார்கள்.

இரு நாடுகளும் தங்களுக்கிடையே சிறந்த உறவு நிலவுவதாக அடிக்கடிக் கூறிக்கொண்டன. போரின் இறுதிக் கட்டத்தில் இந்தியாவின் நேரடி ஆதரவும் மறைமுக உதவிகளும் இலங்கைத் தலைமையால் பெரிதும் வரவேற்கப்பட்டன. இலங்கைக்கான இந்தியத் தூதராகப் பணியாற்றிய நிருபமா ராவ் ஓய்வு பெற்றபோது, சம்பிரதாயங்களையெல்லாம் உடைத்தெறிந்துவிட்டு அவரைத் தமது அலுவலகத்துக்கு வரவழைத்து வாழ்த்தியனுப்பினார் மகிந்த ராஜபக்ஷ. மற்றொரு முன்னாள் தூதரான சிவசங்கர் மேனனையும் இலங்கைத் தலைவர்கள் தங்களுடைய உற்ற நண்பராகவே கருதினார்கள்.

ஆனால், இலங்கைத் தலைவர்களின் அழைப்புகளை இந்தியத் தலைவர்கள் தொடர்ந்து புறக்கணித்ததாலேயே சீனாவுடன் இலங்கை நெருக்கமானது. மகிந்த ராஜபக்ஷ தனது பதவிக் காலத்தில் ஐந்துக்கும் மேற்பட்ட முறை சீனத்தின் உயர் தலைவர்களைச் சந்தித்து சரிசமமாக அமர்ந்து பேசியிருக்கிறார். கிட்டத்தட்ட 30 ஆண்டு இடைவெளிக்குப் பிறகு இலங்கைக்கு வந்த முதல் சீன உயர் தலைவர் அதிபர் ஜி ஜின்பெங்தான்.

இந்தியா என்னுடைய உறவு நாடு, சீனம் எனது நட்பு நாடு என்று ராஜபக்ஷ பலமுறை கூறியிருக்கிறார். நண்பர்கள் அடிக்கடி வந்தனர், உறவு நாடு கண்ணில் தென்படவேயில்லை. பல்வேறு திட்டங்களில் சீனத்துடன் இணைந்து செயல்படுவது ராஜபக்ஷவுக்கு எளிதாக இருந்தது.

2014 மக்களவை பொதுத்தேர்தலில் பெரும்பான்மையான இடங்களைப் பிடித்துப் பிரதமர் பதவிக்கு வந்தார் நரேந்திர மோடி. பதவியேற்பு விழாவுக்கு எல்லா சார்க் நாடுகளின் தலைவர்களுக்கும் அழைப்பு அனுப்பினார். அஇஅதிமுகவுக்கோ திமுகவுக்கோ கட்டுப்பட்டு நடக்க வேண்டிய சூழல் அவசியமில்லை என்ற அளவுக்கு வெற்றி அமைந்து விட்டது. வைகோவின் மதிமுக கூட்டணியில் இருந்தாலும் அவரை அவ்வளவு முக்கியத்துவமுள்ளவராக மோடி நடத்தவில்லை.

ராஜபக்ஷ மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். இதைத்தான் அவர் விரும்பினார். மோடிக்கும் தனக்கும் உள்ள ஒற்றுமைகளைப் பட்டியலிட்ட ராஜபக்ஷ, மோடியுடன் மனம் திறந்து பேசினார். அடிக்கடி பேச தனித் தகவல் தொடர்பு வசதியை ஏற்படுத்திக்கொண்டார். மோடி கேட்டுக்கொண்டார் என்பதற்காக, போதைப்பொருள் கடத்தலில் கைதானவர்கள் உட்பட பலரைச் சிறைகளிலிருந்து விடுதலை செய்தார். மோடி அதற்கு நன்றி தெரிவித்தார்.

அதன் பிறகு காத்மண்டில் நடந்த சார்க் மாநாட்டில் உதவியாளர்கள் தயாரித்த குறிப்புகள் இல்லாமல் ராஜபக்ஷவுடன் மோடி இயல்பாகப் பல அம்சங்கள் குறித்தும் மனம்விட்டுப் பேசினார். ஜனாதிபதி தேர்தலில் ராஜபக்ஷ மீண்டும் போட்டியிடுகிறார் என்றதும் வெற்றிபெற வாழ்த்து தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் மோடியைக் கொழும்பில் வரவேற்ற புதிய ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அதிர்ஷ்டக்காரர். இலங்கைத் தரப்பில் அதிக முயற்சிகள் எடுக்கப்படாமலேயே மோடி வந்துவிட்டார். ராஜபக்ஷ அரசில் செயற்பட்ட மங்கள சமரவீர நல்ல வெளியுறவு அமைச்சராகக் கருதப்படுகிறவர். அவரும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் மோடியை வரவேற்பது வரலாற்றின் தொடர்ச்சியே. சந்திரிகா குமாரதுங்க, ராஜபக்ஷ என்ற இரு முன்னாள் ஜனாதிபதிகளின் தொடர் முயற்சிகளால் மோடியின் பயணம் இப்போது நிறைவேறியிருக்கிறது. இலங்கையின் அழைப்பை ஏற்று உற்ற தருணத்தில் வந்துள்ள மோடியும் பாராட்டுக்குரியவர்.

பக்கத்து நாடான இந்தியாவுடன் உறவை வளர்த்துக்கொள்ள வேண்டும், அதே வேளையில் அதன் எல்லா கொள்கைகளுக்கும், செல்வாக்குக்கும் கட்டுப்பட்டுவிடாமல் சுயேச்சையாகவும் செயற்பட வேண்டும். இதெல்லாம் புதிய ஜனாதிபதி சிறிசேனவின் கைகளில்தான் இருக்கின்றன.

# மலேசிய பிரதமரின் விஜயம் தொடர்பில் பொறுப்பற்ற முறையில் நடக்கவில்லை

## எதிர்க்கட்சி தலைவர் தவராசா விளக்கம்



(யாழ்ப்பாணம்)

மலேசிய பிரதமரின் விசேட பிரதிநிதியின் விஜயம் தொடர்பிலான விடயத்தில் பொறுப்பற்ற முறையில் நான் நடக்கவில்லை. சரியான, ஆதாரத்துடன் தான் கேள்வி கேட்டேன் என வட மாகாண உறுப்பினர் அஸ்மினுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா சாட்டையடி கொடுத்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை வட மாகாண சபை அமர்வின் போது எதிர்க்கட்சித் தலைவரினால் முதலமைச்சரிடம் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடு, குடிநீர், சாலை போன்ற வசதிகள் தொடர்பான உதவிகளை வழங்குவது குறித்து ஆராய்வதற்கான சந்திப்பு ஒன்றை வேண்டி இலங்கை விஜயத்தின் போது வடமாகாண முதலமைச்சரை மின்னஞ்சல் மூலம் அறிவித்திருந்தும் சந்திக்கமுடியவில்லை என்றும். இதனால் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி முடியவில்லை எனவும் மலேசிய பிரதமரின் விசேட பிரதிநிதி டத்தோ ஸ்ரீ.எஸ்.சாமிவேலு வீரகேசரி வார மலருக்கு அளித்த பேட்டி தொடர்பில் முதலமைச்சரிடம் கேட்ட கேள்விக்கு குறுக்கீடு செய்து உரையாற்றிய அஸ்மினுக்கு, நாம் பொறுப்பற்ற முறையில் நடக்கவில்லை. மலேசிய தூதரகத்தின் மூலம் சாமிவேலுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிவிட்டும், தொலைநகல்கள் அனுப்பிவிட்டுத் தான் கேட்கிறேன். ஊடகங்களை பார்த்துவிட்டு பேசவில்லை என காரசாரமாக பதிலடி கொடுத்தார்.

இதற்கு பதிலளிக்கையில் இது துரதிஷ்டமான சம்பவமே என முதலமைச்சர் தெரிவித்ததுடன் காரணங்களையும் அடுக்கினார்.

இனிவரும் காலத்தில் அவை பற்றிப் பேசலாம் என்ற பாணியில் முதலமைச்சர் பதிலளித்தார்.(இ)

# துரிதகதியில் இடம்பெறும் கிராம அபிவிருத்தி செயற்பாடுகள்

தற்போதைய அரசின் 100 நாள் வேலைத்திட்டத்தில் துரிதவேலைகள் கிராம அபிவிருத்தி செயற்பாடுகள் சம்பந்தமாக ஜே/87 கிராம அலுவலர் பிரிவில் கிராம அலுவலர் க.சேந்தன் தலைமையில் கடந்த திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ்.அராலி வீதியிலுள்ள சனசமூகநிலையத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இவ் நிகழ்வில் ஜே/87 கிராம அலுவலர் பிரிவிலுள்ள பள்ளி நிர்வாகிகள், பொது அமைப்புகள், சிவில் பாதுகாப்புக் குழுவினர், மாதர் சங்கம் மற்றும் பொது மக்களும் கலந்து கொண்டனர்.

மக்கள் தத்தமது வீதியிலுள்ள பிரச்சினை சம்பந்தமாக கருத்து தெரிவித்தனர். இறுதியாக அல் அஸ்ஹர் முன்பள்ளி பாடசாலையை புதிதாக நிர்மாணிப்பதற்கான தீர்மானம் அனைவரினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஜே/87 கிராமஅலுவலர் பிரிவுக்கு ஒதுக் கப்பட்ட 10 இலட்சம் ரூபா முன்பள்ளிக்கும், மேலதிக பணம் கிடைக்கும் பட்சத்தில் வீதி ஒழுங்குகள் மேற்கொள்வதாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. (105)

# இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடத்தில் சிறப்பாக இடம்பெற்ற முப்பெரும் விழா



(யாழ்ப்பாணம்)

இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மகா வித்தியாலயம் முன்னெடுத்த முப்பெரும் விழா நேற்றுமுன்தினம் புதன்கிழமை சிறப்பாக இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் அருட்சகோதரி எஸ்.ஜெயநாயகி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் புதிய முகப்பு வளைவு அங்குரார்ப்பணம், பரிசளிப்பு விழா, இளவாலயம் நூல் வெளியீட்டு விழா என்பன இடம்பெற்றன.

நிகழ்வில் ஆசியுரைகளை இளவாலை பங்குத் தந்தை அருட்பணி எஸ்.ஜே.கியு. ஜெயரஞ்சன் அடிகளாரும் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளும் வழங்கினர்.

பாடசாலை முகப்பு வளைவை இளவாலை மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி இயூஜின் பிரான்சிஸ் திறந்து வைத்தார்.

பரிசில்கள் வழங்கும் நிகழ்வில் திருக்குடும்பக் கன்னியர் சபையின் மாகாண ஆளுநர் அருட்சகோதரி கிறிஸ்ரா மரியதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டதோடு இளவாலயம் நூலையும் வெளியிட்டு வைத்தார். நூலின் முதற்பிரதியை சயன்ஸ் வேல்ட் நிறுவன இயக்குநரும் பிரபல பௌதிகவியல் ஆசிரியருமாகிய இ.குமரன் பெற்றுக்கொண்டார்.

நூல் நயப்புரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் வழங்கினார்.

118 ஆண்டுகள் வரலாற்றைக் கொண்ட இப்பாடசாலை இளவாலைப் பிரதேசக் கல்வி வளர்ச்சியில் மிகப்பெரும் தடயத்தைப் பதித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (48)


# ரொனால்டோவுக்கு அருங்காட்சியகம்

புகழ்பெற்ற கால்பந்து வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோவின் பெயரில் போர்த்துக்கல் நாட்டில் உள்ள அவரது சொந்த ஊரில் ஓர் அருங்காட்சியகம் அமைந்துள்ளது.

அந்த அருங்காட்சியகத்தில், ரொனால்டோ வாங்கிய விருதுகள், அவர் பயன்படுத்திய காலணிகள், கால்பந்துகள், சீருடைகள் உள்ளிட்ட பொருட்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இந்த அருங்காட்சியகத்தில், அச்சு அசலாய் அப்படியே ரொனால்டோவை நிறுத்தி வைத்திருப்பது போன்ற மெழுகுச் சிலையும் அமைக்கப்பட்டுள்ளது. இந்தச் சிலையின் தலையில் நடப்பட்டுள்ள முடிகள் இயற்கையானவை என்பது ஒரு விசேஷம்.

இந்த அருங்காட்சியகத்தைப் பார்வையிட 5 யூரோ கட்டணமாக வசூலிக்கப்பட்டு, ஆதரவற்ற குழந்தைகள் நல்வாழ்வுக்காகப் பயன்படுத்தப் படுகிறது. ஒரு



மாதத்துக்கு சராசரியாக 10 ஆயிரம் பேர் ரொனால்டோவின் அருங்காட்சியகத்தைப் பார்வையிடுகின்றனர்.

## உலகக் கிண்ணம் 2015

### காலிறுதிச் சுற்றுப் போட்டி

| (இன்றைய ஆட்டம்) | (நாளைய ஆட்டம்) |
| --- | --- |
| அவுஸ்ரேலியா எதிர் பாகிஸ்தான் | நியூசிலாந்து எதிர் மேற்கிந்தியத்தீவுகள் |
| இடம்- அடிலைட் | இடம்- ஒக்லாந்து |
| நேரம்- காலை 9.00 | நேரம்- காலை 6.30 |

# ஹோலியைக் காதலிக்கிறேன் நடிகையின் பேச்சால் பரபரப்பு



இந்தி நடிகை ராக்கி சாவந்த், இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர ஆட்டக்காரர் ஹோலியை காதலிப்பதாக கூறி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

ஏற்கனவே ஹோலியும், பாலிவுட் நடிகை அனுஷ்கா சர்மாவும் காதலித்து வருவதாக செய்திகள் வெளிவந்த நிலையில் இருக்கிறது.

இந்நிலையில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட ராக்கி சாவந்த், விராட் ஹோலியை தான் காதலிப்பதாக தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,பாலிவுட் நடிகை அனுஷ்கா சர்மாவும், விராட் ஹோலியும் காதலிப்பது ஊர் அறிந்த விடயமாக இருக்கலாம்.ஆனால் ஹோலி தனது காதலை ஒப்புக் கொண்ட போதிலும், அனுஷ்கா மட்டும் அது பற்றி பேசுவதே இல்லை.

அனுஷ்கா சர்மா ஹோலியின காதலை வெளிப்படையாக ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால் நான் என் காதலை ஹோலியிடம் தெரிவிக்கிறேன் என்று கூறியுள்ளார்.

பாலிவுட்டில் நுழைந்து தனது கவர்ச்சியால் அனைவரையும் கவர முயன்ற ராக்கி சாவந்த், பின்னர் படவாய்ப்புகள் இல்லாமல் புது கட்சி தொடங்கி தேர்தலில் போட்டியிட்டு மண்ணை கவ்வியது குறிப்பிடத்தக்கது

# இலங்கை அணி பற்றி கவலை இல்லை

## சங்கக்கார



உலகக்கோப்பை காலிறுதியில் தென்னாபிரிக்க அணியிடம் தோல்வி அடைந்தாலும் இலங்கை அணி சிறந்த கைகளில் உள்ளது, அதன் எதிர்காலம் குறித்து கவலைப்பட வேண்டியதில்லை என்று ஓய்வு பெறும் சங்கக்கார கூறியுள்ளார்.

சங்கக்காரவின் கடைசி ஒருநாள் போட்டியாக அமைந்தது இந்தக் காலிறுதிப் போட்டி. ஆனாலும், டெஸ்ட் போட்டிகளில் அவரது பங்களிப்பு சில காலங்கள் தொடரும் என்று அவரே கூறியுள்ளார்.

இலங்கை அணிக்காக கடந்த 16-17 ஆண்டுகளாக பல்வேறு விதங்களில் பங்களிப்பு செய்துள்ள மஹேலா ஜெயவர்த்தன இந்த உலகக்கோப்பையில் சோபிக்கவில்லை. அவர் கடுமையாக இது குறித்து ஏமாற்றமடைந்திருப்பார் என்று கூறிய சங்கக்கார, ஜெயவர்தனவுடன் ஆடிய நேரங்கள் குறித்து பேசிய போது, "மஹேல இந்தத் தோல்வியினால் பயங்கர ஏமாற்றம் அடைந்திருப்பார். ஆனால் விளையாட்டில் இதெல்லாம் சகஜம். தேவதைக் கதை போன்ற முடிவுகள் எப்போதும் சாத்தியமில்லை.

உலகக்கோப்பையில் எவ்வளவு உச்சத்தில் முடிய வேண்டும் என்று நினைக்கிறோமோ அது நடக்காது, அது நடக்கவில்லை. அதற்காக ஏமாற்றத்துடன் செல்ல வேண்டிய அவசியமில்லை.

எங்கள் இருவரிடையே நல்ல நட்பு இருந்தது. பகைமை என்பது அறவே இல்லை. நான் அணியில் நுழையும் போது மஹேல ஏற்கனவே 2 ஆண்டுகள் அணியில் இருந்தார். துணைத் தலைவராகவும் அவர் இருந்தார். எங்கள் இருவருக்கும் ஒரே வயது. இதனாலேயே வெகுவிரைவில் நண்பர்களானோம்.

களத்தில் இருவரும் சேர்ந்து துடுப்பாட்டம் செய்யும் போது. அவர் எப்போதும் ஆதிக்கம் செலுத்த விரும்புவார். நான் அவருடன் இன்னிங்ஸை நகர்த்திச் செல்பவனாக திகழ்ந்தேன். அவர் விரைவு ரன் குவிப்பில் செல்லும் போது நான் அடக்கி வாசிப்பேன். அவருடன் சேர்ந்து விளையாடுவது எனக்கு மிகப் பெரிய அனுபவமே." என்றார்.

இலங்கை அணி குறித்து அவர் கூறும்போது, "இலங்கை அணி சிறந்த கைகளில் உள்ளது. அஞ்சலோ மத்யூஸ் தலைமைத்துவத்தில் சிறப்பாகச் செயலாற்றி வருகிறார்.

திலகரத்ன டில்ஷான் இன்னும சிறிது காலம் விளையாடுவார் என்று நினைக்கிறேன். லாஹிரு திரிமன்னே ஆட்டத்தில் பெரிய முன்னேற்றம் இருந்து வருகிறது.

இந்த இளம் வீரர்களை என்னுடைய இளம் வயதை வைத்து ஒப்பிட்டு பார்க்கும் போது நான் இருந்த நிலையை விட நல்ல நிலையில் உள்ளதாகவே கருதுகிறேன்.

இன்னும் இவர்கள் கற்றுக் கொள்வார்கள், இலங்கைக்காக மேலும் பங்களிப்பு செய்வார்கள் என்று நினைக்கும் போது உற்சாகமாகவே உள்ளது.இலங்கை கிரிக்கெட்டின் எதிர்காலம் குறித்து எனக்கு எந்தவிதமான அச்சமும் இல்லை." என்றார்.


# அஜ்மல் வருகை பாக்.உற்சாகம்

காயமடைந்த முகமது இர்பானுக்குப் பதில் சயீத் அஜ்மல் சேர்க்கப்படுவது பாகிஸ்தான் அணிக்கு உற்சாகத்தை ஏற்படுத்தியது.

பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சாளர் சயீத் அஜ்மல், 37. ஐ.சி.சி., நிர்ணயித்த 15 டிகிரிக்கும் அதிகமாக, கையை வளைத்து பந்துவீச்சு செய்த இவருக்கு, கடந்த 2014, செபரெம்பர் மாதம் முதல் தடை விதிக்கப்பட்டது.

கடந்த ஜனவரி 24 ஆம் திகதி, சென்னையில் நடந்த சோதனையில் தேறியதை அடுத்து, சர்வதேச போட்டிகளில பங்கேற்க அனுமதி தரப்பட்டது. இருப்பினும், உலக கோப்பை தொடருக்கான பாகிஸ்தான் அணியில் சேர்க்கப்படவில்லை.

தற்போது, இடுப்பு எலும்பு முறிவு காரணமாக வெளியேறிய வேகப்பந்து வீச்சாளர் முகமது இர்பானுக்குப் பதில் சயீத் அஜ்மலை அனுப்ப, பாகிஸ்தான் கிரிக்கெட் சபை



முயற்சிக்கிறது.

இதுகுறித்து பி.சி.பி., தலைவர் ஷாரியார் கான் கூறுகையில், "நாளை நடக்கும் அவுஸ்ரேலிய அணிக்கு எதிரான காலிறுதிக்கு முன், சயீத் அஜ்மல் அடிலைட் செல்ல முடியாது. ஒருவேளை பாகிஸ்தான் அணி அரையிறுதிக்கு முன்னேறினால், இவர் கட்டாயம் இடம் பெறுவார்," என்றார்.

## கரப்பந்தாட்டம்

(அளவெட்டி)

மருதங்கேணி பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடை யிலான ஆண்கள், பெண்களுக்கான வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டப் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மருதங்கேணி பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (93)

# உலகக் கிண்ணம் எங்கள் வசமாகும்

தென்னாபிரிக்க அணி முதல் முறையாக உலக கோப்பை போட்டியில் 'நாக் அவுட்'டில் வெற்றி பெற்றது. அந்த அணி கால் இறுதி ஆட்டத்தில் இலங்கையை நசுக்கி தள்ளியது. முதலில் விளையாடிய இலங்கை அணி 37.2 ஓவரில் 133 ரன்னில் சுருண்டது.

சங்கக்கார அதிகபட்சமாக 45 ஓட்டங்கள் எடுத்தார். இம்ரான் தாகீர் 4 விக்கெட் கைப்பற்றினார். டுமினி தொடர்ந்து 3 விக்கெட் கைப்பற்றி ஹாட்ரிக் சாதனை படைத்தார்.

பின்னர் விளையாடிய தென்னாபிரிக்கா 192 பந்துகள் எஞ்சி இருந்த நிலையில் 1 விக்கெட் இழப்புக்கு 134 ரன் எடுத்து 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று அரை இறுதிக்கு தகுதி பெற்றது. குயின்டன் டிகொக் 57 பந்தில் 78 ரன் எடுத்தார்.இந்த வெற்றி குறித்து தென்னாபிரிக்கா கேப்டன் டிவில்லியர்ஸ்



நிருபர்களிடம் கூறியதாவது

எங்களது பந்துவீச்சு மிகவும் அபாரமாக இருந்தது. குறிப்பாக இம்ரான் தாகீரும், டுமினியும் நேர்த்தியுடன் பந்து வீசினார்கள். சுழற்பந்து வீரர்களான இருவர் மீதும் எனக்கு அதிகமான நம்பிக்கை இருக்கிறது.

இந்த வெற்றி சிறப்பானது. உலகக்கோப்பையை வெல்வோம் என்பதில் எங்களது நம்பிக்கை அதிகரித்துள்ளது. மிகச்சிறந்த நிலையை நாங்கள் எட்டுவோம். இவ்வாறு டிவில்லியர்ஸ் கூறியுள்ளார்.தென்னாபிரிக்கா அணி அரை இறுதியில் நியூசிலாந்து அல்லது மேற்கிந்தியத் தீவுகள் 24 ஆம் திகதி சந்திக்கிறது.

# சாய்னா, காஷ்யப்புக்கு 5 இலட்சம் பணப்பரிசு

உலகின் 2ஆம் நிலை பாட்மிண்டன் வீராங்கனையான சாய்னா நெவால், காமன் வெல்த் போட்டியில் சம்பியன் பட்டம் வென்ற காஷ்யப் ஆகியோ[illegible]க்கு தலா 5 இலட்சம் ரொ[illegible]கப் பரிசு வழங்கப்படும் [illegible] இந்திய பாட்மிண்டன் சங்கம் அறிவித்துள்ளது.

காஷ்யப் ஆகிய இருவரும் [illegible]வரியில் நடந்த சயீத் மோதி கிராண்ட்ப்ரீ கோல்டு போட்டியில் சம்பியன் ஆயினர். சமீபத்தில் நடந்த ஆல் இங்கிலாந்து சாம்பியன்ஷிப் போட்டியில் சாய்னா இறுதிச் சுற்று வரை முன்னேறிய முதல் வீராங்கனை என்ற பெருமையை பெற்றார்.

இதேபோல் சுவிஸ் ஓபன் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற ஸ்ரீகாந்துக்கும் 5 இலட்



சம் ரொக்கப் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

# வலிகாமம் வலய கால்பந்தாட்டம் மகாஜனா வலயச் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

வலிகாம வலய பாடசாலைகளுக்கிடையிலான கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இறுதிப் போட்டிக்கு 19 வயதுப் பெண்கள் பிரிவில் தெல்லிப்பளை பளை மகாஜனா வலயச் சம்பியனைச் சுவீகரித்தது.

இப்போட்டியின் அரையிறுதிப் போட்டிகள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெற்றது.

இதில் பெண்கள் பிரிவில் முதல் சுற்றில் தெல்லிப்பளை மகாஜனாவும் கீரிமலை நகுலேஸ்வரம் வித்தியாலயமும் மோதின. இதில் மகாஜனா 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவது சுற்றில் மாதகல் சென்.ஜோசப் வித்தியாலயமும் மானிப்பாய் மகளிர் கல்லூரியும் மோதின.

இதில் மாதகல் சென்.ஜோசப் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இறுதிப் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனாவும் மாதகல் சென்.ஜோசப் வித்தியாலயமும் மோதின இதில் மகாஜனா 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று வலய சம்பியனானது.

3 ஆம் இடத்திற்கான போட்டியில் கீரிமலை நகுலேஸ்வரம் மானிப்பாய் மகளிர் கல்லூரியும் மோதின இதில் மானிப்பாய் மகளிர் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

17 வயது பிரிவு ஆண்களுக்கான போட்டியில் முதல் சுற்றில் தெல்லிப்பளை மகாஜனவும் மானிப்பாய் இந்துவும் மோதின. இதில் முதல் சுற்று சமநிலையில் முடிவுற்றதால் பினாட்டி முறையில் மோதி மானிப்பாய் இந்து 5:3 கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இரண்டாவது சுற்றில் இளவாலை புனித ஹென்றியரசரும் வசாவிளானும் மோதின. இதில் இளவாலை வென்று 3:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

19 வயதுப் பிரிவு ஆண்கள் பிரிவில் இளவாலை புனித ஹென்றியரசருக்கு மானிப்பாய் இந்துவும் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளன.

3 ஆம் இடத்திற்கான போட்டியில் வசாவிளானும் மகாஜனவும் மோதவுள்ளன அத்துடன் இறுதிச் சுற்றுப் போட்டியும் நடைபெறவுள்ளன. மேலும் 17 வயது பிரிவு ஆண்களுக்கான போட்டியில் தெல்லிப்பளை மகாஜனாவும் சண்டிலிப்பாய் இந்துவும் மோதின. இதில் முதல் சுற்று சமநிலையில் முடிவுற்றது. பினாட்டி முறையில் இடம்பெற்ற போட்டியில் தெல்லிப்பளை மகாஜனா 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிச் சுற்றுக்கு தகுதிபெற்றது.

இரண்டாவது சுற்றில் மானிப்பாய் இந்துவும் வசாவிளானும் மோதியதில் மானிபபாய் இந்து 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இதில் இறுதிப் போட்டிக்கு மானிப்பாய் இந்துவும் தெல்லிப்பளை மகாஜனாவும் தகுதி பெற்றுள்ளது.

3 ஆவது சுற்றுக்கான போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் வசாவிளானும் மோதவுள்ளன. (93)

## யாழ்.இந்துவின் 125 ஆவது ஆண்டு

# பாடசாலைகளுக்கிடையிலான கூடைப்பந்தாட்டம் இறுதிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்துக் கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான ஆண்கள, பெண்களுக்கான கூடைப்பந்தாட்ட போட்டியில் 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டியில் மானிப்பாய் ஏஞ்சலும யாழ்.இந்துவும் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளன.

பெண்களுக்கான -போட்டியில் திருக்குடும்ப கன்னியர் மடமும் இராமநாதன் கல்லூரியும் தகுதி பெற்றுள்ளன.

ஆண்களுக்கான போட்டியில் முதல் சுற்றில் யாழ்.மத்திய கல்லூரியும் மானிப்பாய் ஏஞ்சலும் மோதின. இதில் 34:45 என்ற கோல் கணக்கில் ஏஞ்சல் வெற்றி பெற்றது.

இரண்டாவது சுற்றில் யாழ்.இந்துவும் சென்.பற்றிக்ஸும் மோதின. இதில் 63:35 என்ற கோல் கணக்கில் யாழ்.இந்து வெற்றிபெற்றுக்கொண்டது.

19 வயது பிரிவு பெண்களுக்கான போட்டியில் முதல் சுற்றில் யாழ்.இந்து மகளிரும் இராமநாதன் கல்லூரியும் மோதின. இதில் இராமநாதன் கல்லூரி 25:37 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இரண்டாவது சுற்றில் திருக்குடும்ப கன்னியர்மடமும் உடுவில் மகளிர் கல்லூரியும் மோதின இதில் 63:28 என்ற கோல்கணக்கில் திருக்குடும்ப கன்னியர் மடம் வெற்றிபெற்றது.

இறுதிப் போட்டிகள் நாளை சனிக்கிழமை இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளன. (93)

## வலைப்பந்தாட்டம்

(அளவெட்டி)

வலிகாமம் வலய பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டி இன்று காலை 8 மணிக்கு அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (93)

## விளையாட்டு நிகழ்வு

(அளவெட்டி)

வலிகாமம் கல்வி வலய செயற்பாட்டு மகிழ்வோம் ஆரம்பப் பிரிவு விளையாட்டுப் போட்டி இன்று காலை 8.30 மணிக்கு அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராஜா கலந்துகொள்ளவுள்ளார். (93)

## கால்பந்தாட்டப் போட்டிகள்

(அளவெட்டி)

தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆண்கள், பெண்களுக்கான கால்பந்து, மென் பந்தாட்டம், வலைப்பந்தாட்டப் போட்டிகள் நாளையும், நாளை மறுதினமும் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (93)

# மூன்று கழகங்களுக்கு அனுமதி

(மானிப்பாய்)

யாழ்ப்பாண மாவட்ட கிரிக்கெட் விளையாட்டுக்கழகங்கள் நடாத்தும் போட்டிகளில் விளையாடுவதற்கு யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 3 புதிய கழகங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக சங்கச் செயலாளர் எஸ்.விமலேந்திரன், தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், பாசையூர் விம்ஸ், கந்தர்மடம் ரெய்ன்போ மற்றும் சாவகச்சேரி றிபேக் ஆகிய அணிகளுக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் 22 கழகங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. புதிதாக இணையும் அணிகள், பதிவு செய்யப்பட்ட கழகங்களுடன் சிநேகபூர்வ போட்டிகளில் விளையாடிய பின்னரே அங்கத்துவம் வழங்கப்படும்.

நடுவர்களின் கட்டணம் அதிகரிப்பு மற்றும் செலவுகள் காரணமாக புதிய அணிகளுடன் சிநேகபூர்வ போட்டிகளில் விளையாடுவதற்கு பதிவு செய்யப்பட்ட அணிகள் முன் வருவதில்லை.

இதனால் புதிய அணிகள் பாதிப்படைகின்றன. இதனைக் கருத்திற்கொண்டு சுற்றுப் போட்டிகளில் விளையாடுவதற்கு புதிய அணிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

சங்கத்தின் விதிகளுக்கமைய இந்த அணிகள் செயற்பட்டு, போட்டிகளில். தங்கள் திறன்களைக் காட்டவேண்டும் என்றார். (48)

## கழகங்களுக்கிடையிலான கரப்பந்தாட்டம்

# விக்ரோறியன், பாரதி இறுதிக்கு தகுதி

(அளவெட்டி)

மூளாய் விக்ரோறியன் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் நடாத்திய கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் விக்ரோறியனும் சங்கானை பாரதியும் அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளன.

மூளாய் விக்ரோறியன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் முதல் சுற்றில் சுழிபுரம் அம்பாள் விளையாட்டுக் கழகமும் சுழிபுரம் விக்ரோறியன் கழகமும் மோதின இதில் விக்ரோறியன் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது.

இரண்டாவது சுற்றில் சங்கானை ஸ்ரீ பாரதி விளையாட்டுக் கழகமும் இளவாலை மத்திய விளையாட்டுக் கழகமும் மோதின இதில் பாரதி விளையாட்டுக் கழகம 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் மூளாய் விக்ரோறியன் விளையாட்டுக் கழகமும் மோதின இதில் 2:1 என்ற கோல் கணக்கில் விக்ரோறியன் தகுதி பெற்றுள்ளது. அடுத்த சுற்றில் புத்தூர் கலைமதியும் சுழிபுரம் விக்ரோறியனும் மோதியதில் கலைமதி விளையாட்டுக் கழகம் 2:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது. (93)

# சிரேஷ்ட கூடைப்பந்தாட்டம் யாழ்ப்பாண அணி இறுதிக்கு தகுதி

(அளவெட்டி)

இலங்கையின் சிரேஷ்ட கூடைப்பந்தாட்டப் போட்டி கண்டி நாவலப்பிட்டி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இதில் மாவட்டங்களைச் சேர்ந்த அணிகள் பங்குபற்றியிருந்தன. இதில் முதல் சுற்றுப் போட்டியில் யாழ்ப்பாணம் 72 புள்ளிகளையும், மாத்தறை 41 புள்ளிகளையும் கிளிநொச்சி 37 புள்ளிகளையும் பெற்றது.

காலிறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் 56 புள்ளிகளையும் இரத்தினபுரி 30 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டது.

இறுதிப்போட்டியில் யாழ்ப்பாணம் 51 புள்ளிகளையும், மட்டக்களப்பு 49 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டது.



இதில் இறுதிச் சுற்றுக்கு யாழ்ப்பாணம் அணி தகுதி பெற்றது. (93)

# கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டம்

(அளவெட்டி)

தெல்லிப்பளை பிரதேச செயலக ரீதியாக பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான ஆண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டிகள் அரையிறுதி, இறுதிப் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு அளவெட்டி அருணோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (93)

# விளையாட்டு உபகரணங்கள் பாடசாலைக்கு வழங்கல்



(மானிப்பாய்)

சுன்னாகம் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் ஆரம்ப பாடசாலைக்கு ரூபா 15000 பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் மூலம் இவ் உதவிகள் வழங்கப்பட்டன..

மிகவும் வறுமை நிலையடைந்த மாணவர்களே அங்கு அதிகளவாக கற்று வருகின்றனர் அத்துடன் அப் பாடசாலை ஆரம்ப பாடசாலையாக காணபடுகின்றமையால் பழைய மாணவர்களின் நிதிப்பங்களிப்பும் அற்ற மிகவும் நிதி நெருக்கடி நிறைந்த பாடசாலையாக காணப்படுகின்றது.

இதன் அடிப்படையில் முதற்கட்டமாக ரூபா 15000 பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் வழங்கபட்டன (48)

# தமிழர் அரசியலில் மீண்டும் மீண்டும் சூட்டப்படும் 'துரோகி' முத்திரை!

சமகால தமிழ் அரசியல் பிரசங்கத்தில் குறிப்பிடும் "துரோகி" என்கிற முத்திரை, பொதுவாக தமிழர் பிரச்சினைகளுக்கு எதிராக செயற்படுபவர்கள் மற்றும் எதிரியுடன் கூட்டுச் சேர்ந்துள்ளவர்கள் என குற்றம் சாட்டப்படும் தமிழர்களையே குறிக்கிறது. அத்தகைய நடவடிக்கைகளுக்கு உறுதியான ஆதாரங்கள் எதுவும் அவசியமில்லை. அதற்குத் தேவையானதெல்லாம் நாஸி ஜேர்மனியின் ஹெர் கோயபல்ஸ் வாதிட்டதைப்போல, துரோகி என்கிற கூவலை பல நிலைகளிலிருந்தும் திரும்பத் திரும்ப இடைவிடாது கூவும் பிரமாண்டமான பிரசார முயற்சி மட்டுமே.

அடோல்ப் ஹிட்லரின் பிரசார அமைச்சராக இருந்த போல் ஜே கோய பல்ஸ், "நீங்கள் ஒரு பொய்யை பெரிய அளவில் சொல்லி அதையே திரும்ப திரும்ப கூறினால் இறுதியில் மக்கள் அதை நம்பிவிடுவார்கள்" என்று சொல்லியிருக்கிறார். துரோகி என்கிற குற்றச் சாட்டை திரும்பத் திரும்ப தொடர்ந்து சொல்லி வருவது, தமிழ் தேசியவாத அரசியலின் செயல்முறை பிரயோகமாகும்.


ஷேக்ஸ்பியர் சொல்லிருப்பதைப் போல, இந்த பிரச்சார யுத்தக் கூட்டத்தில் ஒருவர் துரோகி எனக் கூவினால் ஏனையோரும் அவரைத் தொடர்ந்து அதையே கூவுவார்கள்.

தமிழ் தேசியவாத அரசியலில், தங்கள் அரசியல் எதிரிகள் என்று உணரப்பட்டவர்களை துரோகிகள் என்று அழைப்பதற்கு கோயபல்ஸின் நுட்பம் தாராளமாக பயன்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது. சாதாரணமாக வித்தியாசமான ஒரு அரசியல் கருத்தைக் கொண்டிருப்பதே அந்த விடயத்தில் அவர்களை துரோகிகள் என அழைப்பதற்கோ அல்லது எதிரிகளுடன் கூட்டு வைத்துள்ளார்கள் என்று சொல்வதற்கோ போதுமானது. இந்த இரண்டு விஷயமும் பிரச்சினைக்குரியதாக இருப்பதுடன் எதிரி என்பதை தெளிவாக வரையறுப்பதும் கடினமாக உள்ளது.

மேலும் இந்த விடயத்தின் தன்மையும் அதேபோல எதிரியை அடையாளம் காண்பதும் அவ்வப்போது மாற்றங்களுக்கு உள்ளானது. இந்த மாற்றங்கள் இருந்த போதிலும் மாறாமல் இருந்தது துரோகத்தனம் மட்டுமே. துரோகத் தன நடவடிக்கையின் வெற்றி உண்மையான பொருள் மூலம் தீர்மானிக்கப்பட வில்லை, ஆனால் எது உண்மையாக இருக்கும் எனப் பிரசாரம் செய்யும் திறன் மூலமே அது தீர்மானிக்கப்பட்டது.

அது மூர்க்கத்தனமான தமிழ் தேசிய அரசியலில் நிலவிய முழுமையான உண்மையோ அல்லது உயர்ந்த யோசனையோ அல்ல. இறுதியில் வெற்றியடைந்தது எதுவென்றால் ஒரு பக்கத்தினரை துரோகி என வர்ணம் பூசும் மறுபக்கத்தினரின் சக்தி வாய்ந்த பிரசாரமே.

இந்த துரோகத்தனமான நடவடிக்கையினைத் தொடர்ந்த அபத்தமான தர்க்கத்தை கபட நாடகமாகத்தான் கருத முடியும். ஆனால் உண்மையில் அது படிப்படியாக ஒரு தீவிரமான வடிவத்தை ஏற்றது. மக்கள் துரோகிகளாக கருதப்பட்டு கொல்லப்பட்டது இனிமேலும் ஒரு கேலிக்கூத்தான நடவடிக்கையாக இருக்க முடியாது. அது சோகமான ஒன்றாக மாறியது.




——— டி.பி.எஸ்.ஜெயராஜ் கட்டுரையிலிருந்து.

# மகாபாரதத்திலிருந்து நளன் சரிதம்

- அருட்செல்வப் பேரரசன் -



பாண்டவர்கள் வனவாசத்தின் போது கிருஷ்ணனுடைய (திரௌபதி) காம்யக வனத்தில் வசித்து வந்த காலத்தில் தேசத்தையும் கீர்த்தியையும் இழந்து இப்படிக் காட்டில் வாழ்வதை நினைந்து மிகவும் துக்கத்தில் ஆழ்ந்தான் யுதிஷ்டிரன். அப்போது பிரஹதஸ்வர் என்ற மகரிஷி அந்தப் பக்கம் வந்தார். அவரிடம் யுதிஷ்டிரன் கேட்டான்:

"நான் ஆடிய பகடையாட்டம் சம்பந்தமாக எனது நண்பர்களும் மக்களும் என்னைப் பற்றிப் பேசியவை என் மனதிலேயே இருக்கின்றன. அந்த வார்த்தைகளை நினைத்து நினைத்து இரவு முழுவதும் தூங்காமல் துயர் கொள்கிறேன். என்னை விட துரதிர்ஷ்டம் கொண்ட மன்னன் எவனாவது இந்தப் பூமியில் இருக்கின்றானா? இப்படி நீர் கண்டதோ கேட்டதோ உண்டா?"

இதற்குத்தான் பிரஹதஸ்வர் நளனின் சரிதத்தை அவனிடம் கூறினார். "உனக்காவது இங்கே வனத்தில் உன் சகோதரர்களும் தர்ம பத்தினியும் இருக்கிறார்கள். ஆனால் நளனோ யாருமே இல்லாத அநாதையாக இருந்தான். கந்தர்வனைப் போல் இருந்த அவனுடைய அழகான தோற்றத்தையும் இழந்து விகாரமானவனாக மாறினான். அவனுடைய பிள்ளைகளுக்கே அவனை அடையாளம் தெரியாமல் அவனுடைய விகாரமான உருவத்தைக் கண்டு அஞ்சி ஓடி விட்டன. நீ எவ்வளவோ பரவாயில்லை."

**நள தமயந்தி கதையின் சுருக்கம் இது:**

தமயந்தி பெரும் அழகி. மூவுலகத்திலும் அப்படிப்பட்ட அழகியைப் பார்க்க முடியவில்லை. நளனும் அப்படியே. இருவரும் ஒருவரைப் பற்றி ஒருவர் அறிந்து காணாமலேயே காதல் கொள்கின்றனர். தன் காதலைத் தெரிவிக்க தமயந்திக்கு அன்னத்தைத் தூது விடுகிறான் நளன். அன்னம் சொன்னதைக் கேட்ட தமயந்தி காதல் மிகுந்து மனப்பிறழ்வு கொண்டவளைப் போல் ஆகிறாள். அதை அறிந்த தமயந்தியின் தந்தை பீமன் ஒரு சுயம்வரம் வைக்கிறான். இதற்கிடையில் தமயந்தியின் பேரழகைப் பற்றி இந்திரனிடம் விவரிக்கிறார் நாரதர். அதைக் கேட்கும் இந்திரனும் மற்ற தேவர்களும் தேவலோகத்திலிருந்து பூலோகம் இறங்கி வருகின்றனர். வழியில் நளனைக் கண்டு அவனையே தமயந்தியிடம் தூது போகச் சொல்கிறார்கள். "இந்திரன், வருணன், அக்னி, யமன் ஆகிய நான்கு பேர் வந்திருக்கிறோம். இந்த நான்கு தேவர்களில் யாரையேனும் ஒருவரை நீ தலைவனாகக் கொள்" என்று தமயந்தியிடம் போய்ச் சொல்" என்று நளனிடம் சொல்கிறான் இந்திரன்.

தமயந்தியிடம் தேவர்களின் தூதனாகச் செல்லும் நளன் இந்திரன் சொன்னதைச் சொல்கிறான். அவளோ, "அன்னங்களின் மொழி என்னை எரித்துக் கொண்டிருக்கிறது. நீர் என்னை மணம் செய்து கொள்ளவில்லையானால் தற்கொலை செய்து கொள்வேன்" என்று நளனிடம் சொல்கிறாள். "தேவர்கள் மரணம் அற்றவர்கள் நானோ வெறும் அற்ப மனிதன். நீ தேவர்களில் ஒருவரை மணப்பதே நன்று" என்கிறான் நளன். "காதல் பற்றித் தெரியாதவரா நீர்? உம்மை மணம் முடிக்க முடியாமல் போனால் என் உயிரை மாய்த்துக் கொள்வேனே அல்லாது வேறு ஒருவன் எனக்கு மாலையிட அனுமதிக்க மாட்டேன்" என்று சொல்லும் தமயந்தி, "தேவர்களின் பேச்சைக் கேட்கவில்லை என்ற அபவாதம் உமக்கு வர வேண்டாம். எனவே தேவர்களோடு நீரும் சுயம்வரத்துக்கு வாரும். நான் உமக்கு மாலையிட்டுத் தேர்ந்தெடுக்கிறேன்" என்கிறாள். ஆனால் சுயம்வரத்திலோ ஐந்து பேர் நளன் உருவத்தில் இருக்கிறார்கள். இந்த ஐவரில் உண்மையான நளனை எப்படி அறிவது என்று குழம்புகிறாள் தமயந்தி. பிறகு தெய்வத்தை தியானித்து உண்மையான நளனைக் கண்டுபிடிக்கிறாள். தேவர்களின் தேகத்தில் வியர்வை இல்லை! அவர்கள் கண் சிமிட்டுவதில்லை; கால் தரையில் பாவவில்லை; மாலைகள் வாடவில்லை.

பிறகு நான்கு தேவர்களும் நளனுக்கு இரண்டு இரண்டு வரங்கள் கொடுத்து விட்டு இந்திர லோகம் திரும்புகின்றனர். நளன் தமயந்திக்கு இந்திர சேனன் என்ற மகனும் இந்திர சேனை என்ற மகளும் பிறக்கின்றனர்.

தேவர்கள் இந்திர லோகம் செல்லும் வழியில் கலியையும் துவாபரனையும் சந்திக்க நேர்கிறது. அவர்கள் தமயந்தியின் சுயம்வரத்துக்காகத்தான் போய்க் கொண்டிருந்தனர். கலிக்கு தமயந்தியின் மீது தீராத ஆசை. இந்திரன் மூலம் விஷயத்தை அறிந்த கலி மிகுந்த கோபம் அடைகிறான். தன் ஆசை நிறைவேறாததால் "நான் நளனைப் பீடிக்கப் போகிறேன்" என்கிறான். அதேபோல் பீடித்து, நளனின் தம்பியான புஷ்கரனையும் கைக்குள் போட்டுக் கொண்டு நளனை புஷ்கரனோடு பகடை ஆடச் செய்கிறான். பல மாதங்கள் தொடர்கிறது பகடை ஆட்டம். கலியால் பீடிக்கப்பட்ட நளன், மனைவி தமயந்தியின் பேச்சையும் கேட்காமல் பகடை ஆடி எல்லாவற்றையும் இழந்து கொண்டிருக்கிறான்.

இப்படியே போனால் குழந்தைகளையும் இழந்து விடுவோம் எனப் பயந்து தேரோட்டியை அழைத்து குழந்தைகளைத் தனது உறவினர்களிடம் அனுப்புகிறாள் தமயந்தி. அயோத்யா நகரம் சென்ற தேரோட்டி, மன்னன் ருதுபர்ணனிடம் குழந்தைகளை ஒப்படைக்கிறான்.

கடைசியில் நளன் தனது இராஜ்ஜியத்தையும் மற்ற எல்லாவற்றையும் இழந்த நிலையில் "தமயந்தியை வைத்து ஆடு" என்றான் புஷ்கரன். அவ்வாறு ஆட மறுத்து தான் அணிந்திருந்த ஆடை அணிகலன்களைக் கூட கழற்றிக் கொடுத்து விட்டு ஒற்றை ஆடையுடன் தமயந்தியையும் அழைத்துக் கொண்டு வெளியேறுகிறான் நளன். தமயந்தியும் ஒற்றை ஆடையுடன் அவனுடன் செல்கிறாள்.

(தொடரும்)

இந்த துரோகத்தனமான நடவடிக்கை பெருமளவிலான அரசியல்வாதிகளை, அரசாங்க அதிகாரிகளை, காவல்துறை மற்றும் பாதுகாப்பு நபர்களை, ஊடகவியலாளர் போன்றவர்களை போட்டியிடும் அரசியல்வாதிகளால் துரோகிகளாகக் கருதி கொல்லுமளவுக்கு வழியமைந்ததுதான் தமிழ் அரசியலில் உள்ள மிகப் பெரிய சோகம்.

இந்த துரோகத்தனமான நிகழ்வின் மற்றொரு அம்சம் எதுவும் நிலையானதல்ல என்பதே. அனைத்துமே மாறக்கூடியவை தமிழ் அரசியற்கட்சிகள் மற்றும் குழுக்கள் எல்.ரீ.ரீ.ஈ யினை எதிர்த்தபோது அல்லது புலிகளை விட்டு சுதந்திரமாகியபோது, அவர்களுக்கு துரோகிகள் என முத்திரையிடப்பட்டது. எனினும் எல்.ரீ.ரீ.ஈ அல்லாத சக்திகள் தமிழ் தேசியக் கூட்டமைப்பை (ரி.என்.ஏ) உருவாக்கியதுடன் புலிகளுக்கு அடிபணிந்து நடப்பவர்களாக மாறியதுடன் இந்த துரோகி என்கிற களங்கம் அகன்று போனது. துரோகிகள் தேசப்பற்றாளர்களாக சுத்திகரிக்கப்பட்டார்கள்.

இதன்படி ஒரு காலத்தில் காட்டிக் கொடுப்பவர் என வர்ணிக்கப்பட்ட ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவரான சுரேஸ் என்கிற கந்தையா பிரேமச்சந்திரன் இப்போது ரி.என்.ஏ.யின் பேச்சாளராகி ஒரு தமிழ் தேசப்பற்றாளராக பேசி வருகிறார்.

யாராவது இன்னொருவரை துரோகி என பழிகூறி அவனையோ அல்லது அவளையோ கொல்வதற்கு அவருக்கு என்ன உரிமை உள்ளது என்கிற தார்மீகக் கேள்விக்கு அப்பால், அதில் பயங்கரமான ஒரு உண்மை உள்ளது, துரோகிகள் என கருதி கொல்லப்பட்டவர்களில் அநேகர் அந்த விளக்கத்துக்கு சற்றும் பொருத்தமற்றவர்கள் ஆவார்கள்.

அவர்களில் பெரும்பாலானவர்கள் அவர்களை எதிர்ப்பவர்களைவிட வித்தியாசமான அரசியல் கருத்துக்களை கொண்டிருந்தார்கள். பல சந்தர்ப்பங்களில் துரோகிகளாகக் காட்டப்பட்டவர்கள் அரசியல் வழிகளில் மற்றவர்கள் முன்னேறுவதற்கு இடையூறாக இருந்தவர்கள் ஆவர்.

அரசியல்வாதிகள் வாக்குகளை பெற்றுக் கொள்வதற்காக சந்திரனை பிடித்துத் தருவதாகக் கூட வாக்குறுதிகளை வழங்கினார்கள். பின்னர் அதை நிறைவேற்ற முடியாத தங்கள் இயலாமைக்கு சமாதானம் கூறுவதற்காக தங்கள் எதிரிகளை துரோகிகள் என்று பழி கூறினார்கள். ஏனென்றால் இந்த துரோகிகளால்தான் தங்களால் வாக்களிப்பட்ட இலக்கினை அடைய முடியவில்லை என அவர்கள் புலம்பினார்கள்.

துரோகத்தனத்தின் மற்றொரு அம்சம் தமிழரின் ஒற்றுமையை வலியுறுத்துவது. தமிழர்கள் ஒற்றுமையாக ஒரு ஒற்றை அமைப்பு அல்லது கட்சியை சுற்றியே வலம் வரவேண்டும் என விவாதிக்கப்பட்டது. சுருங்கச் சொன்னால் அதன் அர்த்தம் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட கட்சிக்கே வாக்களிக்க வேண்டும் என்பதாகும்.

தமிழர்களின் வாக்கை துண்டாடும் ஏனைய கட்சிகள் மீது துரோகத்தனமான நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக குற்றம் சாட்டப்பட்டது. அந்த குறிப்பிட்ட கட்சி வேட்பாளர்களுக்கு மட்டுமே ஆதரவளித்து தெரிவாக்க வேண்டும். அப்படியில்லா விட்டால் ஏனைய கட்சிகளில் இருந்து தெரிவு செய்யப்படுபவர்கள் துரோகிகள் என்கிற நியாயப்படுத்தலே இருந்தது.


ஜனநாயக அரசியல் ஆயுதம் தாங்கிய போர்க்குணத்துக்கு வழி ஏற்படுத்தியபோதும் தமிழர்களின் ஒற்றுமை பற்றிய வலியுறுத்தல் தொடர்ந்தது. இங்கும் தமிழர்களின் ஒற்றுமையை விளக்குவதற்காக குறிப்பிட்ட இயக்கத்துக்கே ஆதரவு வழங்க வேண்டும் என்று கூறப்பட்டது. ஏனைய இயக்கங்கள் துரோகிகளாகக் காட்டப்பட்டன.

தமிழ் ஈழம் என்கிற பலிபீடத்தின் முன் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்பவர்களாக கருதிய இளைஞர்கள் மீது துரோகிகள் எனக் குற்றம் சாட்டப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்கள். இதே தமிழ் சமூகம் அதை மேன்மைப்படுத்தியது.

# ஊரும் உலகமும்

## இந்தியாவுடன் இணைவதை ஜே.ஆர். விரும்பினார்

இலங்கை இந்தியாவுடன் சமஷ்டி அடிப்படையில் இணைவதை ஒரு காலத்தில் ஜே.ஆர்.ஜயவர்த்தன விரும்பினார். இலங்கை மிகச் சிறிய அரசியல் மற்றும் பொருளாதார அலகாக இருப் பதால் எதிர்கால உலகில் தனித்து இயங்குவது சிரமமானது என்று 01.01.1940 இல் ஜே.ஆர். ஜயவர்த்தனவுக்கு எழுதிய கடிதத்தில் ஜவஹர்லால் நேரு கூறியிருந்தார். இக் கடிதத்துக்கு இலங்கை தேசிய காங்கிரஸ் சார்பில் 18.01.1940 இல் திகதி பதில் அனுப்பிய ஜே.ஆர். இலங்கையின் அரசியல் இலக்கு இந்திய தேசிய காங்கிரசுடன் இணைந்து டொமினியன் அந்தஸ்துப் பெறுவதாகும் எனக் கூறினார். பின்னர் 20.07.1940 இல் நேருவுக்கு எழுதிய இன்னொரு கடிதத்தில் சுதந்திர இந்தியாவுக்கும் சுதந்திர இலங்கைக்கும் இடையிலான சமஷ்டி அல்லது நெருங்கிய உறவு பற்றியே நாங்கள் பேசவிரும்புகின்றோம் என்ற ஜே.ஆர்.ஜயவர்த்தன கூறினார்.



இவ்விடயம் தொடர்பாக இந்தியாவுடனான சமஷ்டி என்ற தலைப்பில் வெளியிட்ட ஒரு பிரசுரத்தில் ஜே.ஆர்.ஜயவர்த்தன பின்வரும் நிபந்தனைகளை முன்வைத்திருந்தார்.

1) இலங்கை மக்களே தங்கள் அரசியலைத் தீர்மானிக்க வேண்டும்.

2) இலங்கையின் அரச கரும மொழி சிங்களம்.

3) இலங்கையின் குடிசன அமைப்பை இலங்கையின் சட்ட சபையே தீர்மானிக்க வேண்டும்.

4) பாதுகாப்பு விடயங்களில் இலங்கையும் இந்தியாவும் ஒரே அலகு.

5) இந்திய மாகாணங்களையொத்த அந்தஸ்து இலங்கைக்கு வழங்கப்பட வேண்டும்.

## ஜப்பானியரை அமெரிக்கா முகாம்களில் அடைத்தது

இரண்டாவது உலக மகா யுத்தத்தின்போது அமெரிக்காவின் "பேர்ள் ஹாபர்" மீது ஜப்பான் தாக்குதல் மேற்கொண்டதைத் தொடர்ந்து அமெரிக்கா நாடு முழுவதிலும் அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தியது. இச் சட்டத்தின் கீழ் ஜப்பானியர்கள் தொடர்பாக மூன்று மோசமான கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன. அமெரிக்கப் பிரசாவுரிமை பெற்ற ஜப்பானியரையும் இக் கட்டளைகள் கட்டுப்படுத்தின.

1. இரவு 8 மணி முதல் காலை 6 மணிவரை ஜப்பானியர்கள் வீதிகளில் நடமாடக் கூடாது.


2. கலிபோர்னியா, ஓறிகன், வாஷிங்டன் ஆகிய மாநிலங்களில் ஜப்பானியர் வசிக்கக் கூடாது.

3. பாதுகாப்பு அதிகாரிகளால் பெயர் குறிப்பிடப்படும் ஜப்பானியரைத் தடுப்பு முகாம்களில் அடைத்து வைத்தல் வேண்டும்.

## முதலாவது பெண் உறுப்பினர்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதலாவது பெண் உறுப்பினர் சுபாஷினி நம்பியார். இவர் கவிக்குயில் சரோஜினி நாயுடுவின் சகோதரி.

# மின்சாரப் பொருட்களைக் கையாளும்போது...



1. மின் அடுப்பில் பால் கொதித்து வழிந்துவிட்டால் சட்டென துடைக்கக் கூடாது. உலோகக் கரண்டியால் அடுப்பில் உள்ளதைக் கிண்டுவதும் கூடாது. ஷொக் அடிக்கும் அபாயம் உண்டு.

2. அதிக மின்னல், மழை, இடி இருந்தால் "செட்ஒப் பொக்ஸ்" தொடர்பை டி.வி.யிலிருந்து விடுவிக்கவும். அபூர்வமாய் சில நேரங்களில் மின்னல் உண்டாக்கும் உயர் அழுத்த மின்சாரமோ அல்லது இடியோ தாக்கி டி.வி. பாதிக்கப்படக் கூடும்.

3. குளிர் சாதன ஃபில்டரை இரு வாரங்களுக்கு ஒருமுறை சுத்தம் செய்தால் அதிக அளவு மின்சாரம் செலவாவதை மிச்சப்படுத்தலாம்.

4. தொலைக்காட்சி, குளிர் சாதனங்கள், மின் விளக்கு போன்ற சாதனங்களை அணைத்தவுடனேயே மனம் மாறி மீண்டும் போடாதீர்கள். ஃப்ரிட்ஜில் கொம்ப்ரசரும், டி.வி.யில் பிக்சர் டியூபும், டியூப் லைட்டில் பொலஸ்டும் இதனால் பாதிக்கப்பட்டு விரைவில் பழுதாகிவிடும்.

5. குளிர் சாதனப் பெட்டியைச் சமையல் அறையில் வைக்கக் கூடாது. எரிவாயு கசிந்தால் வெளியேறும் வாயுவுடன் சேர்ந்து இரசாயன வினை புரிந்து நெருப்புப் பொறிகள் கிளம்பும். இது ஆபத்தை வரவழைக்கும். அதுபோல் ஃப்ரீஸரில் ஐஸ் சேர்ந்தால் அதை வெளியேற்ற டீஃப்ராஸ்ட் பட்டனை உபயோகிப்பதே சரியான வழி. டீஃப்ராஸ்ட் பட்டன் வேலை செய்யவில்லை என்றால், அதை திருத்த வேண்டுமே தவிர, குச்சி, கரண்டி போன்றவற்றை வைத்து ஃப்ரீஸரில் குத்தினால் அதற்குள் செல்லும் கனெக்ஷன் பைப்புகள் வெடித்து ஆபத்தை விளைவிக்கும்.

# கனடா தாஜ்மகால்!

இந்தியாவிலுள்ள தாஜ்மகாலைப் போன்று கனடாவில் ரொறன்ரோவிலும் ஒரு காதல் சின்னம் உள்ளது. 1851இல் அமெரிக்காவில் பிறந்தவர் ஜோர்ஜ் சாள்ஸ் போல்ட். பல நட்சத்திர ஹோட்டல்களுக்கு சொந்தக்காரரான இவர், ஆரம்ப காலத்தில், கிளப் ஒன்றில் பணியாற்றினார். அங்கு மனேஜராக இருந்தவரின் மகளான லூயீசை காதலித்து, 1877இல் மணந்தார். தன் அன்பை வெளிப்படுத்தும் விதமாக, தன் காதல் மனைவிக்கு அரண்மனை அமைக்க முடிவு செய்தவர், ரொறன்ரோவில் தண்ணீர் சூழப்பட்ட இடத்தில் அரண்மனை ஒன்றை கட்டினார்.



உலகின் விலை உயர்ந்த பொருட்களால் கட்டுமான வேலைகள் நடந்து கொண்டிருந்த நிலையில், ஒருநாள், தொழில் சம்பந்தமாக சாள்ஸ் போல்ட் வெளியூர் சென்றிருந்த சமயத்தில், அவரின் மனைவி இறந்து விட, மனைவியின் பிரிவால் மிகுந்த மன உளைச்சல் அடைந்த போல்ட், தன்னுடைய 65 வயதில் மரணம் அடையும் வரை, காதல் அரண்மனைக்குள் போகவில்லை.

# ஆதி சைவர்கள் வாழ்ந்த ஓர் அற்புதக்கிராமம் சங்கானை காலையடிக் கிராமம்

காலையடி கிராமம் சங்கானை மேற்கு பகுதியில் யாழ் நகரத்தில் இருந்து 15 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது.. இங்கு ஒரு மரக்காலை இருந்ததாக பலர் கூறுவர். அதனூடாக இந்த பெயரை இந்தக் கிராமம் பெற்று இருக்கலாம்.இங்கு சைவ மக்கள் வாழ்ந்த அடையாளங்களே அதிகம் காணப்படுகின்றது. மற்ற கதைகள் அனைத்துமே வெறும் கணிப்புகளேயாகும்.

பண்டத்தரிப்பு பற்றிய வரலாற்றுக் குறிப்புகளில் 12 நூற்றாண்டுகளில் இந்த ஊர் மக்களுக்கும் கன்னட பிரதேசத்தில் வாழ்ந்த வீர சைவர் என்ற பிராமணர்களுக்கு எதிராக புரட்சி செய்த அமைப்பிற்கும் பல தொடர்புகள் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த வகையில்தான் இந்த ஊர் மக்களின் பேச்சு வழக்கில் பல கன்னட சொற்கள் புழக்கத்தில் வந்தன என்று கூறப்படுகிறது.

ஆயினும் 1820ஆம் ஆண்டளவில் அமெரிக்க மிஷனரியினரால் ஆசியாவில முதன்முறையாக உருவாக்கப்பட்ட இரண்டு பாடசாலைகளில் ஒன்றான காலையடி அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை மூலமாக இந்த ஊர் உலக வரைபடத்தில் இடம் பிடித்தது.இந்தப் பாடசாலை அந்த காலத்திலேயே மேற்குலக நாடுகளில் இருக்கும் பாடசாலைகள் போன்று ஒரு சிறுவர் பராமரிப்பு நிலைய வசதியையும் வைத்தியசாலை வசதியையும் கொண்டு இருந்ததாகக் கூறப்படுகிறது. 1960 களில் பின்னர் இந்தப்பாடசாலை இலங்கை அரச கல்வித்திணைக்கழகத்தால் பொறுப்பேற்கப்பட்டு ஐந்தாம் வகுப்பு வரை மட்டுமே கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது.இங்கு .வாழும் மக்களின் பிரதான தொழிலாக விவசாயமே விளங்குகிறது. சிலர் பல ஆலயங்களுக்கு பணி விடை செய்து அந்த வருவாயில் வாழ்ந்ததாகவும் கூறப்படுகிறது. நெசவுத்தொழிற்சாலை யொன்றும் திருவாளர் சிவசுப்பிரமணியத்தின் முயற்சியால் 1960 களில் இயங்கியதாக தெரிகிறது.

1970களில் பலர் கல்வி கற்று அரச பணியாற்றினர். பல்கலைகழகங்களில் கல்வி கற்று பட்டதாரியாக வெளி வந்தனர். இந்த இளைஞர்களை ஊக்கிவித்தவர்களில் ஒருவரான ஆறுமுகம் கந்தசாமி (கந்தையா)உபாத்தியாயர் தனக்கு சொந்தமான நிலத்தை இவர்களின் உற்சாகத்திற்கு பரிசாக அளித்து மறுமலர்ச்சி மன்றம் என்ற ஒரு புதிய வரலாற்றை , ஒரு விளையாட்டுத் திடலை, ஒரு பாலர் பாடசாலையை இந்த ஊர் மக்களுக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார். அதுவரையில் இந்த ஊர் இளைஞர்கள் பணிப்புலம் சனசமூக நிலையத்தோடு இணைந்து இயங்கி வந்திருந்தார்கள்.

1972 ஆம் ஆண்டு ஆரம்பித்த இந்த மறுமலர்ச்சி மன்றம் இந்த ஊர் இளைஞர்களைப் பல துறைகளில் ஊக்குவித்தும் கலை நிகழ்ச்சிகளை நடாத்தியும் மெய் வல்லுநர் போட்டிகளை நடாத்தியும் வருகின்றது. 1989 ஆம் ஆண்டளவில் சொந்தமாக ஒரு உள்ளரங்க மேடை உள்ள கட்டடம் ஒன்றையும் ஊர் மக்களின் முயற்சியில் புதிதாக கட்டிக் கொண்டது. இங்கு ஒரு சிறந்த பாலர் பாடசாலை (காலையடி முருகன் முன்பள்ளி ) இயங்கி வருகிறது. பெரிய விளையாட்டு திடல் இங்கு உள்ளது. மாதம் ஒரு முறை நடாத்தப்படும் முழு நிலா ஒன்று கூடல்

மேலும் 1990களின் ஆரம்பத்தில் செட்டிகுறிச்சியை சேர்ந்த புலவர் வேல்முருகன் தனக்கு சொந்தமாக இருந்த இடுமன் கோவிலை பொதுக் கோவிலாக அறிவித்து பொது மக்களிடம் கையளித்தார். அது வரை ஒரு சிறிய கோவிலாக இருந்த இந்த கோயிலை பின்னர் பொறுபேற்ற நிர்வாகம் இவ்வூர் மக்களிடம் நிதி திரட்டி ஒரு தேர் ஓடும் ஆலயமாக மாற்றி உள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது இந்த கோவிலுக்கு விரைவில் இராஜ கோபுரம் கட்டப்படவுள்ளது.




## காலையடி முருகன் முன்பள்ளி விளையாட்டு விழா (காலையடி மறுமலர்ச்சி மன்ற நிகழ்வு)



1996ஆம் ஆண்டு மக்கள் இடம் பெயர்ந்து மீளக் குடியமர்ந்து கொண்டிருந்த காலத்தில் காலையடி மறுமலர்சி மன்றத்தில் ஒரு பத்திரிகை போடுவதற்குக் கூட வசதியில்லாதிருந்த ஒரு காலப் பகுதியில் மன்றம் அப்போதிருந்த, இளைஞரைப் பயன்படுத்தி காலையடி ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தையும் அதனோடு இணைந்த ஸ்ரீமுருகன் முன்பள்ளியையும் அமைக்க முற்பட்டனர். இக்காலப் பகுதியில் அம்பாள் சனசமூக நிலையம் முற்றாக செயல் இழந்து இருந்தது இந்நிலையத்தை புனரமைக்க முற்பட்ட போது அது தனி ஒருவரின் காணி எனவும் அங்கு சுதந்திரமாக செயற்படமுடியாது எனவும் ஆனால் இவ் ஊருக்கு அவசியம் ஒரு சனசமூக நிலையம் தேவை எனக் கருதிய இளைஞர்கள் பல எதிர்ப்புகளுக்கும் மத்தியில் ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தையும் ஸ்ரீமுருகன் முன்பள்ளியையும் ஆரம்பித்தனர் .

இவ்வாறு உருவாகிய நிலையம் ஊரில் உள்ள பல கலாசார சீரழிவுகளான மினி சினிமாக்கள் ,போதைப் பொருள் மதுபாவனை மது வியாபாரம் போன்றவற்றிக்கு முகம் கொடுத்து தடுத்து நிறுத்தியதோடு பாடசாலை செல்லாத பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதிலும் வெற்றி கண்டுவந்தது .அக்காலத்தில் ஸ்ரீமுருகன் சனசமூகமும், காலையடி மறுமலர்சி மன்றமும் சேர்ந்தே செயலாற்றியது இக் காலப் பகுதியில் ஊரவர்களின் பாரம்பரியங்களையும் கலாசாரங்களையும் மேம்படுத்துவதற்காக பௌர்ணமி கலைவிழாக்கள் ,வாணிவிழா ,சிவராத்திரி ,பொங்கல் விழா போன்ற விழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. குறிப்பாக அப்போதிருந்த இளைஞர் யுவதிகளால் சத்தியவான் சாவித்திரி, மயானகாண்டம், பக்த நந்தனார் போன்ற புராண நாடகங்களும் நிகழ்கால மாற்றங்கள், இதுதான் முடிவு, ஏன் இந்த மோகம்?, காலம் தான் பதில் சொல்லும், உண்மைகள் உறங்குவதில்லை, அசையும் சிலைகள் போன்ற சமூக நாடகங்களும் எமது இளைஞர்களின் படைப்புக்களாக உருவாக்கப்பட்டு மேடையேற்றப்பட்டன. இன் நாடகங்கள் அமோக வரவேற்பைப் பெற்று மீண்டும் மீண்டும் மேடை ஏற்றப்பட்டன.



சரஸ்வதி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா








அன்று நடந்த இப்பிரதேச அபிவிருத்தி செயற்பாடுகள்

# வீட்டுத்திட்டம் வழங்கக்கோரி காரை. மக்கள் ஆர்ப்பாட்டம்



கடந்த திங்கட்கிழமை காரைநகர் பிரதேச செயலகத்தில் J/40 கிராம சேவையாளர் பிரிவினைச் சேர்ந்த குறிப்பாக அடிப்படை வசதிகள் குறைந்த கிராமமாகக் காணப்படுகின்ற மருதபுர கிராம மக்கள் 76இற்கு மேற்பட்ட குடும்பங்கள் பிரதேச செயலகத்திற்கு முன்பாக இந்தியன் வீட்டுத்திட்டம் தங்களுக்கும் தரக்கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். அதனைத் தொடர்ந்து பிரதேச செயலர் ஆர்ப்பாட்டம் செய்தவர்களில் இருவரை அழைத்து அவர்களிடம் மகஜரினைப் பெற்றுக் கொண்டு திட்டங்கள் வருகின்றபோது தங்களுக்கு வீட்டுத்திட்டம் தருவதாக கூறினார் அதனை அடுத்து போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பிரதேச செயலர் வெளியில் வந்து தங்களுக்கு இது விடயமாக வாக்குறுதிகளை அளிக்கும் வண்ணம் கேட்ட போது அவர் வெளியில் வர மறுத்ததோடு மட்டுமல்லாமல் தான் வெளியில் வந்து கதைக்க முடியாது எங்கு வேண்டுமானாலும் சென்று புகார் அளிககலாம் என்று பொறுப்பற்ற தனமாக பதில் அழித்ததினால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கொந்தளிக்கும் நிலை ஏற்பட்டது.

அத்தோடு பிரதேச செயலர் தமது அன்றாடக் கடமைக்கு இடையூறு விளைவிப்பதாக கூறி ஊர்காவற்துறை பொலிஸாருக்கு தொலைபேசி மூலம் கூறியதனை அடுத்து நண்பகல்12 மணியளவில் ஊர்காவற்துறை பொலிஸ் அதிகாரிகள் உட்பட 15இற்கும் உட்பட்ட பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து இருந்தனர்.

அந்த இடத்திற்கு மக்களின் அழைப்பினை ஏற்று காரைநகர் பிரதேச சபை எதிர்கட்சித் தலைவரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அமைப்பாளருமான வீரமுத்து கண்ணன் அங்கு சென்று மக்களது ஆர்ப்பாட்டத்திற்கான காரணத்தினை கேட்டறிந்து அவர்களுடைய கோரிக்கையினை நாடாளுமன்ற உறுப்பினரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயளாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா ஊடாக மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதனிடம் முன்வைப்பதாக கூறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களை ஒரு கிழமை அவகாசத்தின் பேரில் இதற்கான முடிவினைப் பெற்றுத்தருவதாக கூறி ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை கலைந்து செல்லுமாறு அனுப்பி வைத்தார்.

இவ் ஆர்ப்பரட்டமானது காலை 9:30 மணியிலிருந்து நண்பகல் 12 மணிவரை நீடித்தது. அரச அதிகாரிகளோ, வேறு கட்சியினரோ இதுவரை தம்மை வந்து இது விடயமாக கேட்கவில்லை என்று மக்கள் விசனம் தெரிவித்தமை குறிப்பிடத் தக்கது.

## சமுதாய அடிப்படை திணைக்களத்துக்கு ஆரணி தவபாலன் நியமனம்


கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படைத் திணைக்களத்திற்கு புதிய பணிப்பாளராக திருமதி ஆரணி தவபாலன் நியமிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா மாவட்ட செயலகத்திலிருந்து இடமாற்றம் பெற்று அண்மையில் கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

முன்னர் பணிப்பாளராக கடமையாற்றிய பி.ரி.எம். இர்பான் அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள கலன்பிந்துநுவெல பிரதேச செயலகத்திற்கு உதவிப் பிரதேச செயலராக இடமாற்றம் பெற்றுச் சென்றமையைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கே இவர் நியமனம் பெற்றுள்ளார்.

ஆரணி தவபாலன் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திலும் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (90)

## வெள்ளி நற்சிந்தனை...



## உடலோடு உள்ளத்தையும் உயர்த்தும் (5)

நாம் வாழ்க்கையிலே பெற வேண்டிய வளங்களுக்கு ஏழு சம்பந்தங்கள் உண்டு. அவை உரு, குணம், அறிவின் உயர்வு, கீர்த்தி, உடல், சுகம், செல்வம் ஆகியவையாகும் அவற்றுக்கேற்ப மந்திரங்களும் அமைந்திருக்கின்றன. அவற்றின் மூலம் நாம் ஒவ்வொன்றையும் அடையலாம் ஒவ்வொரு மனிதனும், தன் தந் தையும், தாயும் பாலுணர்வு தந்த கவர்ச்சியின் மூலம் இணைந்து உறவு கொண்டு, தோற்றுவிக்கப்படுகின்றான். அதனால் பிறவியிலேயே அவனிடம் பாலுணர்வும், மாறக் கூடிய மன இயல்பும் இருக்கின்றன. இந்த அடிப்படை மன வளத்தின் மூலம் மாற்றப்பட வேண்டுமானால் அதற்கு கூடுதலான, கட்டுப்பாடான, உயர்ந்த சக்தி ஒன்று அவனுக்கு வழி காட்டவேண்டியது மிகவும் அவசியம் அதையே அவன் தன் குருநாதரின் மூலம பெறுகிறான்.

தியானத்தில் ஈடுபட்டால் உடல் அளவிலே 'நான்' என்ற நிலை மாறி, உயிர் அளவிலே 'நான்' என்ற எண்ணம் வந்து விடும். எல்லா உயிர்களுக்கும் நலம் செய்யவேண்டும் என்ற மனப்பாங்கு மனப்பக்குவம் வந்து விடும் அதைத்தான் சுவர்ககம் என்று சொன்னார்கள் மயக்கத்தில் ஆற்றிய செயல்களால் விளைந்த துன்பங்களைக் களைந்து அமைதி பெறும் உயர் நிலையே சுவர்க்கம் ஆகும்.

கடலும் அலையும் போலத் தெய்வமும் உயிர்களும் ஆகும். ஆசையே அலைகளாக இருப்பது போல, தெய்வத்தின் திருவிளையாடலே உயர்களாக இயங்குகின்றது. எனவே, ஆன்மா என்னும் போதெல்லாம் நம்முன்னே இருக்கும் தெய்வம் என்ற பேராதாரம், பரம்பொருள் இயங்குகிறது என்பதே பொருள் அது எல்லையற்ற ஆறறலுடன் செயற்பட முடியும். ஆசைகளினால் புலன்கள் கட்டுப்படும் நிலையில், இது தன்னுடன் வரையில் குறுகிவிடுகிறது. இப்படிக் குறுகிக் கட்டுப்பட்டுச் செயலாற்றும் போது அதை நர+அகம என்று சொல்லுகிறோம் இது இந்த உடலே நான், என்று எண்ணிமயங்கும் நிலை நான் என்பது மனிதத்தத்துவத்தைக் குறிக்கும் ஒரு சொல், நர+அகம் என்ற இரு சொற்களும் இணைவதே நரகம் என்று ஆயிற்று.

இதற்கு மாற்றுச் சொல்தான் சுவர்+அகம் சுவர்க்கம் என்பது இது உயிரே நான் என்று உணரும் சிறப்பு நிலை பேரியக்க மண்டலம் முழுவதும் நீக்க மற நிறைந்த மகாஆகாசத்தின் சிறு கூறுதான் இந்த உடலில் உள்ள உயிர் அதை உயர்ந்து தியானத்தில் ஈடுபட்டால் உடல் அளவில 'நான்' என்கிற நிலைமாறி, உயிர் அளவிலே 'நான்' என்ற எண்ணம் வந்து விடும்.

(தொடரும்...)

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# பதிவிருக்கப் பெட்டகம்

இன அழிப்பு (Genocide) என்ற பதப் பிரயோகம் மிகவும் எளிமைப்படுத்தப்பட்ட முறையில் ஒரு அரசியல் சுலோகமாக இன்று பயன்படுத்தப்படுகிறது. இந்தச் சுலோகத்தினைக் கையில் எடுத்துள்ள அரசியல்வாதிகள் பலரின் கைகள் இரத்தக் கறை படிந்தவை என்பதனையும் நினைவுபடுத்த வேண்டும். பொதுமக்களின் நலன் குறித்து எந்த விதமான கரிசனையும் இல்லாது எல்லாத் தரப்பினராலும் இந்தப் போர் மேற்கொள்ளப்பட்டது என்பது ஒரு மறுக்க முடியாத உண்மை.

விடுதலைப் புலிகள் பொதுமக்களினை இந்த அழிவு மிக்க போர்ப் பொறிக்குள் தொடர்ந்தும் சிக்க வைத்தனர். அத்துடன் பெருமளவான மக்கள் இராணுவத்தினரால் கொல்லப்படக் கூடிய சூழ்நிலைகளினையும் புலிகள் வேண்டுமென்றே உருவாக்கினர். ஏதோ ஒரு காரணத்துக்காகப் பொதுமக்களைத் தம்முடன் பலவந்தமாக அடையாளப்படுத்தக் கூடிய சூழலினைப் புலிகள் ஏற்படுத்தினர். அவ்வாறு செய்வதன் மூலம அவர்கள் எல்லோரும் இராணுவத்தினரின் மூர்க்கத்தனத்துக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமையினைப் புலிகள ஏற்படுத்தினர்.

இந்த நிலைமையினால் ஏற்பட்ட பயம் மக்களினைப் புலிகளுடன் இண்ணவதற்கு நெருக்குவாரப்படுத்தியது. அல்லது இந்த நிலைமையினால் மக்கள் புலிகளுடன் சேர்ந்து அவர்கள் சென்ற இடங்களுக்கெல்லாம் சென்றனர். விடுதலை என்ற பெயரில் 1995இல் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட மாபெரும் இடப்பெயர்வினையும், 1990இல் வட பகுதியில் இருந்து முஸ்லீம்கள் பலவந்தமாக வெளியேற்றப் பட்டமையினையும் நாங்கள் மறந்து விட்டோமா?

மக்களினை அவர்கள் விரும்பாத போர்ச் சூழலில் விடுதலைப் புலிகள் திரும்பத் திரும்ப அகப்படச் செய்தமையினையும், மக்களினை அவர்கள் கொலை செய்தமையினையும், மக்களினை அவர்கள் ஒரு தற்கொலைக்கு ஒப்பான பாதையில் தள்ளியமையினையும் எடுத்துக்காட்டுகளாக முன்வைத்து, தமிழீழ விடுதலைப் புலிகள் தமது சொந்த மக்களுக்கு எதிராக ஒரு இன அழிப்பினை மேற்கொண்டார்கள் என எம்மால் சொல்ல முடியுமா?

முஸ்லீம் மக்களினை வட பகுதியில் இருந்து விரட்டியமையும், முஸ்லீம் மக்களினைப் பள்ளிவாசல்களில் வைத்துக் கொலை செய்தமையினையும் விடுதலைப் புலிகள் புரிந்த இன அழிப்பு (Genocidal) நடவடிக்கைகள் என எம்மால சொல்ல முடியுமா?

இலங்கையில் இடம்பெற்ற போர் பற்றி ஒவ்வொரு தரப்பும் தமக்கு சார்பான விபரணத்தை முன்வைப்பர். ஆனால் அக்குரூரப் போரானது பல பரிமாணங்களைக் கொண்டது. எமது கடந்த கால அரசியலினைப் பற்றியும், எமது தற்கொலை அரசியல் எவ்வாறு எம்மைப் பாதித்தது என்பது பற்றியும் மக்களாகிய நாம் விமர்சன ரீதியாக மதிப்பீடு செய்வதற்கு வேண்டிய வெளிகளினையும், சந்தர்ப்பங்களையும் உருவாக்க வேண்டிய பல்கலைக்கழகம், எந்த அரசியல் எம்மை அழிவினை நோககிக் கொண்டு சென்றதோ அந்த அரசியல் மீளவும் வளருவதனை ஊக்குவிப்பது மிகவும் கவலை அளிப்பதாக உள்ளது.

இலங்கை அரசு சிறுபான்மையினரைப் பாதுகாப்பதற்குத தவறியமையும் அது ஒரு சிங்கள அரசாக உருவாகியமையும அதனால் சிறுபான்மையினர் அந்நியப்படுத்தப்பட்டதும் மறுக்க முடியாத உண்மைகள். இந்த உண்மைகளினைப் பல சிங்கள அரசியல்வாதிகளும், புத்திஜீவிகளும் ஏற்றுக்கொள்கிறார்கள்.

ஆனால் எப்போதெல்லாம் இந்தப் பிரச்சினையினைத் தீர்பபதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டனவோ அப்போதெல்லாம் இரண்டு பகுதியிலும் உள்ள தீவிரத் தரப்புக்கள் அந்த முயற்சிகளைச் சீர்குலைத்தனர். தமிழ், சிங்கள, முஸ்லீம் தரப்புகள் திறந்த முறையில் மனத்தூய்மையுடன் உரையாடுவதும், எமது கடந்த காலத் தவறுகளில் இருந்து நாம் கற்றுக் கொண்டவற்றின் அடிப்படையில் செயற்படுவதும் மிகவும் அவசியம். இதுவே நன்மை அளிக்கக் கூடிய அரசியற் கலாசாரம் ஒன்றினை எம்மத்தியில் உருவாக்கும். இது நாட்டுக்குள்ளே இடம் பெறக் கூடிய செயற்பாடுகள் மூலமாகவே சாத்தியப்படும்.

எங்களுடைய கவனம் ஜனநாயகச் செயற்பாடுகளினை உறுதி செய்வதன் மீதும், எல்லா சமூகங்களினையும் இணைத்த கூட்டணிகளை உருவாக்குவதன் மீதும் பிரதானமாக இருக்க வேண்டும். இதுவே எமது நாட்டினைப் பீடித்துள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எமக்குள்ள வழியாகும்.

**– ராஜன் ஹூல், என்.சிவபாலன், அகிலன் கதிர்காமர், கே.சிறீதரன் ஆகியோரின் அறிக்கையில்**

# நாட்டில் முழுமையான பாதுகாப்பு இருந்தும் பயங்கரவாத தடைச்சட்டம் இன்னும் வேண்டுமா?

## நாடாளுமன்றில் சந்திரகுமார் எம்.பி. கேள்வி

**இந்த நாடு முழுமையான பாதுகாப்பான சூழலுக்குள் கொண்டுவரப்பட்டிருக்கின்றது என்று தெரிவிக்கப்படும் இந்தச் சந்தர்ப்பத்தில் ஏன் தொடர்ந்தும் இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டம் அமுலில் இருக்க வேண்டும் என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் நாடாளுமன்றில் கேள்வி எழுப்பியுள்ளார்.**

அத்தோடு யுத்தகாலத்திலும் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட சந்தர்ப்பத்திலும் காணாமற்போனோர் தொடர்பில் இதுவரை எவரும் எந்தத்தீர்வையும் முன்வைக்கவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் ஜெயக்குமாரி அவரது மகள் விபூசிகாவின் விடுதலை வரவேற்கத்தக்கது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

செவ்வாயன்று நாடாளுமன்றில் நடைபெற்ற நீதி மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட குற்றவியல் நடவடிக்கை முறை சட்டக் கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான கட்டளைமீது உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

பிரதிச் சபாநாயகர் அவர்களே,

நீதி மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழான கட்டளைமீது உரையாற்றுவதற்குச் சந்தர்ப்பம் தந்தமைக்காக நான் உங்களுக்கு நன்றி தெரிவிக்கின்றேன்.

இன்றைய இந்த விவாதத்தின்போது குறிப்பாக பொலிஸ் காவலில் சந்தேக நபர்கள் 24 மணிநேரம் அல்லது 48 மணிநேரம் தடுத்து வைக்கப்படுவது தொடர்பான வாதப்பிரதிவாதங்கள் முன்வைக்கப்பட்டன. எங்களைப் பொறுத்தவரையில் 24 மணித்தியாலம் அல்லது 48 மணித்தியாலம் என்பதல்ல பிரச்சினை. இன்று இந்த நாட்டிலே சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்படும் பலர்மீது குற்றங்கள் திணிக்கப்பட்டுக் குற்றம் சுமத்தப்படும் நிலைமைகளையே நாங்கள் காண்கின்றோம்.

ஆகவே நீதித் துறையும் பொலிஸ் துறையும் குற்றவாளிகளை அல்லது சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்படுபவர்களை மனித நேயத்துடன் அணுக வேண்டும் என்பதை நான் இங்கே வலியுறுத்த விரும்புகின்றேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நீதி அமைச்சுடன் தொடர்புபட்ட மேலும் சில விடயங்களை நான் இந்த அவையிலே பிரஸ்தாபிக்க விரும்புகின்றேன். குறிப்பாக பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பது கிட்டத்தட்ட 45 வருடங்களாக அந்தந்தக் காலகட்டங்களில் இரு ந ஆட்சியாளர்களால் முன்னெடுக்கப்பட்டு புதிய் புதிய திருத்தங்கள் ஊடாக மாற்றியமைக்கப்பட்டு இந்த நாட்டிலே தொடர்ந்தும் நடைமுறையில் இருப்பதுதான் வேதனையளிக்கின்றது.

உண்மையிலே தமிழ் மக்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தைத் தங்களுக்கு விரோதமானதாகவும் தங்களைக் கட்டுப்படுத்துவதற்காகத்தான் அது தொடர்ந்தும் அமுல்படுத்தப்படுகின்றது என்றும் கருதுகின்றார்கள். ஏனென்றால் இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தினூடாகத்தான் தமிழ் இளைஞர்கள் பலர் கைதுசெய்யப்பட்டுச் சிறைகளிலே வாடும் நிலைமையும் காணாமற்போகும் நிலைமையும் உருவாகின என்பதை வரலாறு கூறும்.

யுத்த காலகட்டத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டம் தேவைவ் அது தொடர்ந்தும் அமுலில் வைத்திருக்கப்பட வேண்டும் என்ற ஒரு நியாயப்படுத்தல் இருந்தாலும் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு இன்று ஆறு வருடங்கள் பூர்த்தியாகப் போகின்ற நிலையில் இந்தச் சட்டம் தொடர்ந்தும் ஏன் இந்த நாட்டில் அமுலில் இருக்க வேண்டும்? இதன்மூலம் இன்னமும் ஒரு பாதுகாப்பற்ற அல்லது ஓர் அச்சுறுத்தலான நிலைமை இந்த நாட்டில் இருக்கின்றதா என்ற கேள்வி எழுகின்றது.

அண்மையில் இந்த நாட்டின் ஜனாதிபதி எந்தவித விசேட பாதுகாப்பும் இல்லாமல் வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு எல்லாம் சென்று வந்திருக்கின்றார் இந்தியப் பிரதமர்கூட வடக்குக்குச் சென்று வந்திருக்கின்றார்.


அரச தரப்புச் செய்திகளின் மூலமும் அறிக்கைகள் மூலமும் இந்த நாடு முழுமையான பாதுகாப்பான சூழலுக்குள் கொண்டுவரப்பட்டிருக்கின்றது என்று தெரிவிக்கப்படும் இந்தச் சந்தர்ப்பத்தில் ஏன் தொடர்ந்தும் இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டம் அமுலில் இருக்க வேண்டும் என்ற தமிழ் மக்களின் நியாயமான கேள்விக்குப் பொறுப்புச் சொல்லவேண்டிய கடமை எல்லா அரசியல் தரப்புக்களுக்கும் இருக்கின்றது. இன்று இந்தப் பாராளுமன்றம் ஒத்த கருத்துடன் கூடும் நிலைமையை நாங்கள் காண்கின்றோம் ஆகவே இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றுமுழுதாக நீக்குவதற்கு எல்லாத் தரப்புக்களும் ஒத்துழைப்பு வழங்கி தமிழ் மக்களுக்கு இருக்கின்ற ஐயப்பாட்டைப் போக்குவதற்கு முன்வர வேண்டும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே வலியுறுத்த விரும்புகின்றேன்.

அதுபோலவே காணாமற்போனோர் பிரச்சினையும் உடனடிக் கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய ஒன்று. யுத்த காலகட்டத்திலும் யுத்தம் முடிவடைந்த காலகட்டத்திலும் ஆயிரக் கணக்கான இளைஞர்கள் யுவதிகள் காணாமல்போயிருக்கின்றார்கள். இவர்கள் சம்பந்தமாக யாருமே ஒரு தீர்வை இன்னமும் முன்வைக்கவில்லை. அதாவது யார் ஆட்சியில் இருந்தாலும் அவர்களால் இவர்கள் பற்றிய ஒரு தீர்க்கமான முடிவு சொல்லப்படுவ தில்லை.

அவ்வப்போது ஆணைக்குழுக்கள் விசாரணைக் குழுக்கள் என்பன நியமிக்கப்படுகின்றனவே தவிர அவற்றுக்கு ஊடாக நியாயம் கிடைக்கும் சூழல் இல்லை. கடந்த ஆட்சிக்காலத்திலும்கூட ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

அதன் நம்பகத்தன்மை தொடர்பாக காணாமற் போனவர்களின் உறவினர்களால் பலத்த சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது. அந்த ஜனாதிபதி ஆணைக்குழு தொடர்ந்து செயற்பட்டுக் கொண்டிருக்கும் இந்த வேளையில் காணாமற்போனவர்களின் உறவுகள் அந்த ஆணைக்குழுவின் முன்னிலையில் சொல்கின்ற விளக்கங்கள் நிராகரிக்கப்படுகின்றமையும் அதனால் அதன்மீது நம்பிக்கையில்லாத ஒரு நிலைமையும் இன்று உருவாகியிருக்கின்றது.

ஆகவே காணாமற்போனோர் எங்கே இருக்கிறார்கள் என்ற விடயம் தொடர்பாக காணாமற்போனோரின் உறவுகளுக்குத் தெரியப்படுத்த வேண்டிய கடப்பாடு



பொறுப்புள்ள அரசாங்கம் என்ற வகையில் புதிய அரசாங்கத்திடம் இருக்கின்றதென்று நான் கருதுகின்றேன். ஏனென்றால் புதிய மாற்றத்திற்கூடாக உருவாக்கப்பட்ட அரசின்மீது காணாமற்போனோரின் பெற்றோர் மிக எதிர்பார்ப்புடன் இருக்கின்றார்கள்.

அவர்கள் இன்று வீதிகளில் இறங்கி கண்ணீர் மல்க தங்களது கோரிக்கைகளை எல்லாத் தரப்பினருக்கும் முன்வைக்கின்றார்கள். ஆனால் அவர்களுக்கு இதுவரை எந்த நியாயமான முடிவும் சொல்லப்படவில்லை. ஆகவே இதில் சரியான பொறிமுறையமைப் பொன்று காணப்பட வேண்டும். உண்மையிலேயே அவர்கள் காணாமற்போனதற்குக் காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

சில இரகசியத் தடுப்பு முகாம்கள் அமைக்கப்பட்டிருந்ததாக இப்பொழுது சொல்லப்படுகின்றது. அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் இரகசியத் தடுப்பு முகாம்கள் இருப்பது தொடர்பாகத் தன்னிடம் சாட்சிகள் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்.

அவரது வாக்கு மூலத்தின் அடிப்படையில் நியாயமானதொரு விசாரணை மேற்கொள்ளப்பட்டு காணாமற்போனவர்கள் இரகசிய முகாமகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்களா? அல்லது அவர்கள் எங்கே இருக்கிறார்கள்? போன்ற விடயங்களை வெளிப்படுத்துவதற்கு இந்த அரசு பொறுப்புடன் செயற்பட வேண்டுமென்பதை நான் வலியுறுத்துகின்றேன்.

இதேவேளையில் கைதுசெய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டிருந்த ஜெயக்குமாரி அண்மையில் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றார். அதுபோல பிரான்ஸ் நாட்டிலிருந்து வந்த பகீரதி என்ற பெண்மணியும் அவரது பிள்ளையும் தடுப்புக் காவலிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள். தமிழ் மக்கள் இதனை நல்ல விடயமாகப் பார்க்கின்றார்கள். இப்படியாக வயதுமுதிர்ந்த பெண்மணிகள் மற்றும் சிறுபிள்ளைகளைக்கூட சந்தேகத்தின் பேரில் கைதுசெய்து நீண்டகாலம் தடுத்துவைப்பது தமிழ் மக்களின் மனங்களைப் புண்படுத்தும் செயலாகும். இவ்விடயத்தில் அமைச்சர் நியாயமான அடிப்படையில் அவர்கள்ளை விடுதலை செய்ய முன்வந் திருப்பதையிட்டு இந்த அவையிலே அவருக்கு எனது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவிக்க விரும்பு கின்றேன்.

கடந்த பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி இந்த அவையிலே நடைபெற்ற குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டமூலம் தொடர்பான விவாதத்தின்போதும் நீண்ட காலமாகத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் யுவதிகளின் விடுதலை தொடர்பாக நான் பிரஸ்தாபித்திருந்தேன்.

அப்போது எனது உரையின் இடையிலே குறுக்கிட்ட அமைச்சர் இரண்டு வாரங்களில் அதற்கான விசாரணை அறிக்கை தன்னிடம் கிடைத்துவிடு மென்றும் அந்த அறிக்கையின் பிரகாரம் விரைவாக அவர்களை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்திருந்தார். அப்படி அவர் கூறி இன்று ஒரு மாதமாகின்றது. இந்த நிலையில் இது தொடர்பாக ஒரு முடிவை எடுக்க வேண்டும்.

நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களில் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டவர்கள் சிறுசிறு குற்றங்கள் சுமத்தப்பட்டவர்கள் மற்றும் சிறு குற்றங்களுக்காகத் தண்டனை அனுபவிப்பவர்கள் என மூன்று தரப்பினர் இருக்கின்றார்கள்.

குற்றமிழைத்தவர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கப்படுகின்ற பல சந்தர்ப்பங்கள் இந்த நாட்டிலே இருக்கின்றன. ஆனால் இந்த தமிழ் இளைஞர்கள் விடயத்தில் மட்டும் அந்த பொது மன்னிப்பு என்பது விதிவிலக்காக இருப்பதை நாங்கள் அவதானிக்கின்றோம்.

ஆகவே நீண்டகாலச் சிறைவாசத்திலிருந்து விடுபட்டு அவர்கள் தங்களுடைய குடும்பங்களுடன் இணைந்து சந்தோசமாக வாழ்வதற்குரிய ஒரு சூழலை ஆட்சி மாற்றத்துக்கூடாக வந்த புதிய அரசு உருவாக்க வேண்டுமென்பதை நான் இச்சந்தர்ப்பத் தில் வலியுறுத்துகின்றேன். ஏனென்றால் நீண்டகாலத் தடுப்பு அவர்களுக்கு விரக்தி நிலைமையை ஏற்படுத்தியிருக்கும். அத்தோடு அது அவர்களது குடும்ப பொருளாதார நிலைமைகளையும் மிகவும் மோசமாகப் பாதித்திருக்கும். தாங்கள் எந்த நேரத்திலும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்படலாம் என்ற ஒரு மனோநிலையில் தமிழ் இளைஞர்கள் வாழ்ந்துவருவதால்தான் அவர்கள் இந்த நாட்டைவிட்டு புலம் பெயரக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுகின்றது.

தமிழ் இளைஞர்கள் தேசிய நல்லிணக்கத்துக்கு எதிராகவோ அல்லது தேசிய பாதுகாப்புக்கு எதிராகவோ செயற்படுபவர் களல்லர்.

இத்தகைய மனோநிலையில்தான் இன்றைய இளைய சமுதாயம் வாழ்ந்துகொண்டிருக்கின்றது. ஆகவே அவர்களுக்கு நம்பிக்கையளிக்க வேண்டியது இந்த அரசின் பொறுப்பு என்பதை வலியுறுத்துகின்றேன் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# டெங்கு ஒழிப்பு வாரமொன்றை நாடளாவிய ரீதியில் முன்னெடுக்க ஏற்பாடு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் டெங்கு ஒழிப்பு வாரமொன்றை முன்னெடுப்பதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 26 ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி வரையான காலப் பகுதியில் டெங்கு ஒழிப்புத் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக அமைச்சின் தொற்றுநோய் ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

வானிலை மாற்றத்துடன் மீண்டும் டெங்குக் காய்ச்சல் பரவும் அபாயம் உள்ளதால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக தொற்றுநோய் ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் பபா பலிஹவடன கூறியுள்ளார்

இதேவேளை, இந்த வருடம் இதுவரையான காலப் பகுதியில் 10 ஆயிரத்து 650 பேர் டெங்குக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதில் 46 வீதமான நோயாளர்கள் மேல் மாகாணத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

42.2012 இல் ஒலிம்பிக் போட்டி நடைபெற்ற நாடு எது?
(01).சீனா (02).இங்கிலாந்து (03).லண்டன் (04).ஏதென்ஸ்


43.ஐக்கியநாடுகள் சபையினால் உலக புத்தக தினமாக அறிவிக்கப்பட்ட தினம் எது?
(01).மார்ச் 8 (02).பெப்ரவரி 14 (03).ஒக்டோபர் 6 (04).ஏப்ரல் 23

44.தரப்பட்டுள்ள கோள்களுள் வாயுக்களால் ஆன கோள் எது?
(01).பூமி (02).வியாழன் (03).சந்திரன் (04).செவ்வாய்

45.மிகவும் வேகமாக ஓடக்கூடிய விலங்கு எது?
(01).மான் (02).முயல் (03).சிறுத்தைப்புலி (04).குதிரை

46.இலங்கையில் புதிதாக அமைக்கப்படுகின்ற துறைமுகம் அமைந்துள்ள இடம் எது?
(01).காங்கேசன்துறை (02).பருத்தித்துறை
(03).திருகோணமலை (04).அம்பாந்தோட்டை

47.தரப்பட்டுள்ள விளையாட்டுப்பொருளின் பெயர் எது?



(1).தள்ளுவண்டி
(2).சுழல்வண்டி
(3).சில்லுவண்டி


48.வித்துக்களின் பயன் அல்லாதது எது?
(01).புதியதாவரம் உருவாகும்
(02).தாவரங்களுக்கு உணவாகும்
(03).விலங்குணவாகும்

49.தரப்பட்டுள்ள பிராணிகளில் பற்கள் இல்லாத விலங்கு எது?
(01).ஆமை (02).மாடு (03).நாய் (04).ஆடு

50.இலங்கையில் வாகன விபத்துக்கள் அதிகம் நடைபெறும் மாவட்டம் எது?
(01).கொழும்பு (02).யாழ்ப்பாணம் (03).வவுனியா (04).மன்னார்

51.மாணவன் ஒருவன் மின்காந்தத்தை உருவாக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டான். அதிக மின்காந்த சக்தியைப் பெற ..........
(01).கம்பிகளின் சுற்றை அதிகரிக்க வேண்டும்
(02).மின்கலங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும்
(03).மேற்கூறிய இரண்டும் பொருந்தும்

52.இழுத்துக்கொண்டு செல்லக்கூடிய இரண்டு சில்லுவண்டியில் சில்லுகள் பொருத்த மிகவும் பொருத்தமான இடம்




(1)A (2)B (3)C

**நேற்றுமுன்தினம் பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்**

(01).1.35070 2. 0 3 4 0 0 0 3.875g 4.கொப்பி - 125.00, பேனா - 18.75, கடிதஉறை - 3, பென்சில் - 8 மொத்தம் - 305.00 5.292.50 7.7410ml 8.12 9.150cm
10.3மணி 15நிமிடம் 11.3/4 12.241புத்தகங்கள் 2மீதி (03).14.3 15.2 16.3
17.3 18.2 (04).19.2 20.2 21.3 22.2 23.3 24.2 25.2 26.3 27.2 28.2
29.2 30.2 31.3 32.2 33.9874 34.வடக்கு 35.60 36.2 37.2 38.3 39.1

**பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



## தரம் - 4 பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - II
1 மணி 30 நிமிடம்

# கல்வி முரசு



எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.
(01).சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக

01.குமரன் தனது வீட்டிலிருந்து தனது நண்பன் வீட்டை அடைவதற்கு 4km நடக்க வேண்டும். நண்பன் வீட்டிலிருந்து மைதானத்திற்குச் செல்ல 8km நடக்க வேண்டும். மணிக்கு 3km வேகத்தில் நடக்கும் குமரன் மு.ப.8.30இற்கு வீட்டிலிருந்து புறப்பட்டு நண்பன் வீட்டினூடாக மைதானத்திற்கு நடந்து சென்றான். எனின், அவன் மைதானத்தை அடைந்த நேரம் எது?
(01).பி.ப 10.30 (02).மு.ப 11.30 (03).பி.ப 12.30

02.குமரன் கணித பாடத்தையும், தமிழ்ப்பாடத்தையும் விரும்புகிறான். சாந்தன் தமிழ்ப் பாடத்தையும், சுற்றாடல் பாடத்தையும் விரும்புகிறான். காந்தன், தமிழ், கணிதம், சுற்றாடல் ஆகிய பாடங்களை விரும்புகிறான். எனின், மூவராலும் விரும்பப்படும் பாடம் எது?
(01).தமிழ் (02).கணிதம் (03).சுற்றாடல்

03.விமலன் கமலனிலும் உயரம் கூடியவன். கமலன் நிமலனிலும் உயரம் கூடியவன். அமலன் விமலனிலும் உயரம் கூடியவன். இவர்களுள் உயரம் கூடியவர் குறைந்தவர் முறையே
(01).விமலன், அமலன் (02).அமலன், நிமலன் (03).கமலன், நிமலன்

(02).சொற்கூட்டத்தில் பொருத்தமற்ற சொல்லைக் கோடிடுங்கள்

04.மா, அன்னாசி, வாழை, பலா

05.உடுக்கு, வயலின், தவில்

(03).கீழே உள்ள 3 கூற்றுக்களில் ஒன்று பிழையானது. அதனைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக்குள் எழுதுக.

06. (1) குயில் கூடு கட்டியது
(2) காகம் அடை காத்துக் குஞ்சு பொரித்தது
(3) குயிலுக்குக் கூடு கட்டத் தெரியாது (..........................)

07. (1) அரிச்சந்திரன் சத்தியத்தைக் காத்தான்.
(2) ஔவையார் திருக்குறளை இயற்றினார்.
(3) பாரதியார் சிறந்த கவிஞர் (..........................)

08.பின்வரும் சொற்களானது தமிழ் எழுத்துக்களுக்கு இலக்கங்கள் ஒழுங்குமுறையில் எழுதப்பட்டுள்ளன. அதனை அவதானித்து அடுத்து எழுதப்பட்ட சொல்லுக்குரிய பொருத்தமான இலக்கத்தைத் தெரிவு செய்க.
கானம் - 123, கரம் - 453 ஆயின் "கானகம" என்னும் சொல்லுக்கு வருவது
01.1234 02.1243 03.2143

(04).பின்வரும் வாக்கியங்களைக் கருத்துள்ளவையாகத் திருத்திய மொழிநடையில் எழுதுங்கள்.

09.நேத்து நான் சோறுசாப்பிட்டன்.
.................................................................................................

10.மாலதி தபால் கந்தோரிலை காசோலையை மாத்தினவள்.
.................................................................................................

(05).11தொடக்கம் 13 வரையான வினாக்களுக்கு இத்தரவுகளைப் பயன்படுத்துங்கள்

| | | |
|---|---|---|
| ஆடுகள் 17 | கோழிகள் 42 | வாத்துக்கள் 18 |
| பன்றிகள் 28 | முயல்கள் 22 | |

11. பண்ணையில் உள்ள பறவைகளின் எண்ணிக்கை யாது?
(01).84 (02).60 (03).38

12. பண்ணையில் நாலுகால் விலங்குகள் எத்தனை?
(01).84 (02).45 (03).67

13. இந்தப்பண்ணையில் வரக்கூடிய கொடிய தொற்றுநோய் ஒன்றை எழுதுங்கள்?
.......................................................................................................

**(06). பின்வரும் பாடலை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்**

01. கொக்கு ஒன்று கரையிலே
ஒற்றைக் காலில் நிற்பதைக்
கொப்பிலிருந்த குருவியும்
குறுகுறு என்று பார்த்தது

02. குளத்து நீரின் பரப்பிலே
நீந்தி வந்த மீனினை
கொக்கு கௌவிப் பிடித்திட
குருவி பறந்து சென்றது

14. குளம் என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுங்கள்
.......................................................................................................

15. மீனை என்ற சொல்லின் பன்மைச்சொல்லை எழுதுங்கள்
.......................................................................................................

16. பாடலில் இடம்பெற்றுள்ள இரட்டைக்கிளவியை எழுதுங்கள்
.......................................................................................................

17. பறந்து சென்றது என்ற வாக்கியத்தின் எழுவாய் எது?
.......................................................................................................

18. இங்கு இடம்பெற்றுள்ள வினையடைமொழிச் சொல் ஒன்று எழுதுங்கள்
.......................................................................................................

19. கௌவிப் பிடித்திட என்பதனாற் கருதப்படுவது யாது?
.......................................................................................................

20. அஃறிணை ஒருமை இறந்தகால வினைச்சொல் ஒன்றைப் பாடலில் இருந்து தருக?
.......................................................................................................

21. இங்கு இடம்பெற்றுள்ள பெயராகவும், வினையாகவும் வரக்கூடிய சொல் ஒன்று தருக?
.......................................................................................................

22. குருவி எங்கு இருந்தது?
.......................................................................................................

23. இப்பாடலில் இடம்பெற்றுள்ள பறவைகள் இரண்டின் பெயர்களை எழுதுங்கள்
.......................................................................................................

**(07). பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியமாக்கி எழுதுங்கள்**

24. வைரஸ் / தொற்றும் / நோயாகும் / கிருமியினால் / டெங்குக்காய்ச்சல் / ஒரு
.......................................................................................................

25. இரு / அந்த / நிழல் / பக்கங்களிலும் / வீதியின் / மரங்கள் / நின்றன
.......................................................................................................

**(08). அடைப்பிற்குள் இருக்கும் சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து கீறிட்ட இடத்தில் எழுதுங்கள்.**

26. மாலா ஆக்கம் செய்வதற்காக .............................. பயன்படுத்தித் துணியை வெட்டினாள்.
(கத்தரிக்கோழைப், கத்தரிக்கோலைப், கத்தரிக்கோளைப்)

27. இந்துக்கள் தீபாவளித் தினத்தில் .............................. வைத்து நீராடுவார்கள்.
(எண்ணை, எண்ணேய், எண்ணெய்)



**(09). தரப்படும் சொற்களைப் பயன்படுத்தி 5 சொற்களுக்குக் குறையாத வாக்கியங்கள் எழுதுங்கள்.**

28. சிறுவர்கள், வீடு, பூக்கள், வீசும், மலர்ந்து
படித்தான், மலர்ந்தன, படித்தனர், ஏற்றி, பட்டம்,
மணம், கடற்கரையில், விளையாடினார்கள், அதிகாலையில்,
.......................................................................................................

**(10). தரப்பட்ட வாக்கியத்திற்குப் பொருத்தமான நிறுத்தற்குறியீடுகளை இடுக**

29. பெரியவரே உங்களுக்கு என்ன வேண்டும் எனக் குமரன் கேட்டான்

**(11). தரப்படும் மரபுத்தொடர்களுக்கான உட்கருத்தைத் தமிழில் எழுதுக**

30. விட்டுக்கொடுத்தல் - ..............................

31. பூசி மெழுகுதல் - ..............................

**(12). பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தை தமிழில் எழுதுக**

32. பாடம கியலா தென்ன - ..............................

33. மட்ட பத் எப்பா - ..............................

**(13). தமிழில் உள்ளவற்றின் சிங்களக் கருத்தினை தமிழில் எழுதுக.**

34. எனக்குக் கொஞ்சம் தண்ணீர் தாருங்கள் ..............................

35. ஏன் நேற்று வரவில்லை ..............................


**(14). பின்வருவனவற்றின் கருத்தினைத் தமிழில் எழுதுக**

36. I like cake - ..............................

37. please come here - ..............................

**(15). சரியான விடையை எழுதுக**

38. தரப்பட்டுள்ள படத்திற்கு பொருத்தமான ஒரு வசனம் எழுதுங்கள்



.......................................................................................................

39. தரப்பட்டுள்ள பிராணியால் சூழலுக்குக் கிடைக்கும் நன்மை ஒன்றை எழுதுங்கள்




.......................................................................................................

40. இந்த விளையாட்டின் பெயரை தமிழில் எழுதுங்கள்



.......................................................................................................

41. கையில் உள்ள பொருள் பற்றி என்ன எழுதுவீர்கள்?



.......................................................................................................

# நெருக்கடியான சூழலுக்கு மத்தியிலும் சிறப்பாக பணியாற்றியவர் ஆனந்தசிவம்

## கிளி.வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு



நெருக்கடியான சூழலிலும் சிறப்பாகப் பணியாற்றியவர் சு.ஆனந்தசிவம் என கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கந்தசாமி முருகவேல் தெரிவித்தார்.

கிளிநொச்சி வலயத்தில் நாளை சனிக்கிழமை ஓய்வு பெற்றுச்செல்லவுள்ள பளைக் கோட்டக் கல்வி அதிகாரி சுப்பிரமணியம் ஆனந்தசிவத்திற்கு கிளிநொச்சி வலயத்தின் ஊழியர் நலன்புரி சங்கத்தினரால் நேற்றுமுன்தினம் நடாத்தப்பட்ட பிரியாவிடை நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் தெரிவித்ததாவது. ஆனந்தசிவம் அமைதியானவர். ஆனால் கடமைகளைத் திட்டமிட்டு திறம்பட செய்யக்கூடியவர். தனது 34 ஆண்டுகால கல்விப்பணியில் பல மாணவர்களை உயர்ந்த நிலைக்கு உருவாக்கியவர் எனவும் தெரிவித்தார்.

கிளிநொச்சி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிளிநொச்சி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

சுப்பிரம்ணியம் ஆனந்தசிவம் 1982 ஆம் ஆண்டு வன்னேரிக்குளம் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகக் பணியினைத் தொடங்கி அப்பாடசாலையின் அதிபராகி பின்பு ஸ்கந்தபுரம் இல.01, இல 02 ஆகிய பாடசாலைகளின் அதிபராகப் பணியாற்றியதுடன், 2010 ஆம் ஆண்டு பளைக்கோட்டக் கல்வி அதிகாரியாக நியமிக்கப்பட்ட அவர் போரினால் பெரும் அழிவுகளை எதிர்கொண்டிருந்த பளைக்கோட்டத்தின் பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதிலும் மாணவர்களின் கல்வியினை வளர்த்தெடுப்பதிலும் அர்ப்பணிப்புடன் பணியாற்றியவர்.

வன்னேரிக்குளம் மகா வித்தியாலயத்தில் பணியாற்றிய காலங்களில் பல மாணவர்களை உயர்நிலைக்குக் கொண்டு வருவதிலும் சிறப்பாகப் பணியாற்றியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (160)

# கோப்பாய் பிரதேச செயலகத்தில் மகளிர்தின நிகழ்வுகள்

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகம் நடாத்திய சர்வதேச மகளிர்தின நிகழ்வு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந் தினராக ஓய்வுநிலை மாவட்ட நீதிபதி இளங்கோவன் சறோஜினி பிரதம விருந்தினராகவும் சிறப்பு விருந்தினரர்களாக யாழ்ப் பாணம் தாய் சேய் நல வைத்திய அதிகாரி வைத்தியர் சி.குமாரவேல், சர்வதேச லயன்ஸ் கழகங்களின் இரண்டாவது உப மாவட்ட ஆளுநர் வைத்திய கலாநிதி வை.தியாகராசாவும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் கோப்பாய் பிரதேசத்தைச் சேர்ந்த பெண் எழுத்தாளர் கௌரவிப்பு கோப்பாய் பிரதேச மாற்றாற்றலுள்ள பெண் தொழில் முயற்சியாளர்கள் கௌரவிப்பு பிரதேச சிறந்த தொழில் முயற்சியாளர் கௌரவிப்பு நிகழ்வுகளும் இடம்பெற்றன. (08)

# வாத்தியக் கலைஞர்களுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்.நிருபர்)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் பகுதிநேர தமிழ் வாத்தியக் கலைஞர்களுக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

கர்நாடக இசை, வயலின், மிருதங்கம், புல்லாங்குழல், வீணை, கடம், கஞ்சிரா, மோர்சிங், தம்புரா போன்ற வாத்தியக் கருவிகளுக்கே பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பாதாரிகள் இசைத் துறையில் அங்கீகரிக்கப்பட்ட நுண்கலைத்துறை கல்லூரி அல்லது இசைக்கல்லூரியில் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும் ஒன்றுக்கு மேற்பட்ட வாத்தியங்களை வாசிக்கும் ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும். 35 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் சான்றிதழ்களின் பிரதிகளுடன் தமது விண்ணப்பங்களை பதிவுத்துபாலில் பணிப்பாளர் நாயகம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், சுதந்திர சதுக்கம், கொழும்பு -07 என்ற முகவரிக்கு எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைத்தல் வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (10)

# அன்பில் மலர்ந்த அமர காவியம் திருப்பாடுகளின் காட்சி...

யாழ். திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்குகின்ற மாபெரும் அரங்க ஆற்றுகையான "அன்பில் மலர்ந்த அமர காவியம்" திருப்பாடு களின் காட்சி எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நான்கு நாட்களுக்கு இல.238, பிரதான வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

வியாழன், சனி, ஞாயிறு தினங் களில் மாலை 6.45 மணிக்கு ஆரம்பமாகும் .திருப்பாடுகளின் காட்சி வெள்ளிக்கிழமை மட்டும் மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

கலைக்கான பணியில் பொன்விழா ஆண்டில் கால் பதித்துள்ள திருமறைக் கலாமன்றம் தனது தோற்றத்திற்கு காரணமாக அமைந்த திருப்பாடுகளின் காட்சியை கடந்த 50 ஆண்டுகளாக தொடர்ச்சியாக மேடையேற்றி வருகின்றது. இறைமகன் இயேசுவின் பாடுகளின் வரலாற்றை காலத்திற்கேற்ற சிந்தனைகளை உள்வாங்கி புதிய புதிய கோணங்களில் மேடையேற்றிவந்துள்ள திருமறைக் கலாமன்றம் இவ்வாண்டில் ஆரம்ப காலங்களில் மன்ற இயக்குநர் நீ.மரியசேவியர் அடிகளாரின் எழுத்துருவிலும் நெறியாள்கையிலும் மேடையேற்றப்பட்டு மக்கள் மனதில் நீங்காத இடத்தைப்பிடித்த அன்பில் மலர்ந்த அமர காவியத்தை புதிய மாற்றங்களுடன் மீண்டும் மேடையேற்றுகின்றது.

முதல் முதலாக 1969 ஆம் ஆண்டில் உரும்பிராயிலும், 1971 ஆம் ஆண்டில் யாழ்.கோட்டை பெரும் மதில்ப் பின்னணியை அடிப்படையாகக் கொண்டு முற்ற வெளியிலும், பின்னர் 1995 ஆம் ஆண்டில் யாழ். திருமறைக் கலாமன்ற அரங்கிலும் "அன்பில் மலர்ந்த அமர காவியம்" மேடையேற்றப்பட்டது. இவ்வாற்றுகை 1971 ஆம் ஆண்டில் வரலாறு காணாத சனத்திரளுடன் மேடையேற்றப்பட்டதும், பல்வேறு வரலாற்று சம்பவங்களை பதிவாக்கிக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

பிரமாண்டமான அரங்க அமைப்பு, காட்சியமைப்பு, இசையமைப்பு, ஒலி,ஒளி போன்றவற்றுடனும் அரங்கிலும் ,அரங்கப் பின்னணியிலுமாக இருநூறுக்கும் அதிகமான கலைஞர்களுடனும் மேடையேற்றப்படுகின்ற திருப்பாடுகளின் காட்சி இலங்கையிலே இடம்பெறுகின்ற மிகப்பெரிய அரங்க ஆற்றுகையாக அமைவதுடன் பல்லாயிரக்கணக்கான பார்வையாளர்களை ஈர்த்தும் வருகின்றது. இம்முறை அன்பில் மலர்ந்த அமர காவியம் திருப்பாடுகளின் காட்சிக்கான நெறியாள்கையை மன்றக் கலைஞரான திரு. இரத்தினசிங்கம் ஜெயகாந்தன் மேற்கொண்டுள்ளார்.

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்? அதன் இலக்கணமாக- இலக்கியமாக - இலட்சியமாக இலங்குகின்றது இறைமகன் கிறிஸ்துவின் நிறைவான வாழ்க்கை. தந்தை மடியில் அன்பின் ஒளியாகத் இருந்தவர்- வாழ்வின் படியில் அன்பின் வழியாகத் திகழ்ந்தவர்- சாவின் பிடியில் அன்பின் பழியாக இறந்தவர்- அன்பின் வடிவில் அன்பின் மொழியையே மலர்ந்தார். சத்தியத்தின் அருட்சாரம்- சகவாழ்வின் திருச்சாரம்- நித்தியத்தின் பொருட்சாரம்- நிதம் அன்புக் குணச்சாரம்.

இன்பப் பெருக்காம் இறைவன் அன்பின் இருப்பிடம்- அன்பின் பிறப்பிடம் - அன்பின் வடிவம். அன்பேமயம். அவரது வாழ்வுதான் அன்பில் மலர்ந்த அமர காவியமாக மேடையேறுகின்றது.

# விவசாயம் தொடர்பான விபரங்கள் திரட்டல்

கிளிநொச்சி மாவட்ட செயல்கத்தின் புள்ளிவிபரக் கிளையினரால் விவசாயம் தொடர்பான தகவல்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் .நெல் , மேட்டு நிலப் பயிர்கள் தொடர்பான புள்ளிவிபரங்கள் பெறப்பட்டு வருகின்றன.

சென்ற வருடம் ஒக்ரோபர் மாதம் முதல் இந்த வருடம் ஏப்பிரல் மாதம் வரையிலான காலத்தில் எவ்வளவு நிலப்பரப்பில் விதைப்பு இடம்பெற்றது.

எவ்வளவு அறுவடை செய்யப்பட்டது போன்ற விபரங்கள் பதிவு செய்யப்பட்டு அவை மாவட்ட செயலாளர் ஊடாக தலைமைப் பணிமனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

இதனை விட கிளிநொச்சி நகரப பிரதேசத்தில் உணவுப் பொருள் களின் விலைகள் தொடர்பாக வாராவாரம் தகவல் திரட்டி அவை யும் தலைமைச் செயலகத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது. (90)

## முரசின் இன்றைய பலன்

(20.03.2015 வெள்ளிக்கிழமை)

ஜய வருஷம் பங்குனி மாதம் 06 ஆம் திகதி.
சித்தம் யோகம் / அமாவாசை திதி கரிநாள்
பூரட்டாதி நட்சத்திரம் பிற்பகல் 12.32 வரை. பின் உத்தரட்டாதி
சுபநேரம் 6.18 - 07.48 வரை இராகுகாலம் 10.48 - 12.18 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
விழகாலை வேளையில் கண்ட கனவு பலித்துவிடலாம் என்ற அச்ச உணர்வு.

**ரிஷபம்**
வெளியூர்ப் பயணம் இறையருளால் வெற்றி இலக்கினை எட்டி விடல்.

**மிதுனம்**
உதவி கேட்டு வந்தவரின் நடத்தைப் பாங்கினை எண்ணி நம்பகம் ஏற்படாமை.

**கடகம்**
பழைய பொருட்களை கொள்வனவு செய்ய வந்தவருடன் வாக்கு வாதம் கலகம் தக்க வைத்தல்.

**சிம்மம்**
நீர் மூலம் வெளியூர் செல்லும் முயற்சியினை மேற்கொள்ள மனையாள் விரும்பாமை.

**கன்னி**
அசாதாரண வேகத்தினால் விபத்து ஏற்படும் நிலைப்பாடு.

**துலாம்**
நோய் நிலை அறிய மருத்துவ பரிசோதனை மேற்கொள்லல்.

**விருச்சிகம்**
விளம்பரத்தில் சந்தேகம் வலுத்ததால் கைவிட்டு விடல்.

**தனுசு**
சுற்றுப்புறச் சூழல் நன்கு காணப்படாமையினால் நிலத் துண்டினை கொள்வனவு செய்ய விரும்பாமை.

**மகரம்**
சக ஊழியர்களுடன் ஒத்துப் போவதால் பணியில் ஏற்பட்ட தேக்கம் நீங்கி விடல்.

**கும்பம்**
மருத்துவர்கள் கைவிட்ட நிலையில் தெய்வ தலத்திற்கு செல்லும் நிலைப்பாடு.

**மீனம்**
புதியன கொள்வனவு செய்கையில் நம்பகத்தைப் பாருங்கள்.

# தொடர்கிறது தலை துண்டிப்பு

## ஈராக்கில் ஐ.எஸ்.ஐ.எஸ். அட்டூழியம்



ஈராக் அரச ஆதரவு படையை சேர்ந்த நான்கு பேரின் தலையை துண்டித்து கொடூரமாக கொல்வது போன்ற புகைப்படங்களை வெளியிட்டு ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் மீண்டும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளனர். சிரியா மற்றும் ஈராக்கின் பகுதிகளை கைப்பற்றி தனி இஸ்லாமிய தேசத்தை உருவாக்கியுள்ள ஐ.எ.ஸ் ஐ.எ.ஸ. தீவிரவாதிகள் பல்வேறு கொடூர நிகழ்வுகளை அரங்கேற்றி வருகின்றனர்.

குறிப்பாக தங்களிடம் சிக்கிய பிணைக்கைதிகளின் தலையை துண்டிப்பதுடன், பகிரங்கமாக எச்சரிக்கையும் விடுக்கின்றனர். இந்நிலையில் தற்போது ஈராக் அரச ஆதரவு படை வீரர்கள் நாலவரின் தலைகளை துண்டிப்பது போன்ற புகைப்படங்களை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

அந்த புகைப்படங்களில், ஈராக் அரச ஆதரவு படையை சேர்ந்த 4 வீரர்கள் கறுப்பு நிற உடை அணிந்து முழங்காலில் மண்டியிட்ட நிலையில் உள்ளனர். அவர்களின் பின்புறம் கத்தியுடன் நிற்கும் தீவிரவாதிகள் அவர்களின் தலையை துண்டிக்கும் கொடூர காட்சி இடம் பெற்றுள்ளது. இந்த தலைதுண்டிப்பு ஈராக்கின் கலாகைதீன் மாகாணத்தில் நடைபெற்றிருக்கலாம் என கருதப்படுகிறது.

ஏனெனில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் பிடியில் இருந்த திக்ரிக் நகரை மீட்க இராணுவம் கடுமையாக போரிட்டது, அப்போது பிடிபட்ட இராணுவ வீரர்களே தற்போது தலைதுண்டித்து கொல்லப்பட்டிருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகிறது.

## உலகச் செய்திகள்




பிரேஸில் ஜனாதிபதிக்கு எதிராக ஒருமில்லியன் மக்கள் வீதியில் இறங்கி கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட போது....

# இன்று சூரிய கிரகணம்



பூமியில் ஒன்று அல்லது இரண்டு வருடத்திற்கு ஒரு தடவை முழுமையான சூரிய கிரகணம் ஏற்படுவது வழமையாகும். ஐரோப்பாவில் இத்தகைய கிரகணம் கவனிக்கப்படுவது அபூர்வமாகவுள்ளது. இந்நிலையில் நாளை வெள்ளிக்கிழமை ஐரோப்பாவெங்கும் முழுமையான சூரிய கிரகணம் கவனிக்கப்படவுள்ளது. மேற்படி சூரிய கிரகணத்தை பிரித்தானியா மற்றும் வட ஐரோப்பாவிலுள்ள ஸ்கான்டினேவியா பகுதிகளில் கவனிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. இதற்குப்பின் மத்திய ஐரோப்பாவில் 2081 ஆம் ஆண்டும் பிரித்தானியாவில் 2090 ஆம் ஆண்டும் முழுமையான சூரிய கிரகணம் தோன்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிலிண்டர் லொறி விபத்து தீப்பற்றி எரிந்தன குடிசைகள்

## ஆந்திராவில் சம்பவம்

இந்தியாவின் ஆந்திர மாநில கர்னூல் மாவட்ட, தேசிய நெடுஞ்சாலை எண் 44இல் எனுகமேரி பகுதியில் சிலிண்டர் ஏற்றிச் சென்ற லொறி தீ பிடித்தது. இதனால், லொறியில் இருந்த சிலிண்டர்கள் வெடித்துச் சிதறியதால் அப்பகுதியில் பெரும் விபத்து ஏற்பட்டது.

அனந்தபூர் மாவட்டத்தில் வாடியம்பேட் ஹைசபி எரிவாயு நிரப்பு மையத்தில் இருந்து 400 சிலிண்டர்களில் எரிவாயுவை நிரப்பிக் கொண்டு நந்தியாகோ கூர் பகுதிக்கு லொரி புறப்பட்டது.

தேசிய நெடுஞ்சாலை எண் 44இல், எனுகமேரி பகுதியில் லொரிவந்து கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக தீ பிடித்தது. இதனை கவனித்த சாரதியும் நடத்துநரும் லொறியில் இருந்து குதித்துத்தப்பினர்.

ஆனால், லொறியில் இருந்த சிலிண்டர்கள் வெடித்துச் சிதறி அங்கிங்கு தூக்கி வீசப்பட்டன. இதனால், எனுகமேரி பகுதியில் இருந்த மக்கள் தங்கள் வீடுகளை விட்டு பாதுகாப்பான இடங்களைத் தேடி ஓடினர். சில குடிசை வீடுகளிலும் தீ பற்றிக் கொண்டது.

தேசிய நெடுஞ்சாலையில் இருபுறமும் பல கிலோமீற்றர் தூரத்துக்கு வாகனங்கள் ஆங்காங்கே நிறுத்தப்பட்டுள்ளன.

# அல்சபாப் இயக்கத்தலைவர் தாக்குதலில் உயிரிழப்பு



சோமாலியாவில் நடாத்தப்பட்ட வானூர்தி தாக்குதலில் தீவிரவாத அல் சபாப் இயக்க தலைவர் அடான் கரார் கொல்லப்பட்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது இந்த சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது

நைரோபியில் 2013 ஆண்டில் அடான் கரார் மேற்கொண்ட தாக்குதலில் 67 பேர் வரை கொல்லப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது அன்று முதல் அமெரிக்கா உட்பட்ட நாடுகளால் கரார் இலக்கு வைக்கப்பட்டார்.

இந்த அளவு விளம்பரத்திற்கு

1000/= ரூபா மட்டுமே

# தென்கொரியா– அமெரிக்கா கூட்டு இராணுவ பயிற்சி

## வடகொரியா கடும் எதிர்ப்பு


(சியோல்)

வடகொரியாவின் கடும் எதிர்ப்பையும் மீறி தென்கொரியா-அமெரிக்கா இணைந்து மிகப்பெரிய இராணுவ போர் பயிற்சியில் ஈடுபட போவதாக அறிவித்துள்ளன.

நீரிலும், நிலத்திலும் நடக்கவிருக்கும் இந்த பயிற்சிகள் வரும் மார்ச் 28இல் தொடங்கி ஏப்ரல் 1ஆம் திகதி வரை நடைபெறும். இருநாடுகளும் சேர்ந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இப்பயிற்சியில் அமெரிக்க கடற்படையை சேர்ந்த 1000 வீரர்களும் தென்கொரியாவை சேர்ந்த 300 வீரர்களும் பங்கு பெற இருக்கிறார்கள்.

கொரியா பிரிவினைக்கு பிறகு தென் மற்றும் வடகொரியா நாடுகளுக்கு இடையே தொடர்ந்து பதற்றமான சூழ்நிலை நிலவுகிறது. வடகொரியாவின் பலத்த எதிர்ப்பையும் மீறி ஆண்டுதோறும் தென்கொரிய, அமெரிக்க இராணுவம் இந்த பயிற்சிகளை நடத்தி வருகின்றன. சென்ற ஆண்டு இந்த பயிற்சிகள் 4 வாரங்கள் நடந்தன என்பது குறிப்பிடத்தக்கது.



இப்போது நடைபெற போகும் இராணுவ பயிற்சியால் கொரிய தீபகற்பத்தில் பதற்றம் அதிகரித்துள்ளது.

# 1000கிலோ மீற்றர் செல்லும் கார் டுபாயில் கண்டுபிடிப்பு



டுபாய் நாட்டிலுள்ள ஆண்கள் தொழில்நுட்பக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் ஒரு லீற்றர் பெற்றோலில் ஆயிரம் கிலோ மீற்றர் தூரம் வரை ஓடக்கூடிய அதிநவீன காரை கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் வெற்றி கண்டுள்ளனர்.

Eco Dubai 1 என பெயரிடப்பட்டுள்ள இந்த காரின் மொத்த எடை வெறும் 25 கிலோ மட்டுமே.

இரண்டு மீற்றர் நீளம், அரை மீற்றர் அகலம், அரை மீற்றர் உயரத்தில் இந்த நவீன காரை வடிவமைத்துள்ளனர்.

பெற்றோல் நீண்ட நாட்களுக்கு நிலைத்து கிடைக்கப் போவதில்லை. எனவே, சுற்றுச்சூழலுக்கு மாசு விளைவிக்காத நவீன போக்குவரத்துக்கு இத்தகைய கண்டுபிடிப்புகள் மிகவும் அவசியமானது என இதன் தலைமை வடிவமைப்பாளராகிய மாணவர் அஹ்மத் கமிஸ் அல் சுவைதி குறிப்பிட்டார். கோலாலம்பூரில் வரும ஜுலை மாதம் நடைபெறும் அரியவகை கண்டுபிடிப்புகளுக்கான கண்காட்சியில் இந்த நவீன காரின் சோதனை ஓட்டம் நடைபெறவுள்ளது.

# வலி.கிழக்கு மீள்குடியமர்வு; மக்களின் பக்கம் எங்கள் பணி

## ஐங்கரன் களத்தரிசிப்பு



அச்சுவேலி வளலாய் ஜே/284 கிராமசேவையாளர் பிரிவில் உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்த 350 ஏக்கர் பரப்பளவு காணியினை இராணுவத்தினர் விடுவித்த நிலையில் அம்மக்களுடைய தேவைகள் தொடர்பாக ஆராயும் முகமாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்புரைக்கமைய வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வலிகாமம் கிழக்கு பிரதேச அமைபாளருமான ஐங்கரன் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

நேற்று அங்கு நேரடியாக விஜயம் செய்த வலி.கிழக்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர், அப்பிரதேசத்தில் மீளக்குடியமர இருக்கின்ற மக்களுடைய தேவைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது போக்குவரத்து வசதி, தற்காலிக வீட்டுத்திட்டம், நிரந்தர வீட்டுத்திட்டம், மின்சாரம், வீதி புனரமைத்தல் தொடர்பான கோரிக்கைகளை முன்வைத்திருந்தார்கள். அவர்களால் முன்வைத்திருந்த கோரிக்கைகளை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு சென்று அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்.

மீளக்குடியமர்ந்த மக்களை சந்திப்பது மட்டும் அல்லாது தற்பொழுது ஆட்சியில் இருக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், எமது தலைவர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சராக இருந்த பொழுது அச்சுவேலி, இடைக்காடு, அக்கரை கிராம மக்களை மீள் குடியமர்த்தி அவர்களிற்கான தற்காலிக வீட்டுத்திட்டம், நிரந்தரவீட்டுத் திட்டம், மின்சாரம், பொதுக் கிணறு புனரமைத்தல் என்பவற்றை செய்ததுடன் அச்சுவேலி மேற்கு, செல்வநாயகபுரத்திற்கும் மின்சார வசதிகளினை செய்திருக்கின்றோம். ஆகவே ஆட்சியில் இருப்பது மக்களுடைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கேயொழிய அவர்களை மேலும் துன்பத்திற்கு கொண்டு செல்வதற்கு அல்ல என தெரிவித்தார்.

வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர்களான கே.மலர்விழி, ஆர்.இராஜேஸ்குமார், ஆர்.தங்கேஸ்வரன்,பி.கவிநாயகி ஈழமகள் ஜனநாயகக் கட்சியின் வலிகாமம் கிழக்கு பிரதேச நிர்வாக உப செயலாளர் மாணிககம் சந்திரசேகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### இது அநாகரியச்செயல்...

கிணைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.வி. குகேந்திரன் (ஜெகன்) தெரிவித்துள்ளார்.

தரம் ஒன்று தொடக்கம் பதினொன்று வரையான சுமார் 464 மாணவர்கள் கல்விகற்கும் இப்பாடசாலையில் நஞ்சு கலந்த குடிநீரை மாணவர்கள் பருகியதனால் 27 மாணவர்கள் பாதிக்கப்பட்டு அவசர சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுள் ஒருசிலர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக பாடசாலை ஆசிரியரொருவர் தெரிவித்துள்ளார்.

இப்பாடசாலையில் வலிகாமம் பகுதி குடிநீர் பிரச்சினைகள் காரணமாக நாளாந்தம் வேறு இடங்களிலிருந்து குடிநீர் கொண்டு வரப்பட்டு பாடசாலை நீர்த்தாங்கியில் நிரப்பப்பட்டு பாடசாலை தேவைகளுக்காக சில மாதங்களாக பயன்படுத்தப்பட்டு வருவது வழக்கம். ஆனால் நேற்றுக் காலை உடற்பயிற்சிகளை வழக்கம் போல மேற்கொண்ட மாணவர்கள் தமது தாகத்தை போக்கிக் கொள்ள குடிநீரை பருகிய சில நிமிடங்களில் திடீரென மயக்க முற்று வீழ்ந்துள்ளனர். தொடர்ச்சியாக பல மாணவர்கள் மயக்க முற்று வீழ்ந்தமையால் இது தொடர்பாக சுன்னாகம் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. பொலிஸாரது சோதனையின் பயனாக தண்ணீர்த் தாங்கியிலிருந்து விவசாயத்துக்கு பயன்படுத்தப்படும் நஞ்சுப் போத்தல் கண்டெடுக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட மாணவர்களை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெகன் நேரில் சென்று பார்வையிட்டதுடன், பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் ஆறுதல்களையும் தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களது இயல்பு நிலைகளை திட்டமிட்ட வகையில் சீர்குலைக்கும் செயற்பாடுகளை செய்தவர்களை விரைவாக கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு பொலிஸாருடன் கல்விச்சமூகம் மற்றும் பொதுமக்கள் அனைவரும் இணைந்து செயற்படவேண்டும். இந்த செயற்பாடுகளுக்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாமும் எமது பூரணமான ஒத்துழைப்புக்களை தருவதற்கு தயாராக உள்ளோம் எனவும் தெரிவித்துள்ளார்.

### யாழ். இந்து..

தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் சடலம் மரண விசாரணையின் பின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (இ)

### நாசவேலை..

விரும்பிகள், பழைய மாணவர்கள், அய லவர்கள் எனப் பலரும் பாடசாலையில் கூடியதுடன் நீரைப் பருகிய மாணவர்களும் வாகனங்களில் வைத்தியசாலைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள்.

தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் மாணவர்கள் மூவரும் ஒரு பொதுமகனும் என நால்வரும், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் 24 பேருமாக மொத்தம் 28 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இவர்களுடைய நிலைமை தற்போது சீரானதாகக் காணப்படுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. சுன்னாகம் பொலிஸாருக்கு அதிபர் கொடுத்த தகவலின் அடிப்படையில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்கள்.

(66,இ,25)

# முல்லை மினித்தேர்தல் தடை நீக்கக் கோரிக்கை

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று ஆகிய இரண்டு பிரதேச சபைகளுக்கான தேர்தலுக்கு விதிக்கப்பட்டுள்ள இடைக்காலத் தடையை நீக்குமாறு உச்ச நீதிமன்றத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேச சபைகளுக்கான தேர்தலை நிறுத்தக் கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த வாதம் அரசியல் கட்சிகளின் சார்பில் முன்வைக்கப்பட்டுள்ளது. இதன்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகம் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.நிசாம் காரியப்பர் முன்னிலையாகி குறித்த இரு சபைகளுக்குமான தேர்தலை நடத்துவதற்கு விதிக்கப்பட்டுள்ள இடைக்காலத் தடை நீக்கப்பட வேண்டும் எனவும் முற்றாக இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் எனவும் வாதாடினார்.

அதேவேளை சட்ட மா அதிபர் திணைக்களத்தின் சார்பில் அரச தரப்பு சிரேஷ்ட சட்டத்தரணி நேற்று மன்றுக்கு முன்னிலையாக முடியவில்லை என அறிவித்து அவகாசம் கோரப்பட்டதற்கிணங்க இந்த வழக்கு விசாரணை ஏப்ரல் மாதம் முதலாம் திகதிக்கு ஒத்திவைக்கப்படுவதாக நீதிபதிகள் அறிவித்தனர்.

குறித்த இடைக்காலத் தடையை நீக்கி, வழக்கை தள்ளுபடி செய்வதா அல்லது வழக்கு விசாரணைகளை தொடர்வதா என்பது குறித்து அன்றைய தினம் தீர்மானிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி என்பவற்றின் சார்பிலும் சட்டத்தரணிகள் முன்னிலையாகியிருந்தனர்.

# அரச உடமைகளை மீட்க விசேட செயலணி

முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படும் அரச உடமைகளை மீள பொறுப்பேற்பதற்காக, விசேட ஜனாதிபதி செயலணியொன்றை நிறுவுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போது. அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன இந்த விடயத்தைக் கூறினார்.

நாட்டிற்கு வெளியே கடத்தப்படுகின்ற பணத்தை மீண்டும் முழுமையாக பொறுப்பேற்பதற்காக, விசேட ஜனாதிபதி செயலணியை நிறுவுவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக, அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

துபாய் தேசிய வங்கியில் இதுபோன்ற மூன்று கணக்குகள் பேணப்பட்டு வருகின்றமை குறித்து தகவல்கள் திரட்டப்பட்டுள்ளதாவும் அமைச்சரவைப் பேச்சாளர் சுட்டிக்காட்டினார்.

முக்கிய குடும்பமொன்றுடன் தொடர்புடைய சிலராலும், அவர்களுடன் தொடர்புடைய சில நாடாளுமன்ற உறுப்பினர்களாலும் சுமார் 2 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகை அந்தக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ளதாக ராஜித சேனாரத்ன குறிப்பிட்டார்.

குறிப்பிட்ட சில குடும்ப உறுப்பினர்கள் சிலரால் அந்தக்கணக்குகளில் இருந்து ஒரு தொகைப் பணம் மீளப் பெறப்பட்டு, வேறு இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் இந்த விடயம் தொடர்பில் ஆராய்வதற்காக அமெரிக்க மற்றும் இந்திய விசேட நிறுவனங்களின் ஒத்துழைப்பு பெறப்பட்டுள்ளதாக, அமைச்சரவைப் பேச்சாளர் கூறினார்.

இலங்கையின் வெளிநாட்டு கையிருப்பை விடவும் அதிக தொகையான 10 பில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட தொகை முன்னைய அரசாங்கத்திலிருந்த உறுப்பினர்களால் வெளிநாடுகளில் வைப்பிலிடப்பட்டுள்ளதாகவும் அந்தப் பணத்தை மீள நாட்டிற்கு கொண்டுவருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்.

### தமிழில்..

குடியரசு அரசியலமைப்புச் சட்டம் 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31 ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது.

அன்று தொடக்கம் கடந்த 2010 ஆம் ஆண்டு வரை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தேசிய கீதம் தமிழிலேயே பாடப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

### விபத்தில்...

படுகாயமடைந்திருந்த துவிச்சக்கரவண்டியை செலுத்திவந்தவரே இவ்வாறு மரணமடைந்துள்ளார் என்று தெரிவித்த கிளிநொச்சி பொலிஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருவதாகவும் தெரிவித்தார்.







ஏழாலை பாடசாலையில் நேற்று நடந்த விபரீதச்செயலால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதையும், பொலிஸார் விசாரணை நடாத்துவதையும் காணலாம்.

# பாடசாலை முன்பாக போராட்டம் பூநகரிக் கோட்டத்தில் நேற்று



(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பூநகரி கோட்டம் வேரவில் இந்து மகா வித்தியாலய பெற்றோர்களும் மாணவர்களும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யக் கோரி நேற்றுக் காலை கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

நேற்றுக் காலை எட்டு மணி தொடக்கம் பிற்பகல் வரை கற்றல் செயற்பாடுகளை இடைநிறுத்தி மாணவர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

கடந்த ஒரு வருடங்களாக பாடசாலையில் மிக மோசமான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது. இது தொடர்பில் வலயம் மற்றும் மாகாண மட்ட கல்வி அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்தும் இது வரைக்கும் இதனை நிவர்த்தி செய்ய எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பின்தங்கிய பிரதேச பிள்ளைகளின் கல்விச் செயற்பாட்டில் இது மோசமான பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. எனவேதான் வேறு வழியின்றி அனைவரினதும் கவனத்தை ஈர்க்கும் வகையில் இந்த போராட்டத்தில் கலந்துகொண்ட பெற்றோர்கள் தெரிவித்தனர்

பூநகரி வேரவில் இந்து கல்லூரியில் தொடர்சியாக கணிதம், வரலாறு, வர்த்தகம், சுகாதாரம் போன்ற முக்கிய பாடங்களுடன் மேலும் சில பாடங்களுக்கு ஆசியர் பற்றாக்குறை நிலவி வருகிறது எனக் கூறியே மாணவர்களாலும் பெற்றோர்களாலும் கவனயீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டது. போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் தங்களின் ஆசிரியர் பற்றாக் குறை நிவர்த்தி செய்யுமாறு கோரிக்கையினை கல்வி அதிகாரி கள் கவனத்தில் எடுத்து நிவர்த்தி செய்ய வேண்டும் என கோசம் எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுப்பட்டிருந்தனர்.

போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் நகரத்துக்கு ஒரு நீதி கிராமத்துக்கு ஒரு நீதியா? எங்களுக்கு கல்வி கற்பிக்க முன் வர மாட்டீர்களா? ஏழை எங்களின் சொத்து கல்வி யே,தாரமும் குருவும் தலை விதிப்படி எங்கள் கல்வியில் ஏன் இப்படி சதி? என எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்தனர். (29)

# குடும்பஸ்தர் மரணம் 'ரேபிஸ்' தொற்று காரணம்

நாயின் நகக் கீறலுக்குள்ளான இளம் குடும்பஸ்தர் ஒருவர் நான்கு மாதங்களின் பின்னர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் வீதியால் சென்ற நாயைப் பிடிக்க முற்பட்ட வேளையில் அது தனது காலால் கீறி விட்டுத் விட்டு தப்பிச்சென்றுள்ளது. இதனை கவனிக்காமல் விட்ட குறிப்பிட்ட நபர் நோய்வாய்ப்பட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து குறிப்பிட்ட நபர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்புக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளார்.

அங்கு கொண்டுசென்ற போதிலும் தனியார் வைத்தியசாலை பாதிக்கப்பட்டவரை ஏற்க மறுத்த நிலையில் மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பும் வழியில் நேற்று அவர் உயிரிழந்துள்ளார். ஏழாலை வடக்கைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான மகாலிங்கம் கமல்ராஜ் (வயது 46) என்பரே உயிரிழந்தவராவர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சடலம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் பிரேத பரிசோதனையைத் தொடர்ந்து, உடனடியாக இறுதிக்கிரியைகளை மேற்கொள்ளும்படி கூறி சடலம் பொதி செய்யப்பட்ட நிலையில் உறவினர்களிடம் வழங்கப்பட்டது.

# விபத்தில் சிக்கி பகீரதி காயம்

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டு பிணையினில் விடுவிக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் கடற்படை தலைவி என குற்றஞ்சாட்டப்பட்ட முருகேசு பகீரதி நேற்று முன்தினம் இரவு கொலை முயற்சியொன்றிலிருந்து காயங்களுடன் உயிர் தப்பியுள்ளார்.

பிரான்ஸ் நோக்கிச் செல்லவிருந்த பகீரதியையும் அவரது எட்டு வயது மகளும் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தனர். பின்னர் அவர்கள் கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டு மூன்று மாதங்கள் விசாரணை செய்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டருந்தது.

இந்நிலையில் முல்லைதீவு கண்டாவளையில் தனது குடும்பத்தவர்களுடன் தங்கியிருந்த பகீரதி அருகாகவுள்ள கடைக்கு நேற்றிரவு சென்றுள்ளார். அவ்வேளையில் அடையாளம் தெரியாத மோட்டார் சைக்கிளில் சென்றிருந்த இருவர் அவரை மோட்டார் சைக்கிளால் மோதி தள்ளியுள்ளனர். மோதியவர்கள் தப்பித்து சென்றிருந்ததால் அவர்களை அடையாளம் காணவில்லை என அவர் தெரிவிக்கின்றார். தூக்கி வீசப்பட்ட அவர் அபாயக்குரல் எழுப்ப அயலவர்கள் மீட்டெடுத்து வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

# பொலிஸாருக்கு விசேட பயிற்சி ஸ்கொட்லாந்து தொடர்ந்தும் வழங்கும்

## ஒப்பந்தம் புதுப்பிக்கவும் ஏற்பாடு

ஸ்கொட்லாந்து இலங்கை பொலிஸாருக்கு தொடர்ந்தும் விசேட பயிற்சிகளை வழங்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை பொலிஸாருக்கு பயிற்சி வழங்குவது தொடர்பில் ஸ்கொட்லாந்துக்கு கடும் எதிர்ப்பு கடந்த காலங்களில் தெரிவிக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. இலங்கையின் மனித உரிமை நிலைமைகளே இதற்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

2007ஆம் ஆண்டு முதல் இலங்கைக் பொலிஸாருக்கு ஸ்கொட்லாந்து பயிற்சி வழங்கி வருகின்றது.

பயிற்சி வழங்குதல் தொடர்பிலான உடன்படிக்கை எதிர் வரும் 31ஆம் திகதியுடன் பூர்த்தியாகின்றது. எனினும் இலங்கை தேசிய பொலிஸ் அக்கடமியுடன் இணைந்து பயிற்சிகளை வழங்க உள்ளதாக ஸ்கொட்லாந்து அறிவித்துள்ளது.

பொலிஸின் கைதிகள் சந்தேக நபர்களை சித்திரவதை செய்வதாகவும், தடுப்புக் காவலில் தடுத்து வைக்கப்பட்ட கைதிகள் கொல்லப்படுவதாகவும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. தொழிற்சங்கத் தலைவர்கள் திட்டமிட்ட வகையில் காவல்துறையினரால் அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இலங்கை பொலிஸாரிற்கு பயிற்சிகளை வழங்குவது குறித்த சர்ச்சைக்குரிய நடவடிக்கையை தொடர்வதற்கு ஸ்கொட்லாந்து பொலிஸார் தீர்மானித்துள்ள அதேவேளை இதற்கு கடும் எதிர்ப்பு உருவாகியுள்ளது.

இலங்கை பொலிஸாருக்கு ஸ்கொட்லாந் பொலிஸார் 2007 முதல் பயிற்சிகளை வழங்கி வருகின்றனர். எனினும் இதற்கான ஒப்பந்தம் இம்மாதம் 31ஆம்திகதியுடன் முடிவடையவுள்ள நிலையிலேயே அதனை புதுப்பிப்பது என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஸ்கொட்லாந்திற்காக சர்வதேச மன்னிப்புச்சபையின் இயக்குநரும் இது குறித்து கண்டனம் வெளியிட்டுள்ளார். மேலும் அங்குள்ள புலம்பெயர்ந்த தமிழர்களும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

# முறை தவறிய போக்கு ஆணைக்குழுவில் முறையீடு

கொழும்பு புறக்கோட்டே மேயர் ஜனக ரணவகவிற்கு எதிராக நேற்று இலஞ்ச ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் க்ட்சியின் கோட்டே மாநகர சபையின் உறுப்பினர் சந்திம நயனஜித் உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்களே இந்த முறைப்பாட்டை செய்துள்ளனர். மாநகர சபையின் கட்டளைச் சட்டம் மற்றும் நிதி விதிமுறைகளை மீறி நட்சத்திர வர்த்தக தொகுதியை கோட்டே மேயர் அமைத்து வருவவதாக முறைப்பாட்டில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# யாழ். நகரில் எல்.பி. பினான்ஸ்



(யாழ்ப்பாணம்)

எல் பி. பினான்ஸ் பி.எல்.சி. நிறுவனத்தின் 99ஆவது கிளை யாழ். ஆஸ்பத்திரி வீதியிலும் 100ஆவது கிளை யாழ். ஸ்ரான்லி வீதியிலும் நேற்று காலை 10.00 மணிக்கு நிர்வாக இயக்குநர் சுமித் ஆதிஹெட்டி தலைமையில் மிகவும் கோலகலமாக ஆரம்பிக்கப்பட்டன.

இலங்கையின் பினான்ஸ் நிறுவனங்களில் மூன்றாவது இடத்தில் இந்நிறுவனம் காணப்படுவதாகவும், ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊழியர்கள் செயற்படுவதாகவும் முற்றிலும் மக்களின் தேவையறிந்து புதிய திட்டங்களையும் மக்களின் ஆலோசனைகளையும் பெற்று திறம்பட இயங்குவதாகவும் இந்நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் தெரிவித்தார். (105)

# யாழில் ரிசாட் பதியுதீன் பாடசாலை கட்டடத்தை திறந்தார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஒஸ்மானியா கல்லூரியில் புதிதாக கட்டப்பட்ட கட்டட தொகுதியினை வணிக மற்றும் வர்த்தக அமைச்சர் ரிசாட் பதியுதீன் நேற்று வியாழக் கிழமை திறந்து வைத்தார்.

நேற்று வியாழக்கிழமை மாலை புதிய கட்டடத்திற்கான நினைவுக்கல்லினை திரை நீக்கம் செய்யும் நடைபெற்ற இந்த நிகழ்வில், வடமாகாண க்ல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சர் த.குருகுலராஜா ஆகியோர் கலந்து, கடந்த 2014 ஆம் ஆண்டு, புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு விருதுகளை வழங்கி வைத்தனர்.

கடந்த 2012 ஆம் ஆண்டு. முன்னாள் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சநதிரசிறியினால் குறித்த கட்டடத்திற்கான நிதி வட மாகாண கல்வி அமைச்சின் ஊடாக ஒதுக்கீடு செய்யப்பட்டு. நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (25)

# காணி விடுவிப்பு; தொடரும் ஏற்பாடுகள்

(கொழும்பு)

வடக்கில் இராணுவத்தால் பெற்றுக்கொள்ளப்பட்டு, அரசாங்கம் பயன்படுத்தாத காணிகள் மக்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்படுவதாக மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் இந்துமத

விவகார அமைச்சர் டி. எம். சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தற்போதைய அரசாங்கம் இது தொடர்பில் அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாடியுள்ளது அத்தோடு வடமாகாணத்தின மீள் குடியேற்றம் மற்றும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதாகவும் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் இந்துமத விவகார அமைச்சர் டி. எம். சுவாமிநாதன் தெரிவித்தார்.

# அப்பம் 10 ரூபா

(கொழும்பு)

முதல் அமுலுக்கு வரும் அத்தியாவசிய உணவு வகைகளின் நிலையான நியாய விலைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி பால் தேனீர் 25 ரூபாவாகவும், தேனீர் 10 ரூபாவாகவும் அப்பம் 10 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படும் என்று நுகர்வோர் அதிகார சபை அறிவித்துள்ளது.

ஏற்கனவே கடந்த பெப்ரவரி மாதத்தில் சமையல் எரிவாயுவின் விலை 300 ரூபாவால் குறைக்கப்பட்டது. இதனையடுத்தே நியாய விலைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 மார்ச் 20ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.